தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௫-௮௬	மலர்
௩௧	மன்மத ஆடி—புரட்டாசி 1955 சூலை—செப்டம்பர்.	௪—௬

நேருவின் வருகை.

இந்தியப் பெருநிலப் பரப்பின் மாண்பும் மதிப்பும் மிக்க முதலமைச்சர், திருமிகு, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் வருகை இத்திங்களின் (ஆகஸ்டு) தொடக்கத்தில் தண்டமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் மிக்க உவகையினைச் செய்தது. பல ஆண்டுகட்குப் பிறகு பண்டைப் பெருமையும், புதுப் பெருமையும் ஒருங்கே அமையப் பெற்ற பைந்தமிழ் நாட்டைப் பண்டிதர் கண்டார் களிகூர்ந்தார். "ஆரவாரமும் அமைதியின்மையும் தாண்டவமாடும் வடக்கேயிருந்து வரும் எனக்குத் தமிழ்நாடு மனஅமைதியை அளிக்கின்ற"தெனக் கூறினர். இவ்வாறு பைந்தமிழ்நாட்டு மக்கள் உள்ள உவகையும், பண்டிதரின் உள்ள உவகையும் சேர்ந்து யாண்டும் சிறப்புற விளக்கமுற்றுத் தோன்றியது. கதிரவன் காயும் கடும் வெயிலையும் கருதாது கணக்கிலா மக்கள் அவரைக் காணவும் அவருரை கேட்கவும் சலிப்பின்றி அமர்ந்திருந்தனர். ஜவஹரும் மக்களின் உள்ள உவகையால் உந்தப்பெற்று சலிப்பின்றிச் சுற்றி வந்தார்.

உவகை கொண்ட மக்கள் தோரண வாயிலும், புதுப்பூம்பந்தரும் அமைத்தும், அப் பந்தரில் காய்க்குலைக் கமுகும், வாழையும் வகைபடக் கட்டியும் செய்த மாண்புகள் தமிழ் நாடெங்கணும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. பொன்னும், பொருளும், புகழும் அமைந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். இந்திய நாடு அயலவனுக்கு ஆட்பட்டிருப்பதா? என்று எல்லாவற்றாலும் பெறும் இன்பத்தை இளம் வயதிலேயே துறந்து, அரசியல் துறவியாகி, சிறைப் பறவையாகி வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தவர்.

இந்திய நாட்டின் உரிமைக்கும், புகழுக்கும் எடுத்துக்காட்டாக நின்று உலகில் இறவாப் புகழ் படைத்த காந்தியடிகளின் உற்ற துணைவராகவும், தொண்டராகவும் வாழ்வில் பலகாலமிருந்து பண் பட்ட இயல்பினை உடையவர். இத்தகைய செயற்கருஞ் செயல்களை நினைந்தே தமிழ்நாடு மிகச் சிறந்த வரவேற்பை அளித்தது. இந்திய நாடு உலகில் எல்லாத் துறையிலும் சிறந்த ஒரு நாடாகத் திகழவேண்டு மென்பதற்காக அரசியலார் வகுத்துள்ள இரண்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மேன்மையைக் கூறினர். அவர் வருகை வேறுபல பயன்களை விளைக்காமற் போனாலும், நாட்டு மக் கட்கு நல்ல தொண்டுகள் செய்யவேண்டுமென்று எண்ணுகின்ற வர்கட்கும், பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்கட்கும் நல்ல எடுத்துக்காட்டாகும். நாட்டு மக்கட்குத் தொண்டாற்றுவதை விட மேன்மை தரவல்லது பிறிதொன்றுமில்லை யென்பதனைத் தண்டமிழ் நாட்டு மக்கள் மனத்திற் கொள்வார்களாக.

"பெற்ற தாயும் பிறந்தபொன் நாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே" — பாரதியார்

மொழிவழி மாநில அமைப்புக் குழுவின் அறிக்கை.

இந்தியப் பெருநிலப் பரப்பு மொழியைக் கருதியும் வேறுசில இன்றியமையாத பண்பாடு, நாகரிகம், முதலிய கருதியும் தனி நாடுகளாக அமைக்க நியமித்திருந்த ஆய்வுரைக் குழுவினர் தங் களின் ஆய்வுரைகளை அரசியலாரிடம் ஒப்படைத்து விட்டனர். ஆய்வுரையினை பொதுமக்களும் மக்கள் தலைவர்களும் ஆய்ந்து கூறும் முடிபுகளையும் சேர்த்துப் பின்னர் அரசியலார் ஒரு முடி வுக்கு வருவர். இந்தியநாடு ஒரு நாடாகப் பேசப்பட்டாலும் இதன்கண் பல மொழிகளையும், பலவகையான பண்பாடுகளையும், நாகரிகங்களையும் கொண்ட பல இன மக்கள் வாழ்கின்றனர். என்பதுதான் உண்மையாகும். இவ்வாறான இந்திய நாட்டை ஆங் கில அரசியலார் தங்கள் ஆட்சியின் நலத்தைக் கருதி, வேறொன் றையும் கருதாமல் ஒருநாடாக்கி ஆண்டனர். அவர்கள் அகன்று இந்திய நாடும் உரிமையடைந்தது என்றால் இந்நாட்டில் வாழ

கின்ற ஒவ்வொரு சிறு நாட்டினரும் மொழியினரும் உரிமையடைந் தனரென்பதே பொருளாகும். உரிமையடைந்த மக்கள் தங்கள் தங் கள் மொழியையும், நாகரிகத்தையும், பண்பாடுகளையும் காத்துக் கொள்ளவும், வளர்க்கவும் அவாவுதல் இயற்கையேயாகும். இவ் வாறு தனித் தனியே பலவேறு இயல்புகள் கொண்ட மொழி வழி நாடுகள் முன்னேறுவதே இந்திய நாடு முன்னேறுவது என்று கூறலாம். இதனை விடுத்துக் கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட இனங்கள் அத்திறமில்லாத இனமக்களைச் சுரண்டுவதும், ஆதிக்கம் செலுத்துவதும் உரிமையடைந்த நாட்டின் இயல்புக்கு மாறானவையாகும். இந்த வகையில் எல்லோரும் இந்தியர் என்ற பசப்பு மொழி பேசுவது கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கு வதற்கொப்பாகும். இக்குறைகளெல்லாம் மொழி வழி மண்டிலங் கள் அமைந்தால் போய்விடும் என்று எண்ணியே "இந்திய நாடு, "பாரத நாடு" என்றெல்லாம் பேசிய பெருமக்களும், மொழிவழி யாக மாநிலங்கள் அமைய வேண்டுமென வற்புறுத்தி வந்துள் ளனர்.

இந்திய அரசியலார் இதனை ஒத்துக்கொள்ளத் தயங்கினராயி னும், ஆந்திரர் பிரிவினைக்குப் பிறகும் மற்றைய மொழியினரையும் மொழி வழியாகப் பிரித்துவிடவேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர். இதற்கென ஒரு குழுவமைத்து அக்குழுவினர் கருத்தை அரசியலா ருக்கு அறிவிக்க ஆணையிட்டனர். அவர்களும் தங்கள் கடமையை நிறைவேற்றியுள்ளனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வெள் ளையர் கையில் சிக்கி அவர் ஆட்சி வசதிக்கேற்ப துண்டு செய்யப் பட்ட இந்தியப் பெருநிலப் பரப்பு தன்னுடைய பண்டைய வரம் பிழந்து தாறுமாறாக இருத்தல் இயற்கையேயாகும். தனக்கென மொழியும் வரலாறும்; பண்டைப் பெருமையுமுடைய நாடுகள் இந்த நீண்டகால வேற்றவராட்சியால் மிகவும் சிதறுண்டுள்ளன. தமிழ் நாடும் அதனுள் ஒன்றாகும். தமிழ் நாட்டிற்கென காலவரம்பறியா மொழியும் வரலாறும் உண்டு. தமிழ் நாட்டு அரசியலைத் தொடங்கிய வர் இன்னாரென்று தெரியாது. ஆயினும் தமிழ் நாட்டில் முதன் முதல் அரசைத் தொடங்கியவர் சேர, சோழ, பாண்டியராவர். இந்த மூவரும் தமிழ் நாட்டின் முடியுடை வேந்தரெனப் பண்டைய புலவர் களால் பாராட்டப்பெறுகின்றனர். இவர்களைப்பற்றிய குறிப்புக்கள் வெளிநாட்டிலுள்ள பண்டைய வரலாற்றிலும் இலக்கியத்திலும் காணப்படுகின்றன. இவ்வாறு நெடுங்காலமாகச் சீரும் சிறப்புமுற விளங்கிய தமிழகத்திற்கு, நீண்டகால வெள்ளையராட்சியால் நேர்ந்த

இழப்புக்கள் பலவாகும். அவற்றுள் இன்று திருத்தவும் முடியாத நிலையில் உள்ளது தமிழ் மாநிலத்தின் எல்லையேயாகும். தண்டமிழ் நாட்டின் எல்லை இவ்வாறு அயலவரால் பறிக்கப்படும் என்பது தெரிந்துதானே என்னவோ பண்டைய புலவர்கள், தேசீயக் கவிஞர் பாரதியவர்கள், புரட்சிக்கவிஞர், திரு. பாரதிதாசனவர்கள் ஆகிய எல்லோரும் எல்லையை வரையறுத்துப் பாடியுள்ளனர்.

" வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் " என்று தொல்காப்பியரும், (பனம்பாரனுர்)

நீலத்திரைக் கடலோரத்திலே நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

என்று பாரதியாரும்,

"கோடுயர் வேங்கடக் குன்றமுதல்—நல்ல
குமரிமட்டும் தமிழர் கோலங்கண்டே
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே "

என்று பாரதிதாசனும் பாடியுள்ளனர். கிழக்கும் மேற்கும் கடல்களே எல்லையாகும். மலையாள நாடு இப்போதிருந்தாலும் பண்டைய புலவர்கள் கூறிய நெறியிலேயே இவர்களும் பாடியுள்ளனர். வேங்கடத்தை அகப் பாட்டெல்லை என்பர் நச்சினர்க்கினியர். எல்லையைக் காட்டுவதாகிய மலை நம்முடைய தமிழ் நாட்டிலிருந்தும் எல்லையாக இருக்கலாம். அல்லது ஆந்திர நாட்டிலிருந்தும் எல்லையாக இருக்கலாம். இங்குக் கூறப்பட்ட வேங்கட மலை தமிழ் நாட்டுக்குரியதாகி எல்லையாகவுள்ளதென்பது நச்சினர்க்கினியர் குறிப்பால் புலனுகிறது.

இன்றைய நிலையில் வேங்கடமலை ஆந்திரருக்கு ஆகியிருக்கின்ற தன்மையைக் காணுகின்ருேம். வடக்கில் ஆந்திரராலும், மேற்கில் மலையாள நாட்டினராலும் தமிழ்நாடு சிதைக்கப்பட்டு விட்டது. மொழிவழி மாநில அமைப்புக் குழுவினர் ஆய்வுரைப்படிப் பண்டைய தமிழக எல்லை அப்படியே கிடைத்துவிடுமென எதிர்பார்த்தற்கில்லை. ஆனுல் இப்போதுள்ள நிலைமைப்படி எந்தமொழி பேசுகின்றவர் நிறைந்து காணப்படுகின்ருர்களோ அவர்களைக் கொண்டு அந்தந்த நாட்டில் சேர்ப்பதுதான் முறையாகும். இவ்வாறு பார்க்கும்போது தமிழ் நாட்டோடு சேரவேண்டிய சில பகுதி

களைச் சேர்க்கவேண்டுமென குழுவினர் ஆய்வுரை காணுதது தமிழ ருக்கு ஏமாற்றத்தையளிக்கின்றது. திருவாங்கூர் கொச்சி மாநிலத் திலுள்ள தமிழ் வட்டாரங்களான தேவிகுளம், பீர்மேடு, சிற்றூர் தாலுக்காக்கள் தமிழ் நாட்டுடன் சேரவேண்டும். இங்கே பெரும் பகுதியான மக்கள் தமிழர்களாவர். அப்பகுதிகளில் நிகழ்ந்த தேர் தல்களில் தமிழர்களே வெற்றிபெற்றுள்ளனர். நிலைமை இவ்வா றிருக்க ஆய்வுக்குழுவினர் அங்கு வாழும் மக்களை நாடோடிகளெனக் கூறி அப்பகுதிகளை மலையாள நாட்டுடன் சேர்க்கவேண்டுமெனக் கூறுவது சிறிதும் பொருந்தாது. இதனை வண்மையாகத் தமிழர் யாவரும் எதிர்க்கவேண்டும்.

இப்போது தமிழ் நாட்டில் சேர்க்கவேண்டுமென ஆய்வுரைக் குழுவினர் கூறியுள்ள பகுதிகள் தமிழரால் வரவேற்கக்கூடியனவே யாகும். ஐந்து தாலுக்காக்கள் அதாவது அகத்தீசுவரம், தொவ் வாலை, வில்லவன்கோடு, செங்கோட்டை, கல்குளம் ஆயவை தமிழ் நாட்டுடன் சேரும். இவையெல்லாம் சேருவதில் தமிழருக்கு மிக்க மகிழ்ச்சியேயாகும். ஆனுல் அகத்தீசுவரம் தாலுக்காவில் உள்ள கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் சேருவதில் தமிழர் இரட்டிப்பாக மகிழக் கடமைப்பட்டவராவர். தமிழ் நாட்டுக்கென எல்லையாக எவைகளை பண்டைப் புலவர்களும் சான்ருேரும் கூறினுர்களோ, அவைகளுள் ஒன்றேனும் இன்று எல்லையாக இல்லை; அவற்றை யெல்லாம் இக்காலத் தமிழர் வேற்றவருக்கு இடனுக விட்டுக் கொடுத்துவிட்டனர் என்ற பழிச்சொல் இல்லாமற்போகும். இது பற்றித் தமிழ் நாட்டினர் மேற்குறிப்பிட்ட குழுவினருக்குச் சிறப்பாக நன்றி பாராட்டும் கடப்பாடுடையர்.

இறுதியாக அறிக்கைபற்றிக் குறையாகக் குறிப்பிடவேண்டியது தமிழ் நாட்டுக்குத் தமிழ் நாடு என்ற பெயர் இல்லாமல் "சென்னை இராஜ்ஜியம்" (Madras State) என்று அழைப்பதும் பெயரிடுவதும் சிறிதும் பொருந்தாததாகும். இதனை உடனடியாக மாற்றித் "தமிழ்நாடு" என்ற பெயரால் அரசினரும், ஏனையோரும் அழைக்க வேண்டுமென வற்புறுத்துகிருேம். மொழி வழியாகப் பிரிவினையும் நாட்டின் பெயரும் அமையும்போது தமிழ் நாட்டைத் தமிழ்நாடு என்றழையாமல் வேறு பெயரால் அழைப்பது சிறிதும் பொருந்தாது. இதனுல் எதிர்காலத்தில் பல கெடுதிகள் நிகழலாம். நாடுகள் எல் லாம் மொழி வழியாக அமைந்துள்ளன. ஆனுல் தமிழ் நாடு மட்

102-ம் பக்கம் பார்க்க.

மலர்.

ந. செகதீசன்.

உளமெனும் பூங்கா தனிலுறு மலர்காள்!
அளவில் நலஞ்சால் அன்புடை நீவீர்
நிலவி யெந்தன் நெஞ்சினி லிலாமல்
உலர்ந்து வீழ்ந்தமை ஏனோ உரைப்பீர்!
நெஞ்ச வீணையில் நீவி ரிசைத்த
செஞ்சொற் பண்ணால் சிந்தை மகிழ்ந்தே
இன்சிற கடித்து விண்ணில் பறந்து
பன்னலம் பெற்று நன்முறை வாழ்ந்தேன்
பொன்னிதழ் குவிந்து புல்லென வீழ
நன்மண மலரே! நைந்து வீழ்ந்தேன்
காலத் தேவன் கோலக் கடிதம்
சால வுணருந் திறனு மிழந்தே
இருசிற கொடிந்தே இடர்க்கடல் வீழப்
பருவரல் என்னைப் பற்றிய தந்தோ!
மொட்டாய் என்னுள் முகிழ்த்த காலை
மட்டார் மலரே! மாத்தமிழ் மொழியின்
தேக்கொழி பாவால் உன்னிதழ் திறக்க
ஏக்கஞ் சான்ற என்னிலை யறியீர்!
'ஆ!வென் மலர்காள் அருந்துயர் யானுறச்
சோ'வென வாடை சுழன்று கவற்றல்
அறியீர் நீவீர்! அடிவா னப்பால்

101-ம் பக்க தொடர்ச்சி.

டும் அவ்வாறு அமையவில்லை. ஆதலின் இது எல்லா மொழியினருக்கும் பொதுவானதாகும் என்று விரிவுரை செய்யவும் தொடங்குவர். இதனல் நாட்டின் ஒற்றுமைக்கு இடையூறு ஏற்படும். ஆதலின் சென்னை மண்டில (தமிழ் மண்டில) அரசியலார் தமிழ்நாடு என்ற பெயரால் அழைக்க ஆவனசெய்ய வேண்டுகிறோம். இத் துறையில் தமிழ் நாட்டில் வாழும் எல்லா மக்களும் தங்களாலியன்ற முறையில் வற்புறுத்தக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

நறிய தென்றல் நல்குமுன் பண்ணைக்
கொடிய வாடை கொதித்து மருட்ட
வடுவறு மலர்காள் வாடி வீழ்ந்தீர்!
நல்லிதழ் திறந்து மெல்லென நகைத்து
சொல்லரும் வண்ணம் சோர்வறக் காட்டி
மலர்ந்தீர் நீவீர்! மடவன் யானே
புல்லிய மலரின் போலி யுருவில்
என்வய மிழ்ந்து உன்னலந் துறந்தேன்!
குற்றக் கொள்கலம் குப்பை நிறைவிடம்
வெற்றுடல் சுமக்கும் வீணன் ஆயினன்!
மகக்காண் தாயின் மிகவுளம் விரும்பி
தகவறு மெந்தன் தாழ்வினைப் போக்க
இன்று மெங்கோ மறைவினில் மலர்காள்!
நன்றுந் தேன்முகை நகையுற விரித்து
குன்று தொளிந்தீர்! குருட்டு விழியேன்
காட்சி காணேன்! வீழ்ச்சி யுற்றேன்
மாட்சி சாலும் மறுவறு மலர்காள்
மீட்சி வேண்டினன்! மேவி யெந்தன்
பாலையா முளத்தை வாலிய நீவீர்!
சோலையாய் மாற்றிச் சுடரொளி வீசிட
வேண்டினன் இளையன்! விழைதகு—மலரே
மாண்புடன் மலர்ந்து மடவிருள் களைக!
தேன்சொரி மலர்காள் திரட்டி நும்மை
வான்புகழ் கலையின் கவினு ரரசி
தானுள முவப்பத் தக்கதோ ராரம்
ஆக்கிச் சூட்ட ஏக்கங் கொண்டேன்
போக்கலும் பண்பாற் பொங்கொளி வீசி
என்றும் நீவீர் கலங்கல் காண்பேன்
என்னுயிர் மலர்காள் இன்னுங் கேண்மின்
இறவாப் பொன்னுர் தனிலுமைத் தொடுத்து
மறவா நிலையில் மாலை யாக்கிடின்
எளிமையு மின்பமு மெண்மையு முண்மையும்
களிப்புட னென்னுள் களிநடம் மிடுமே
என்னுட் கிடக்கும் இழிதகு சருகைப்
போக்குதல் அறியேன் புரைமிகு மவற்றை
உன்வளந் தனக்கு உரமாய்ச் செய்திட
எண்ணினன், ஆயின் இயலுங் கொல்லோ!

கன்றிய அவையுன கட்டெழில் குலேத்துத்
தன்னே வளர்த்து என்னே அழித்திட
ஆகுங் கொல்லோ! யாவது மறியேன்
நோகும் என்னுளம் சாகா வண்ணம்
அன்புறு மலர்காள் நல்லிதழ் திறப்பீர்!
பொன்னய் நும்மைப் போற்றிடு மென்னேக்
காத்தல் வேண்டி ஏத்துவன் நும்மடி!
நலிவினே விலக்கும் நயனில் வாடை
வலியுடன் என்னே வாடினும். வஞ்சர்
செஞ்சொற் காட்டிச் சிறுமை யாற்றினும்
துஞ்சிடே னினியே! தோலேன் யானே!
அன்புறு இதழில் அருளாம் நறவை
ஓங்கிய சிறப்பின் தாங்கி யொளிரும்!
பாங்குறு மலர்காள்! ஏங்கிடு மிளேயன்
இன்பங் கண்டிட இன்னிதழ் திறப்பீர்!
சாவெனே வந்து சாரா முன்னர்
தாவி லுங்கள் எண்ணர் காட்சி
கண்டிடில் தன்னுள் மண்டிடும் அமைதி!
தண்ணிதழ் இன்னே திறப்பீர் மலர்காள்!
இதழாம் கதவின் அருகினில் நின்று
இதயம் நொந்து இசைத்திடும் பண்ணே
கேட்டி ரிலேயோ! கேழ்புறு மலர்காள்!
கண்ணே! மலரே " கவின ரருளே!
தேனர் பொருளே திறப்பீர் புதவம்!
வான ரின்பம் வறியன் பெறுவன்!
உன்னெளி தானே என்கட் கொளியாம்!
கதிரவ னிலேயேல் கரைசால் மதியம்
காட்டுமோ ஒளியைக் காட்டா தன்ருே!
அதன லன்பே வேண்டினன் மலர்க!
எதனற் தயக்கம்! இயம்புக வெமக்கே!
தோமில் பண்பிற் றுலங்கிடு நீவீர்!
ஏமுற என்னுள் என்றும் பூத்துக்
குலுங்கிடின் வாழ்வேன்! சாகேன் என்றும்
கோதறு சிறப்பின் தாதுறு மலர்காள்
ஏதமில் வாழ்வு எளியே னெய்திட
மலர்க என்னுள் மாய்க்க இன்னல்!
அன்பே மலர்க! அருளே மலர்க!
இன்பமே மலர்க! எழிலே மலர்க!
நண்பே! நயப்பே! நன்ருய் மலர்க!
நலமெலாம் பெற்றிட நானுமைப்
பலவாய் வேண்டினன்! மலர்க விரைந்தே!

சென்ற இதழின் தொடர்ச்சி.

கரந்தைக் கோவை.

[வித்துவான் ச. பாலசுந்தரம்.]

7. இடந்தலைப்பாடு.

தந்ததெய்வம் தருமெனச் சேறல்

34 கேட்குந் தொறும்விடை செப்பிக் கரந்தையின் சீர்த்தியினை
மீட்குந் தமிழ்ப்புல வோரென முன்தந்த மெல்லியலை
வாட்கண் அருட்கனி வாயமு தாகிய வஞ்சியினை
வேட்குந் தொறுந்தெய்வம் சேர்க்குநெஞ் சேவிரை மேம்பொழிற்கே.

முந்துறக் காண்டல்

35 அரந்தைக் கெடுத்தறி வாக்கும் தமிழனை ஆட்சிசெயும்
கரந்தைத் தமிழ்ச்சங்கப் பாவலர் கற்பனைக் காவியமோர்
நரந்தைக் கமழ்குழல் நங்கை உருக்கொடு நண்ணிவரும்
விருந்தைத் தவமின்று நங்கண்கள் காண விளக்கியதே.

முயங்கல்

36 கற்றவர் சேர்கரந் தைப்புகழ்ப் பாவலர் காதலிக்கும்
சொற்றிறம் தேர்ந்ததொல் காப்பியர் நூலுள் துரிசகன்ற
குற்றுக ரத்துரை நச்சர் வகுத்திடுங் கொள்கையினைப்
பற்றற நோக்கின் இலக்கியம் யானுமிப் பாவையுமே.

புகழ்தல்

37 மின்னும் மதியுமவ் வான்புகுந் தேறின மெல்லியலின்
மன்னும் இடைஒளி, மாமுகம் பார்த்தம் மருட்சியினால்,
துன்னுங் கலைமகிழ்ந் தேத்துங் கரந்தையில் தோகையைக் கண்
டின்னும் வெளிப்படல் இல்லையம் மாமயில் ஏங்குறுமே.

---

35 அரந்தை—அறியாமைக் குற்றம். தமிழன்னை – இடைக்குறை.
நரந்தை—நரந்தமலர்.

36 குற்றுகரம் வருமொழி உயிரேற இடங்கொடுத்துத் தானும் கெடாது ஒருங்குநின்றிசைக்குமென்பார் நச்சினார்க்கினியர் – தொல் – எழு – 105 சூத்திர உரை.
பற்றற நோக்குதல்—அவர் கருத்துப்படி நோக்குதல்.

37 இடையையும் முகத்தையும் பார்த்த மருட்சியினால் நாணி மின்னும் மதியும் வான் ஏறின என்க.
தோகை—தலைவி.

ஆயத்துய்த்தல்

38 நிதியற்ற ஏழைக்குப் பொற்குவை முன்வந்து நேர்ந்ததெனத்
துதியுற்ற செந்தமிழ்த் தூய்மையைக் காக்கின்ற தொல் கரந்தைப்
பதியுற்று வந்தெனக் கின்பம் பயந்தபொற் பாவையன்னுய்!
மதியற்ற மீன்களிற் றேடுறும் ஆயம் மருவுகவே.

8. பாங்கற் கூட்டம்.

தலைவன் பாங்கனைச் சார்தல்.

39 தூரியத் தாலெழு தாதநல் லோவியத் தூமொழியை
ஆரியத் தாற்பெரும் ஆங்கிலத் தாலழி யாததமிழ்
வீரியத் தாலிசை மேவுங் கரந்தையில் வேண்டினையேல்
மாரியொத் தானெரு நண்பனு ளான்றரும் வாழியவே!

பாங்கன் உற்றது வினுதல்.

40 எல்லா நலங்களும் இன்றமிழ்க் கல்வியும் ஏய்ந்தகவி
வல்லார் புகழ்கரந் தைப்பயில் பண்டைய மாணவ! ஒன்
றில்லார் எனமுகம் வாளிழந் துள்ளமின் றேங்கவுமுன்
மல்லார் புயம்மெலி வாகவும் என்கொலோ வந்ததுவே?

தலைவன் உற்ற துரைத்தல்.

41 பொழியும் முகில்போற் கவிமாரி பெய்யும் புகழ்க்கரந்தை
மொழியும் அறநூல் அறிவுமுன் தெவ்வை முனையகத்தே
அழியும் படிவெலும் ஆண்மையும் இன்றோர் அணங்கினிரு
விழியம் பிடைஎதி ராற்றகில் லாதுரம் வீழ்ந்தனவே.

கற்றறி பாங்கன் கழறல்,

42 செல்வன் **உமாமகேசன்**னுளம் தோன்றித் திகழ்கரந்தைச்
சொல்வன் புலவர்கல்லூரியிற் கற்ற துணிவுடைய
செல்வன் எனத்தெளிந் தேனெரு மங்கையின் சேல்விழிசேர்
வில்வன்மை யாலழிந் தாயுரன் என்னே விளம்புவதே?

இதுவுமது.

கன்னடம் மாமலை யாளந் தெலுங்கைக் கருவுயிர்த்தாள்
இன்னிடம் ஆய கரந்தையில் மேவி இருங்கலை நூல்
தன்னிட மாகமுன் கற்றநண் பா! ஒரு தையலினேர்
பின்னிடுங் கூந்தலிற் சிக்கினை என்பதென் பேதைமையே!

---

38 மதியற்ற மீன்கள் – தலைவியில்லாத ஆயக்கூட்டத்திற்கு உவமை.
39 தூரியம்—வண்ண எழுதுகோல். 40 நலங்களும் கல்வியும் ஏய்ந்த மாணவ! என்க.

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

43 உண்டாற் றெரியுமவ் வானமிழ் தின்பம் உடற்பிணியைக்
கொண்டாற் றெரியுமத் துன்பக் கொடுமைநற் கோதையினைக்
கண்டார் உரைத்திலர் கட்டுரை யாவும் கனிதமிழ்நூல்
தண்டார், கரந்தையைச் சாரார் உரையொக்குஞ் சால்பினவே.

கிழவோற் பழித்தல்.

44 வாடாத செந்தமிழ் வாழுங் கரந்தையின் வண்டமிழ்நூல்
பீடாகக் கற்றவுன் பேரறி வாகும் பெருங்களிறவ்
ஆடாத தோகையின் கண்வலைப் பட்டாங் கழுங்குமெனின்
ஈடாக யாருளர் நின்றனக் கிவ்வுல கேழினுமே?

இதுவுமது.

வாடும் இடைக்கொடி மாதர் வளைத்திட வண்டமிழோர்
கூடுங் கரந்தையிற் கொண்டநின் வன்மை குலைந்ததெனின்
நீடுங் கடலையோர் மின்மினி காயும், நெருப்பினையும்
பாடும் அளிக்குலம் பற்றிப் பறக்குமிப் பாரிடத்தே.

கிழவோன் வேட்கை தாங்கற் கருமைசாற்றல்.

45. வெள்ளம் பெருக்கெடுத் தாலெனக் காதல் வெதும்பவுமுன்
உள்ளம் சுடுமுரை என்னுயிர் தீய்க்கவும் ஒண்டொடியின்
கள்ளம் மிகுவிழி போதங் கவரவும் காண்பவர்கள்
எள்ளும் படிப்பிறந் தேன்கரந் தைத்தலம் என்வினையே

பாங்கன் தன்மனத் தழுங்கல்.

46 சீரார் கரந்தையின் செந்தமிழ்க் கற்றஇச் செம்மலுளம்
காரார் குழற்கரு வண்டார் விழிக்கயல் கஞ்சமுகம்
வாரார் தனமிரு கோங்கமு மாமெனும் வாணுதலைத்
தாரார் இவரென வாடும் இனிஎன்ன சாற்றுவதே?

---

43 தமிழ்நூற் பயிற்சியும் கரந்தையின் சார்புமில்லாதவர் உரையைப் போல பொருளற்ற கட்டுரை யுரைத்தனை என்றான் தலைவன்.
44 கண்வலை – நைந்து கிழிந்த வலை என்ற பொருளும் காண்க. வலையிலே களிறுபட்டதென்க.
மின்மினி காயும்—நீரை வற்றச் செய்யும். மலரென்று நெருப்பினைப்பற்றும்
45 மெய், மனம், அறிவு – மூன்றும் வேட்கையால் நிலைமாறிய மையை உணர்த்தினன்.
46 கஞ்சமுகம்—தாமரைமுகம்.

தலைவனோ டழுங்கல்.

47 செருமா மகள்புகழ்ச் சேயே செழுந்தமிழ்ச் சீர்கரந்தை
வருமா னிடத்துளம் வைத்தனை யாயினி வான்வெளியிற்
கருமா முகிற்செங் கதிர்மறைத் தாலதைக் கையினைக்கொண்
டொருமா னிடர்போய் விலக்கலுண் டோவிவ் வுலகினிலே.

எவ்விடத் தெவ்வியற்றென்றல்

48 அரும்புகழ் மிக்கவி ராதா கிருட்டின ஆண்டகையால்
வரும்புகழ் சங்கக் கரந்தையில் வந்துன் மனங்கவர்ந்த
சுரும்புளர் கோதையின் நல்லியல்யாதவர் தோழமையால்
விரும்பிடம் யாதுசெந் தாமரை தானோ? விளம்புகவே.

அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்

49 வாவியும் சோலையும் ஒன்று யிணைந்து மலர்ந்ததெனக்
காவியும் முல்லையும் கஞ்சமும் காந்தளும் கண்ணுறுமோர்
ஓவிய மாயொளிர் மாமயி லாமியல், ஒண்டமிழ்சேர்
காவியம் பூக்குங் கரந்தைத் தலம்வளர் காவிடமே.

இதுவுமது

மழையாம் குழல்மொழி யாழாம் சுழல்விழி மாட்சிமைசேர்
உழையாம் எழில்திகழ் கொம்பருக் கோரிடை உண்டென் பதும்
பிழையாம் கழையிரு தோளாம் இயல், இடம் பூம்பொழிலாம்
தழையா வளர்கரந் தைத்தலத் தென்னுயிர் தாங்கினர்க்கே.

பாங்கன் தலைவனைத் தேற்றல்

50 நாளுந் தமிழ்ப்பணி நாட்டா ரியற்ற நலங்கமழ்சீர்
ஆளும் கரந்தை அணிபொழில் வாய்ச்சென் றகக்களிற்றைத்
தோளும் குழலும் துணையாகக் கட்டிய தோகைகண்டு
மீளும் வரையுமுன் வாட்டந் தவிர்க்கதிர் வேலவனே.

---

47 செருமாமகள் – போர்த்தெய்வம்.

49 மழை–மேகம் உழை-மான் கழை—மூங்கில் தழையா — தழைத்து வளரும்

50 நாட்டார்–நாட்டுமக்கள், (நாவலர். ந. மு. வே. அவர்களுமாம்) மயில் களிற்றைக் குழலால் கட்டியதென்பதும் காண்க

பாங்கன் குறிவழிச் சேறல்

51 மோனைக் கவியரசாயவர் தொண்டு முகிழ்கரந்தைக்
கோனைப் பெரும்படை தாக்கினும் ஊக்கம் குலைவுபடா
தானைத் தனத்தால் வணக்கிய மானத் தடங்குடைந்து
தேனைத் தரும்பொழில் வாய்ப்பிளை யாடுமோ தேர்ந்து
நின்றே?

பாங்கன் இறைவியைக் காண்டல்

52 மாணிக்க மென்கொம்பர் போலும் ஒசிந்து மரகதஞ்சேர்
ஆணிப்பொ ணற்செய்தோ ராவியும் கூட்டி அழகொழுகப்
பேணித்த மிழ்வளர்ப் பார்கரந் தைப்பொழில் பெண்ணுரு
காணப்பு றப்படு வாளவ ளேயிது காண்பொழிலே. [வாய்

இகழ்ந்ததற் கிரங்கல்

53 களிவளர் நற்றமிழ் காணுங் கரந்தைக் கடிபொழில்வாய்
அளிவளர் கூந்தல் அணிமயி லாயவர் அங்கமெலாம்
ஒளியுரு வாமெனின் கண்டுரு காருள ரோவறியா(து)
இளிவரல் கூறினன் என்போல வன்பினர் எங்குளரே?

தலைவனை வியத்தல்

54 வருமா ணவர்க்கருள் செய்யும் கரந்தை வனத்திடையே
ஒருமான் விழிக்குமவ் வுந்திச் சுழிக்கும் ஒளிவடஞ்சேர்
இருமா தனக்களிற் றிற்கும் எதிர்ப்பிழைத் தேகினுமவ்
வரிமா னிடைத்தப்பி வந்ததெவ் வாறந்த ஆண்டகையே!

---

51 கவியரசர்—கவிபாடவல்லார் (கரந்தைக் கவியரசு ஆர். வி. அவர்களுமாம்)
கோன், குழைவுபடாதான், பொருளால் (கையூட்டு) மயங்கினுன் என்பது நயம்

52 அழகொழுகப் பெண்ணுருவாய்ப் புறப்படுவாள் அவளே தலைவி இதுவே இடம் என்க

53 களி—ஆயுந்தொறும் வரும் சுவை. காண்டல்—ஆராய்தல்
அன்பினர்-நண்பர் வன்பினர்-வன்னெஞ்சர்

54 மான்போன்ற விழி (விலங்கின் கொடும்பார்வை) சுழிபோன்ற உந்தி (ஆற்றிடைச் சுழி) களிற்றின் கொம்புபோன்ற தனம் (மாதனக் களிறு—பெண்களை ஒப்ப வளைகரும் யானைகள்)
எதிர்பிழைத்தல்-எதிர்ப்பு இழைதது ஏகல்—போரிட்டு மீளுதல் (அரிமான்-சிங்கம்-வரிமான் புலி) அரிமாவின் வயிறொத்த இடுப்பு

தலைவியை வியத்தல்

55 தொன்மை அறிவரி தாந்தமிழ் சீர்த்திச் சுடர்கரந்தை
நன்மை அறிபெரும் நம்பியைச் சூழ்ந்து நலிபிணியை
இன்மை உறச்செயும் மாமருந் தாகும் இனியவனின்
வன்மை உளமலர் வாழும் திருவுமிவ் வாணுதலே.

தலைவன் தனக்குத் தலைவி நிலை கூறல்

56 முத்தும் பவழமும் நீலமும் சேர்ந்து முகிழ்த்தகொடி
தத்தும் கடல்வரு சங்கிரண் டார்ந்து தளர்ந்தசைந்து
தொத்தும் படிக்கொரு கொள்கொம்பு நோக்கலைத் தூய திசை
பத்தும் புகழ்வளர்ப் பார்கரந் தைப்புனம் பார்த்தனனே.

தலைவன் சேறல்

57 மழைநோக்கி நிற்குமோர் மாமயி லோமுன் மணந்தகன்ற
உழைநோக்கி நிற்குமோர் மான்பிணை யோவென் உரைநிலையாப்
பிழைநோக்கி நிற்குமோர் பெண்ணணங் கோதமிழ்ப் பேரணங்கின்
விழைநோக்கி நிற்பவர் வாழ்கரந் தைப்புனம் மேவுருவே.

தலைவியைக் காண்டல்

58 ஆகந்த ழைத்தென தாவி நிலைத்திட ஆரறிஞர்
நீ. கந்த சாமியின் தொண்டால் வளர்சங்கம் நேர்கரந்தைப்
பூகந்த ழைத்துயர் போகந் தருமெழிற் பூம்பொழில்வாய்
சோகந்த விர்த்திடும் தோகைவந் தென்முனர்த் தோன்றியதே

கலவியின் மகிழ்தல்

59 புலந்தொறும் வேறு புகுமின்பம் யாவும் பொருந்திமிக
நலந்தரு மாமிந்த நங்கையின் ஞாகமிந் நானிலத்தில்
வலந்தரும் வீடெனச் சாற்றுந் துறவிகள் வாயமுதைக்
கலந்தொரு நாளினும் கண்டதுண் டோவிக் கரந்தையிலே.

---

55 இவ்வாணுதல் மருந்தும் திருவுமாம் என்க

57 மழை-கருமேகம் உழை-மான் உரைநிலையாப்பிழை—பிரியே னென்றமை விழை—விழைவு (முதனிலைத் தொழிற் பெயர்)

8 ஆவிநிலைக்கப் பொழிலிடத்துத் தோகை என்முன் தோன்றிய தென்க

புகழ்தல்

60 எண்ணிற்கும் நற்றமிழ் சேரும் கரந்தை எழிலரசி
கண்ணிற்கும் வாய்க்கும் துடைக்கும் நடுங்கிக்
கடல்புகுந்தாழ்ந்
துண்ணிற்கும் சேலும் பவழமும் வாளையும், ஒண்டொடியின்
பண்ணிற்குந் தீங்குரல் கேட்டே பறந்ததப் பைங்கிளியே.

பாங்கியொடு வருகெனப் பகர்தல்

61 அயிரா துரைத்தறி யாமை தவிர்த்திடும் ஆசிரியப்
பயிரார் கரந்தையில் பைந்தமி ழாகிப் பழகியவென்
உயிரா கியவெழிற் பாவையன் னுயினி உன்னருகே
உயிரா கியநறும் பாங்கியும் பின்வர ஓங்குகவே

பாங்கிற் கூட்டல்

62 புதிதுண்ட செந்தமிழ் பூக்குங் கரந்தைப் பொழிலகத்தே
துதிகொண்ட பாங்கியர் சோகந் தவிர்க்கமுன் தோன்றியவர்
மதிகண்ட அல்லியின் வாண்முகம் பூக்கவும் மண்புதைந்த
நிதிகண்ட ஏழையின் நெஞ்சங் களிப்பவும் நேர்ந்துசெல்லே.

9. பாங்கி மதியுடன்பாடு.

(முன்னுற உணர்தல்)

ஐயமுற் றோர்தல் (நாற்றத்தாலாராய்தல்)

63 பண்ணுறும் பாவலர் சூடுங் கரந்தைப் பதியிடத்திற்
சுண்ணமும் சந்தனச் சாந்தும் புழுகும் துதைமலரும்
தண்ணறும் மான்மதச் சேறுமித் தையலைச் சார்ந்ததென
எண்ணுறும் என்மனம் இம்மணம் எவ்வா றியைந்ததுவே.

இதுவுமது (தோற்றத்தாலாராய்தல்)

(அ) கூடிய நற்புகழ் சேர்கரந் தைப்பதி கோகிலஞ்சேர்
பீடியற் சோலையிற் பெண்ணணங் காகுமிப் பேதையுடல்
வாடிய தோர்வணம் காட்டினும் தோளுமிவ் வாணுதலும்
நீடிய தோர்கவின் கூடுதற் கென்னே நிகழ்ந்ததுவே.

---

61 ஆசிரியராகிய பயிர்கள் நிறைந்த கரந்தை. தான் உயிராகவின் அருகே உயிர் என்றான்

62 'இன்' இரண்டும் உவமஉருபுகள்

இதுவுமது (பிறவகையாலாராய்தல்)

(ஆ) சேவிளங் கன்றெனத் துள்ளிநன் காடுமிச் சேயிழையாள்
பாவிடுஞ் சீர்கரந் தைத்தலஞ் சேர்ந்தே பயில்பவர்போல்
காவினிற் றாந்தனி யேபயின் றெம்மைக் கடிந்தொழுகி
மேவிய நல்லமிழ் தாகிய உண்டியும் வேண்டலளே.

ஒழுக்கத்தாலையந்தீர்தல்

64 நிலையாய தொண்டே நிகழ்த்திக் கரந்தையில் நின்றுவளர்
தலையாய சங்கத் தமிழ்போன்ற தண்மையைத்
தாங்கியொவ்வோர்
கலையாக நாளும் மதிமுற்ற வோங்குங் கவின் பிறையை
அலையாமற் காணுமோர் தெய்வமென் பார்வணங் காயிழையே

சுனை நயப் புரைத்தல்.

65 காசறு சீர்த்திக் கரந்தையைப் போலுநற் காரிகையாய்!
பூசுறு சாந்தும் புனைமல ரும்முடன் போக்கலின்றித்
தேசுறு வேர்வையும் செங்கணும் சேர்க்குமத் தீஞ்சுனையைப்
பேசுற வென்னுளம் வேட்டனன் எங்கதைப் பேசுகவே?

சுனை வியந்துரைத்தல்.

66 தாய்மொழிக் கேயுயிர் தந்தார் கரந்தையில் தையலுன்போல்
வாய்விளர்ப் பேறவும் வாள்விழி சேப்பவும் வார்குழலில்
ஆய்மலர்ச் சேர்ப்பவும் ஆற்றலுண் டேலவ் வருஞ்சுனையில்
தோய்வதற் கார்விரும் பாரிந்த நாட்டினிற் சொல்லுகவே?

தகையணங் குறுத்தல்.

67 விரியாத புன்மனத் தாலிகழ் வார்க்கும் விருப்புடனே
நெறியாக நற்றமிழ் சொல்லுங் கரந்தை நெடுவரைமேல்
கரியாக யானின்று காட்டினல் லாற்கவின் காட்சியினால்
தெரியாத வர்மலைத் தெய்வமென் றேயுனைச் செப்புவரே.

நடுங்க நாட்டம்.

68 நாட்டிற் கணிகலன் நாவல ரன்னவர் நல்லியல்பைப்
பாட்டிற் படைக்கின்ற பாவலர் வாழுமிப் பைங்கரந்தைக்
காட்டிற் றிரிகரி கண்டுளம் அஞ்சிக் கலங்கினன்முன்
கோட்டிற் குருதியும் கோபமு மாய்வருங் கொள்கைகண்டே.

---

64 கலைவளர்க்கும் மதிவாணரைத் தொழுதல் மரபாகலின் இவ்வாறு கூறினாள்

67 கரியாக நின்று காட்டுதல் — இவள் அணங்கல்லள் தலைவி எனத் தான் சான்றுடன் கூறுதல்

68 முன்பு அதனை இயல்பாகக் கண்டவளாதலின் திரிகரி என்றாள்.

தையல் தொழில்

வித்துவான். த. பொ. தண்டபாணி, B. A.

நாம் வாழும் இந்திய நிலப்பரப்பில் தையல் தொழில் மிகமிகப் பழமைவாய்ந்து விளங்குகிறது. முதற் சங்க காலத்துக்கு முந்தி நிலவியதாகக் கருதப்படும் தமிழர் நாகரிகச் சிறப்பில் இத்தையற் ரெழிலும் ஓர் உயரிய பீடமேற்று நிலவியிருந்த செய்தியும் நமக்குக் கிடைத்துளது.

பிற்பாடு, காலநிலை ஊழிதோறும் வேறுபடவே, தமிழ் இலக்கியங்கள் யாவும் நம் முன்னோர்களையும் அவர்கள் வதிந்த நாட்டையும் விட்டகல நேர்ந்தன. ஜெர்மனி, இங்கிலாந்து, சீனம், ஹாலந்து, சீயம், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, அரேபியா, கனடா முதலிய நாடுகளுக்கெல்லாம் நமது பண்டைய தமிழர் நாகரிகம் பரவியது. வாணிபத்துறை வாயிலாக இதற்கு ஆதாரங்கள் அக்காலத்தேஅறிவில் திகழ்ந்த பேராசிரியர்களான டாலிமி, கலைமான், அபுசையத், சுங்-கி, இபன்-பதூதா முதலியவர்கள் எழுதிய இந்திய வாணிப நூல்களை வாசித்தால் கிடைக்கும்.

அவ்வாறு நாகரிக உச்சியில் எவ்விதக் குறைவுமின்றி வாழ்ந்த தமிழர்களுக்குத் தையற்றொழில் ஏன் தெரிந்திருக்காது? பழமையின் சிறப்பைப் புதுமையில் பிணைத்தும் பின்னியும் பார்க்கும் தக்க மன வலிமை, தற்போது நம்மவர்களுள் பெரும்பாலார்க்கும் குறைந்து வருகிறது. அதனால் மேல் எழுந்தவாரியாக, முன்பின் நினைத்துப் பாராமல், தையல் தொழிற்கலையின் நுட்பமெல்லாம் மேனாட்டாரிடமிருந்தே கிடைத்திருக்கின்றன என்று கூறுங் கூட்டத்தினரும் நம்மிடை அதிகப்படுகின்றனர். இத்தகைய இழுக்கினை அகற்றவே இக்கட்டுரை வரைந்தேன்.

பண்டைய தமிழர்கள் மூன்று தொழிலில் நன்கு திறமைபெற்று அன்றிருந்த நிலவுலகெங்குஞ் சென்று பேரும், புகழும், பெருவாழ்வும் பெற்று விளங்கினார்கள். அத்தொழில்களாவன :— (1) வாணிபம் (2) கைத்தொழிற் கலை வளர்ச்சி (3) அறிவியல் வளர்ச்சி.

இரண்டாவதாகக் கூறிய கைத்தொழிற் கலை வளர்ச்சியின் கீழ் (1) நகை செய்தல் (2) தையல் தொழில் (3) சிற்பம் ஆயமூன்று

பிரிவுகளும் அடங்கியிருந்தன. முழு உடலேயும் மூடி வாழும் பழக்கம் ஆதியில் தென்னுட்டில் பெண்களிடத்தே தோன்றியிருக்க வேண்டும் என்று ஊகிக்கிறேன். பிறகு அப்பழக்கம் சீனுவுக்கும் ஈழ நாட்டுக்கும் சென்று, அங்கிருந்து பிற நாடுகளுக்கெல்லாம் பரவியிருக்கவேண்டும். எவ்வாருயினும் தமிழர்களிடமிருந்தே உடலே அல்லது உடலின் முக்கிய உறுப்புக்களே மூடி வாழும் பழக்கம் உலகெங்கும் பரவியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. தமிழர்களுடைய ஆடை வகையினேப்பற்றி பலவேறுவிதமாகவும் அடிக்கடியும் கூறுந் தமிழ் இலக்கிய நூல்களாவன :— பத்துப் பாட்டு, கலித்தொகை, குறுந்தொகை, புறநானூறு, சிலப்பதிகாரம் என்பனவும் பிறவும் என்க.

கடைச் சங்க காலத்தே, தோன்றிய நூல்களுள் பல இப்போது நமக்குக் கிடைத்திருப்பதால் அவற்றின் வாயிலாகத்தான் நமது பெருந் தமிழர்களான முன்னேர்கள் அணிந்த ஆடைகளின் விபரங்களே அறியமுடிகிறது. அவ்வாடைகளின் வகைகளேயும் மூன்ருக் கலாம். (1) அரசியல்உடை (2) பொதுமக்கள் உடை (3) நடிக உடை என்பன.

அரசியல் உடையில் வீர உடை (போருக்குரிய ஆடை) என்றும் அரசியல் பணி ஆடை என்றும் இரு திறங்கள் உண்டு. அவ்வாறு பார்க்கும்போது சிலப்பதிகாரத்தில் ஊர்காண் காதையில் 36 வகை ஆடையினே நமது தமிழர்கள் அணிந்திருந்ததாகக் கூறப் பட்டிருக்கிறது. அவற்றை வாசித்தால் எவ்வளவு சிறப்பில் "தையல் தொழில்" நிலவியிருக்க வேண்டுமென்பது தானுகவே தோன்றும்.

அரசியல் உடை.

- பொதுநலப் பணி ஆடை.
  - 1. கோசிகம் 2. வண்ணடை
  - 3. பீதகம் 4. கவற்றுமடி
  - 5. இரட்டு 6. நுண்துகில்
- போர்க்கள ஆடை.
  - 7. குருதி 8. கோபம்
  - 9. கரியல 10. கோங்கலர்
  - 11. பேடகம் 12. பாடகம்.

பொதுமக்கள் உடை.	நடிக உடை.
1. பச்சிலே	1. பரியட்டக் காசு
2. அரத்தம்	2. வேதங்கம்
3. சுண்ணம்	3. புங்கர் காழகம்
4. பஞ்சு	4. திருக்கு
5. வடகம்	5. தேவாங்கு
6. நூல் யாப்பு	6. பொன் எழுத்து
7. குறிஞ்சி	7. குச்சரி (தத்தி)
8. வண்ணடை	8. தேவகிரி
9. வேதங்கம்	9. வெண்பொத்தி
10. சில்லிகை	10. செம்பொத்தி
11. தூரியம்	11. பணிப்பொத்தி
12. பங்கம்	12. காத்தூலம்

இப்பெயர்களை எவ்வளவுக்கெவ்வளவு இடைவிடாது வாசிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் பொருள் தோன்றும். அப்போதும் புரியாவிட்டால் அகில இந்திய பயணம் செய்த நண்பர்களைக் கேட்டேனும் தெரிந்துகொள்ளலாம். அப்போதும் புரியவில்லையேல், வாசிப்பவர்களே நமது நாவலந்தீவின் நாலு எல்லைப்புறத்தும் செல்ல நேரிட்டால் ஆங்காங்கே பழந்தமிழர்கள் இப்போது எந்தவிதமான ஆடைகளை அணிந்திருக்கிறார்கள் என்பதை கண்கூடாகப் பார்க்கலாம். தமிழ்—ஆங்கில சொல் அகராதியில் இத்தகைய சொற்கள் பல விடுபட்டிருப்பது ஓர் பெருங்குறை.

இங்கும் ஒருவாறு அவற்றைத் தெரிந்துகொள்ளும்படி விவகரிக்கின்றேன். வாசிப்போர்களுக்கு வேறுவிதமாகப் பட்டால் அறிவித்துத் திருத்திக்கொள்ளலாம்.

(1) கோசிகம் — பீதகம் - இவ்விரண்டும் பஞ்சாபியரும் பார்சியரும் அணிவது.

(2) இரட்டு — இதனையே ஆங்கிலத்தில் Suit, Trouser, Pants என்பர்.

(3) வண்ணடை — மலபாரிலும், கொச்சி தேசத்தும் மன்னர்கள் அணிவது.

(4) கவற்றுமடி, துண்துகில்—நாடெங்கும் அரசியல் அமைச்சர்களும், அரசர்களும், இதர பணியாளரும் பொதுவாக அணிவது.

(5) குருதி — கோபம், கரிமல, கோங்கலர், பேடகம், பாடகம் இவைகளைப் பழந் தமிழர்கள் போர்க்கள ஆடையாக அணிந்தார்கள். இப்போதும் போர் வீரர்கள் அவ்வழியேதான் அணிகின்றனர். ஆனால் சிற்சில மாறுதல்களை இப்போது அமைத்துக்கொண்டனர். விவரம் பின்னால்.

II. பொதுமக்கள் உடை.

இத்தலைப்பில் ஆண் பெண் என்ற இரு பிரிவுகள் வருகின்றன. ஆண்களுக்கு (1) தூரியம் (2) வேதங்கம் (3) நூல்யாப்பு (4) வண்ணடை (5) குறிஞ்சி (6) வடகம் என்பனவும். பெண்களுக்கு (1) பச்சிலை (2) அரத்தம் (3) சுண்ணம் (4) பஞ்சு (5) சில்லிகை (6) பங்கம் என்பனவும் ஆடைகளாக இருந்துள.

மேற்குறித்த ஆடைகள் தத்தம் குலாசாரத்திற்கும் நில இயல்புக்கும் ஏற்ப வகுத்துக்கொண்டனர்.

III. நடிக உடை.

இவற்றில் கூறப்படும் பெயர்களுக்கோர் பொழிப்புரை வேண்டியதில்லை எனப்படுதலான் விடுத்தேன். அவற்றைப் படித்தாலே ஒருவாறு நமக்கு அவ்வாடைகள் என்ன என்ன விதமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

இனி மேலே கூறிய ஆடைகளை அணிந்து வாழ்ந்ததைக்கண்ட வேறு புலவர்களின் சொற்களைக் கவனிப்போம். அவர்களுள் கடைச் சங்கப் புலவர்களுக்கெல்லாம் தலைமைபெற்று விளங்கிய கடைச்சங்கத் தலைவருமான நக்கீரர் சொல்லைக் கேட்போமாக.

தமிழை வளர்த்த கடைச்சங்கமானது சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பு நிலவியது. அக்காலத்து வாழ்ந்த நக்கீரர் தம்க்கு முன்னிருந்த உலகத்தின் நாகரிகத்தைத் தழுவி வாழ்ந்த மக்களுள் ஒருவராதலின் அவருடைய சொற்களும் பழந்தமிழர்களுடைய நாகரிகத்தையேதான் எடுத்தியம்புகின்றன என்பது எம்மனோர் முடிபாகும்.

பண்டைக் காலத்தில், தற்காலத்தில் விரித்தாடும் விஞ்ஞான அறிவும் ஆராய்ச்சியும் போலல்லாது, மெய்ஞ்ஞான அறிவும், ஆராய்ச்சியுமே எவரஸ்ட் மலையைப் போன்று உயர்ந்தும் கங்கை நதியைப்போல் ஆழ்ந்தும் காவேரி நதியைப்போல் படர்ந்தும் ஓங்கின. அப்போது மக்கள் எல்லோரும் தத்தம் பொது வாழ்வில்

இறைநிலையினை சகச ஞானமாக்கிக்கொண்டிருந்தார்கள். ஆதலால் எதற்கும் கடவுளையே அவர்கள் விவகரித்துப் போயினர்.

நாகரிகத்தையும் நக்கீரப் பெருமானுர் திருமுருகக் கடவுள் மீது அமைத்துப் பாடிச் சென்ருர். முருகனை ஆண்டுள மக்கள் அனைவரும் வழிபட்டார்கள் என்பதற்கு இதுவே போதிய சான்ருகும்.

முருகன் அடியார்களாக வாழ்ந்த ஆண் பெண் இரு திறத்தார் களின் ஆடைச் சிறப்பினையும் முருகற்கு அம்மக்கள் அணிவித்து மகிழ்ந்த ஆடையின் சிறப்பினையும் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் ஆங்காங்கே கூறுகிருர். அவற்றையே பின்வருமாறு சுருக்கமாகக் கூற விரும்பி எழுதுகிறேன்.

இந்திரகோபம் என்ருேர் பூச்சி அன்றும் இருந்தது இன்றும் இருக்கிறது. அதன் வாய் தலை உடல் கால் எல்லாம் இரத்தம் போல் சிவந்திருக்கும். அப்பூச்சிகளின் சேமிப்பைக் கொண்டு அக் காலத்தில் ஆடை தயாரித்தார்கள். இப்போதும் நமது நாட்டில் மைசூரிலும், ஐரோப்பாவில் பாரிஸ் முதலிய நகரங்களிலும் அப் பூச்சியை வெகுவாக வளர்த்து அவற்றின் மூலம் செம்பட்டாடை களைத் தயாரிக்கின்றனர். அவைகள் சிவந்தே இருக்கும். சாயமே வேண்டியதில்லை. சாயமும் போகவே போகாது. அணிவதற்கு மிகமிக மிருதுவாக இருக்கும். மிக மெல்லிய நரம்புகளை உடைய அப்பூச்சிகளைக் கொன்று அவற்றிலிருந்து மிக மெல்லிய நூல்களை உண்டுபண்ணி தயாரித்த ஆடை ஆதலால் அணிவதற்கு மிகவும் பெருமை தரும். பெரும்பாலும் இத்தகைய ஆடையினை பெண்கள் தான் அணிந்தார்கள் என்று கூற இடமிருக்கிறது.

மேலே கூறிய கருத்துக்களுக்கெல்லாம் இடந்தரக்கூடிய "கோபத்தன்ன தோயாப் பூந்துகில்" — என்ற திருமுருகாற்றுப் படையில் வரும் ஓர் அடியினைக் காண்பீராக.

அக்காலத்தில் தையல் தொழிலாளர்கள் மிக மிக கண்ணிய வாழ்வில் திளைத்திருக்க வேண்டுமெனப்படுகிறது. அவர்களால் வரியமைந்த பந்தும் பொம்மையும் (பாவையும்) செய்யப்பட்டனவாம் நூலும் ஊசியும் வைத்திருந்த தையல் தொழிலாளர்கள் தங்கள் நாட்டிற்கு வேண்டிய வீரக் கொடிகளையே அதிகமாக தைத்துக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. தற்காலத்தில் விமானப்படையை அண்ணுந்து பார்த்து மகிழ்வதுபோல அக்காலத்தில் மக்கள் அவ்

வளவு உயரத்தில் பறந்த தங்கள் மன்னர்களின் வெற்றிக் கொடியினைக் கண்டு மகிழ்ந்தார்களாம். அக்கொடிகளைப் பார்த்தவர்கள் தையலாளர்களே. "சேண் உயர் நெடுங்கொடி" என்பது முருகாற்றுப்படையில் காணப்படும் ஓர் அடியின் பிற்பகுதி.

மன்னர்கள் தாங்கிய மகுடம் எத்தனையோ வகையில் வேலைப்பாட்டினை பெற்றிருந்ததாம். இதனால் தையல் தொழிலாளர்கள் மன்னர்மீது வைத்திருந்த பற்றும், மன்னர் குடிதழீ இக்கோலோச்சிய சிறப்பும் அறியக்கிடக்கிறது. அரசர்களின் தலைமுடி ஐந்து வகையான உறுப்புகளையும் நிரம்பிய வேலைப்பாட்டையும் உடையதாக இருந்தது. அவ்வளவு சிறப்பில் தையல் வேலை நடந்தது என்று தெரிகிறதல்லவா?

"ஐவேறு உருவின் செய்வினை முற்றிய முடி" என்பது திரு. மு. படை அடி 83-84.

"ஊரிலான் குணங்குறி ஒன்றுமிலான்" என்று பேசப்படினும் இறைவன் கருணையே காரணமாகக்கொண்டு ஆறு முகங்களையும் பன்னிரண்டு கரங்களையும் ஏற்று ஒரு "திருமுருகன்" என்ற பேரோடு இவ்வுலகில் ஆன்மாக்களாகிய நம்மை ஈடேற்றும் பொருட்டு வந்து தோன்றிக் கோயில் கொண்டுளன் என்பது தொன்றுதொட்டு இன்றளவும் நிலவி வரும் கொள்கையாகும். அவ்வாறே முருகனை அக்காலத்தில் ஆறிடங்களில் தனிச் சிறப்புடன் கோயில் கண்டு வழிபட்டனர். அவ்வாறு இடங் கட்குமே திருமுருகாற்றுப்படை பாடப்பட்டது. அந்த ஆறு இடங்களுள் "திருச்செந்தூர்" என்னுந்தலமும் ஒன்று. அதற்கு "சீர்அலைவாய்" என்ற காரணப்பெயரும் உண்டு.

அங்கே சென்று வழிபட்டபோது நக்கீரர் முருகனுக்குற்ற பன்னிரண்டு கரங்களின் தனித்தனி வேலையினையும் கவனிக்கலாயினர். ஓர் கரமானது மிக அழகிய ஆடைகளை அணிந்திருக்கும் தொடையின்மீது கிடப்பதையும் கண்டார்கள். "ஒரு கை நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின் மீமிசை அசைஇயது" (கலிங்கம்-ஆடை) என்று பாடிச் சென்றார்கள்.

மிக அழகிய ஆடையினை தொடையின்மீது அணிவித்து மகிழ்ந்தார்கள் என்றால் யார் அவற்றை செய்திருக்கவேண்டுமென்று நோக்குதல் மிகையாகாது. தையல் தொழிலாளர்கள் எவ்வளவு தெய்வப் பக்தியிலும் சிறந்தவர்களாக இருந்திருக்கவேண்டும் பாருங்கள்.

அதைப்போலவே திருப்போரூர் சந்நிதி முறையில் "வெள்ளைச் சோமன் உடுத்த வேணியனர்" என்ற அடியினைக் காண்கிறோம்.

இவற்றையெல்லாம் வாசிக்கும் நண்பர்களுக்கு தையல் தொழிலாளர்கள் செய்கின்ற வேலைக்கும் நெசவுத் தொழிலாளர்களுடைய வேலைக்கும் வித்தியாசமின்றி போகிறதே என்றுங் கருத இடமிருப்பதாகத் தோன்றலாம். நெசவுத் தொழில் சோமன் சேலை முதலிய வற்றை நெய்தல் ஒன்றே கூடும். அவற்றை அரைக்குத் தகுந்தவாறும் தொடைக்குத் தகுந்தவாறும் முடிக்குத் தகுந்தவாறும் இன்னன பிறவாக ஆக்குதற்கும் தையல் தொழிலாளர்களின் சேவை எவ்வளவு இன்றியமையாதனவாக இருந்திருக்கவேண்டும் என்பதையும் கவனிப்பார்கள். அத்துடன் தற்காலத்திலுங்கூட கைத்தறி வேலைப்பாட்டின் சிறப்பினல் எண்ணற்ற ஆடைகள் கிடைப்பினும் அவற்றை நமது உடலுக்குற்றவாறு கைமுதல் கால் வரை அங்கப் பொருத்தமாக ஆக்கித்தருவது யாவர்? தையல் தொழிலாளர்கள் அல்லவா? ஆம்.

மீண்டும் நக்கீரர் புகையினை தோற்றுவிக்கும் நிறமுடைய ஆடையினை தையல் தொழிலாளர்களின் பணியினுல் செப்பனிடப் பட்டு மக்கள் அணிந்து வாழ்ந்ததைக்கண்டு மிகவும் மனமுவந்து பாடுகிருர். புகைவேறு அவ்வாடை வேறு என ஆகாதவாறு ஆடைகள் அக்காலத்தில் இருந்தனவாம். இப்போதும் அத்தகைய கரியமேடும் ஒத்த கூந்தலாடைகளைக் காண்கிறோம் அல்லவா? கடந்த 2-வது உலக யுத்தத்தில் இத்தகைய ஆடைகளை அணிந்தும் பார்த்துவிட்டோம். நமது வீடுகளில் சில சமயங்களில் பெண்கள் கருநிற ஆடைகளை அணிகின்றனர்.

எனவே அக்கரிய ஆடைகளை ஒழுங்காக்கிக்கொடுத்த தையல் தொழிலை எப்படி நமது முன்னேர்கள் மேனுட்டாரிடமிருந்து வாங்கியிருக்கக்கூடும்? அப்படி எதற்கும் மேனுட்டை நோக்கிவிடுவோமானல் நம் நாட்டின் தையல் அறிவையே சுட்டெறித்த பாபத்திற் கல்லவா ஆளாவோம்.

அக்கரிய ஆடைகள் அழுக்கற்றன. தூயவைகளாகவும் திகழ்ந்தனவாம்.

"புகை முகந்தன்ன மாசில் தூஉடை" என்பது.

(திரு. மு. படை அடி.)

(தொடரும்)

"உள்ளச்சிலையே உருவச்சிலை"

மு. மாணிக்கவாசகன், *இரண்டாம் யாண்டு.*

இனிமையான தென்றல் காற்றும் இனிய கீதம் பாடும் குயிலின் குரலும் ஒலிக்கக் கதிரவன் தனது செங்கரங்களைப் பூமியின் மீது படரும் வண்ணமாக மேல் திசையில் இறங்க, கடலின் ஓசையின் இனிமையைக் கண்டவண்ணமாகச் சோமுவும் அவன் தம்பியும் பண்டைப் பண்பின் சிகரமாக விளங்கும் மாமல்லபுரக் கடற்கரையில் செல்கின்றனர்.

தமிழின் இனிமையே தன்னுடைய இன்பமென்று எண்ணிய தம்பி பாண்டியன் அம்மண்டபத்தையும் அங்கு அமைந்த சிற்பங்களையும் கண்டதும் தனது நீண்ட நாட்களின் ஐயமான எண்ணங்களைத் தனது அண்ணன் மூலம் தீர்க்க எண்ணி, அண்ணனை நோக்கி; அண்ணா! நம் தமிழ் மக்களின் பெருமையனைத்தும் பண்டைக் கோவில்களில்தான் அமைந்துள்ளன என்று பலர் கூற நான் கேட்டேனே! அதன் பொருள்தான் என்ன அண்ணா" என்றதும்; சோமு, கூறுகின்றேன் கேள்! என்று தொடங்கினான்.

நம் நாட்டில் பிறந்த மக்களின் அறிவையும், பண்பையும், நல்லியல்புகளையும் நாகரிகத்தையும் காக்க எண்ணி அன்றுமுதல் பாடுபடும் சான்றோர் பலராவர். அத்தகைய சான்றோரின் உட்கிடக்கையான ஆற்றல்தான் "கலை" எனப்படும். இந்தக் கலையாற்றல் மனிதனின் கண்களை மட்டும் கவராது அவனது ஐம்புலன்களையும் ஒருமுகமாக ஒன்ற வைக்கின்றது.

இத்தகைய கலையாற்றல் ஆதியில் மொழி வடிவில்தான் தோன்றியிருக்கவேண்டும். எவ்வாறு என்றால், பாப்புனையும் புலவோர் பாவாலும், மற்றும் பலர் உரையாலும், தனது உள்ளத்தெழுந்த கருத்தை ஒரு ஓவியமாக ஆக்கினர்.

இவ்விதமாகப் பாப்புனையும் கவிஞன்தான் கண்ட ஒரு பொருளினைப் பாட எண்ணினான் என்றால், அவன் கண்ணிற்பட்ட அவ்வுருவத்தின் பருமன், எழில், இன்னும் பற்பல அளவைகளும் அவனது உள்ளத்தை விட்டு அகலாமல், அதிலேயே தனது உள்ளத்தைப் பன்முறை தோயும்படியாகச் செய்து, என்றும் தனது உள்ளத்தை விட்டு அகலாத ஒரு உருவச் சிலையாகவே

அமைத்துவிடுகிருன். இத்தகைய எழிற்காட்சியைக் கண்ட அவன் உள்ளம் பாப்புனைந்து மகிழக் காண்கிறது. பின் அவன் தன்னைப் பலரும் போற்றும் வண்ணமாக ஒரு சிறந்த எழுத்தோவியத்தையும் வரைந்துவிடுகின்ருன். இவ்விதமாகத் தான் பாடிய பாவினில் உயிர்நிலை நன்கு அமைந்துவிடும்படி செய்கின்ருன். அவ்விதமாகச் செய்தமையினுல்தான் பற்பல நூற்ருண்டுகளுக்கு முன்பு இருந்து சென்ற புலவர்களின் பெயர் இன்றும் நின்று நில்வுகிறது. அத்தகைய புலவரின் பெயரும் அறியாவிட்டால் அவர்கள் பாடிய பாவினில் உள்ள உயிர் நிலையான அடிகளே அவர்களின் பெயர்களாக அமையும்படி முற்காலத்தில் அமைத்துள்ளனர். எனவே அவ்விதமான புலவர்களின் திறமையை வியந்து இன்னவற்றிற்கு இன்னவரே சிறந்தவர் என்றும் வரையறுத்தனர்.

வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
சயங்கொண்டான் விருத்த மென்னு
மொண்பாவி லுயர்கம்பன் கோவையுலா
வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாய பகர்சந்தம் படிக்காச
லாதொருவர் பகரொணுதே".

இவற்றிற்கு எல்லாம் காரணம் எழுத்தோவியமே! எனவே "பெரும் புலவர்களால் பாடப்பட்ட உண்மையான கவிதைகள் என்றென்றும் மாளாது. அவ்வாறு அதற்கு அழிவை எவராலும் உண்டு பண்ணவும் முடியாது" என்று ஒரு சான்ருேர் கூறினர்.

இவ்விதமான புகழுடைய கவிஞன் இயற்றிய பாவினைச் சுவைத்த ஓவியன், தானும் அவன் மன நிலையையே அடைந்து அந்தப் பாவினை ஒரு ஓவியத்தின் மூலமாக எழுதிக் காட்டிவிடுகின்ருன். அதனுல்தான் "ஓவியம் வரைந்தான் அவன்தன் உளத்தினை வரைந்தான்" என்று கூறிச் செனறனர். அத்தகைய அழியா ஓவியத்தின சின்னங்களே நம் பண்டையரின் நிலையை இன்றும் உணர்த்துகின்றது. அவை சித்தன்னவாசல், சிந்து வெளி முதலியவற்றில் அமைந்தவையே.

இத்தன்மைத்தான ஓவியத்தைக் கண்ட சிற்பிதான் அவ்விருவரின் திறனையும் உண்ர்ந்து ஏன் நாமும் அவர்களின் திறமையுடன் நம் திறமையையும் அமைத்து ஒரு சிலை செய்யலாகாது?

என்று எண்ணி முன்னைய இருவரின் உள்ள நிலையையும் உணர்ந்து அதே தன்மையைத் தானும் அடைந்து முதலில் தனது உள்ளத்தி லமைத்தபின் இயல்பான உருவமைக்கின்றான். அத்தகைய சிலையே இவ்விடத்து நீ ஐயப்பட்ட இந்த உருவங்களாகும். இவைமட்டும் தாம் நம் நாட்டினரின் நிலையை உணர்த்துவன அல்ல; இன்னும் அநேகம் உண்டு. ஆதியில் மக்கள் வீரன் ஒருவன் போரில் விழுப் புண்பட்டு இறந்தால் அவ்வீரனின் அறிகுறியாக ஒரு கல்லில் அவ னது உருவத்தை எழுதி நட்டு வழிபட்டு வந்தனர். அதனையே நடுகல் சிற்பம் என்று வழங்கினர். அது சிறிது சிறிதாக வளர்ந்து இன்று, நாட்டில் சிறந்தோர்க்குச் சிலை அமைக்கும் அளவிற்கு வளர்ந்தது. இத்தகைய முறையிலேதான் தமிழன் ஒருவன்; தனது கணவன் கள்வன் அல்லன் என்று மெய்ப்பித்து தனது நாட்டின் எல்லையையடைந்த பத்தினிக்குப் படிவம்செய்ய எண்ணி வடநாடு சென்று அங்கு எதிர்த்த கனக, விசயரை வென்று அவர்களையே கல்லைத் தூக்கிவரவும் செய்தான் என்றால் அவனது பண்பு நன்கு விளங்கும். அத்துடன் நில்லாது நம் நாட்டில், அழகில் சிறந்த அஜந்தா, எழில் அமைந்த எல்லோரா, கண் கவரும் காந்தாரம் இவற்றின் சிற்பங்களை, ஓவியர்களும், சிற்பிகளும் உண்டுபண்ணினர். மேலும் அவற்றில் சிற்பிதானு இவ்வுருவத்தைச் செய்தவன் என்று எண்ணும் வண்ணம் அமைத்தான் எனில் அவனது திறத்தை என் னென்று புகழ்வது. ஒரே சிலையில் ஆணையும் பெண்ணையும் அமைத்துவைக்கும் ஆற்றல் உள்ளவனாகவும் திகழ்ந்தான். அத்த கைய பண்டை மக்களின் நாகரிக இயல்புகள் இவ்விதமான சிற் பக் கலைகளில்தான் அமைந்துள்ளன. அவை கால மாறுபாட்டால் அழியும் தன்மையை அடைந்த நிலையில் உள்ளன. அவற்றின் உண்மையை நீ இன்று அறிய விரும்பினால் தஞ்சையின் கலைக்கூடத் தில் சென்றால் பிர்மா, சிவன், தெய்வப்பெண், திருமால், அர்த்தநாரி முதலிய உருவங்களின் சிலையே, அழிந்தவற்றின் ஞாபகமாக அமைந்துள்ளன. இவ்விதமான நம் பண்பமைந்த சிற்பக்கலை உள் ளத்தின் நிலையை அடைந்து பின் அது மாறுபட இந்த உருவச் சிலையாக அமைந்தது பாண்டியா! ஆனால் இந்தச் சிலையானது மக் களின் மாறுபாட்டிற்கு ஏற்ப மாறுபட்டும் வந்துள்ளது. தற்காலத் தில் உலக உத்தமரின் சிலையாகவும், கவிஞரின் நினைவுச் சிலையாக வும் அமைந்து வருகின்றது.

எனவே தொல்காப்பியர் காலத்திற்கு முன்னிருந்து வந்த உருவச் சிலைகளை அழிந்துவிடாமல் பாதுகாத்தால் அந்தப் பண்

[123-ம் பக்கம் பார்க்க]

உரை நடை,

இரா. இளந்திரையன், B. A., (Hons.)

ஒவ்வொரு மொழியாளரும், கருத்துக்களை வெளியிட இரு வேறு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். அவற்றுள் ஒன்று கவிதை; மற்றது உரைநடை. 'உரைநடை' என்பது 'பேசும் முறை' அல்லது 'சொல்லும் வகை' என்று பொருள்படும். நடை என்பது இயல்பு என்னும் பொருளில் பேச்சு வழக்கில் வழங்கக் காணுகிறோம். யாராவது ஒருவனின் இயல்பு பிற ரோடு முரண்படுமானால், 'பையனின் நடை ஒன்றும் சரியாகத் தெரியவில்லையே" என்று மற்றவர்கள் பேசிக்கொள்ளுவதை அடிக்கடி கேட்கின்றோம். எனவே நடை என்பது முறை, வகை, வழக்கு, இயல்பு என்னும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல பொருள்களையுடையதாகக் காண்கிறது. உரை என்பது பேச்சு. ஆதலின் பேச்சு மொழியின், பேச்சு வழக்கின் இயல்பை உடையது உரைநடை என்று கொள்ளலாம். கவிதை பேச்சு வழக்கினின்று மிகுதியும் விலகி நிற்க, உரைநடை பேச்சு வழக் கின் பண்புகளே மிகுதியாகத் தழுவிக்கொண்டு வளரும் இயல் பும் இதனை வலியுறுத்தும்.

மொழியில் கவிதை முந்தியதா உரைநடை முந்தியதா என்பதில் மொழியாராய்ச்சியாளரிடையே கருத்து வேறுபாடு உண்டு. தோற்றத்தில் எது முந்தியதாக இருப்பினும் இன்றைய

[18-ம் பக்கம் தொடர்ச்சி]

டைய மக்களின் நல்லியல்புகளையும், அறிவையும் அறிய ஒரு ஏது வாகும் தம்பி! ஆகவே எழுத்தின் வடிவமாக இருந்தால், அதைப் படித்த மக்களே நன்கு உணர முடியும், ஆனால் ஓவியமாகவும், சிற்பக் கலையாகவும் இருந்தால் படியாத மக்களும் அத னது தன்மையை உணர ஏதுவாகும்; மேலும் ஓவியமாக இருந்தால் கூட சில நூற்றாண்டுகளில் சிதைவுற நேரும். ஆனால் சிற்பமாக இருந்தால் இன்னும் எந்தெந்த நூற்றாண்டும் அழியாமல் இருந்து அந்தந்த மக்களின் இயல்புகளை அறிய ஏதுவாகும் எனவே அவ் விதமான கலையை நாம் போற்றிக் கண்காணிக்க வேண்டுவது நம் கடமை என்பதை அறிவோமாக.

நிலையில் எல்லா மொழிகளிலுமே கவிதையும் உரைநடையும் உள்ளன. பேச்சு வழக்கில் உரைநடையே உள்ளது. தொடக்க நிலையில் எண்ணியாங்கு எண்ணியவிடத்தே பேசுவது கவிதை யாக – பாட்டாக இருந்திருக்கலாம். ஆனால் காலப்போக்கில் கவிதை மிக அதிகமான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இயங் கத் தலைப்பட்டது. அதுமுதல் கவிதை எழுத்துலகோடு நின்று விட, உரைநடை மாத்திரம் எழுத்து பேச்சு ஆகிய இருவேறு லகங்களிலும் இணையான செல்வாக்கோடு உலவிவருகின்றது.

நமது இலக்கியங்களை எடுத்து நோக்குவோர், நம்மவர் உரை நடைக்கு மதிப்பளிக்கவில்லை என்ற முடிவுக்கு வருதல் கூடும். நம் இலக்கியங்கள் யாவும் பா வடிவிலமைந்தவை என் பது உண்மையே. ஆனால் அது கொண்டே நம்மனோர் உரை நடையை வெறுத்தனர் என்று கொள்ளுதல் கூடாது. அவர் கள் கவிதையிலேயே இலக்கியங்களை ஆக்கி வைத்ததற்குத் தகுந்த காரணம் உண்டு. நம் நாளில் இருப்பதுபோல் அக் காலத்தில் அச்சுப் பொறி இல்லை. எந்த இலக்கியத்தையும் அவர்கள் (பனை ஓலை) ஏட்டில் எழுத்தாணிகொண்டே எழுதி வைத்துக்கொள்ளவேண்டியதிருந்தது, அவ்வாறு செய்யும் போது மிக அதிகமான படிகள் எடுத்தல் எளிதன்று. எனவே ஒரு நூலின் படிகள் பல இடங்களிலும் இரா. ஒரு நூலையோ அதன் பகுதிகளையோ, வேண்டியபோது வேண்டிய இடத்தில் எடுத்துப் பார்க்க இயலாது. ஆதலின் அவர்கள் நூல்களைப் பெரும்பாலும் மனனஞ் செய்து வைத்துக்கொள்ளவேண்டி யிருந்தது. உரைநடை நூல்களைவிட கவிதை நூல்கள் எளி தில் படி எடுக்கவும் மனனஞ் செய்யவும் ஏற்ற வகையில் சுருங் கிய அளவினவாக இருக்கும். இவ் எளிமை கருதியே அவர் கள் நூல்களை உரை நடையில் ஆக்காது கவிதையிலேயே ஆக்கி வைத்தனர்.

மீன் குஞ்சுக்கு நீந்துவது இயல்பாகவே வரும் ஒரு கலை. பெண்டிர்க்கு அடிசில் தொழில் இயல்பாகவே வரும் ஒரு கலை. இவைபோலவே ஒரு மொழி பயிலும் மக்களுக்கும் உரைநடை எழுதுவது இயல்பாக வரும் ஒரு கலை. உரைநடை எழுதும் போது சந்திப்பிழைகள் ஏற்படுதல், ஒருமைப் பன்மை மயக்கம்

தோன்றுதல் போன்றவை பயிற்சிக்குறைவால் ஏற்படுபவை அல்ல. அவை அவர்களின் பேச்சில் உள்ள குறைபாடுகளே யாகும். காலையில் எழுந்தவுடன், "நான் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும்" என்று சொல்லும் சிறுவன் அதனையே, "நான் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும்" என்று எழுத மாட்டான். ஏனெனில் நம் உள்ளம் தனக்குள் பேசுவதை அப்படியே கை எழுதுகின்றது. ஆதலின் எழுத்தில் நிகழும் பிழை பேச்சில் நிகழ்ந்ததனாலேயே எழுத்தில் நிகழ முடிந்தது எனவே எழுத்தைத் திருத்தவேண்டுமாயின் முதலில் பேச்சைத் திருத்தவேண்டும். அப்போது எழுத்து தானாகவே திருந்தி விடும். இங்கேயும் பேச்சு மொழிக்கும் உரை நடைக்கும் உள்ள தொடர்பு தெளிவாகிறது.

உரைநடை எவ்வாறு இருக்கவேண்டும்? என்பது ஒரு சிக்கலான வினா. கவிதைக்குப் பாக்களும் அவற்றின் இனங் களும், வகைகளும், துறை தாழிசை, விருத்தம் முதலியனவும் அமைந்திருப்பதுபோல் உரைநடைக்கு வகைதுறைகள் எதுவும் வகுக்கப்படவில்லை. வகைப்படுத்த முனைந்தோரும் அவரவர் விருப்பம்போல் சில உவமை உருவகச் சொற்களால் சில பெயர்களமைத்தனரேயன்றி, உரைநடை அக்குறிப்பிட்ட வகை களில்தான் இயங்குகின்றது என்று வரையறுத்திலர். உரை நடை கவிதைபோலாது. அமைப்பு முறையில் இயற்கைப்பண்பு கள் மிகுதியாகப் பெற்றிருத்தலான் அதனைக் குறிப்பிட்ட வரை யறைகட்குட்படுத்துதல் எளிதன்று. உலகில் மக்கள் பேசுவ தில் எத்தனையோ வகைகள் இருப்பதுபோலவே உரைநடை எழுதுவதிலும் பல வகைகள் இருத்தல் இயல்பு.

கவிதையின் நடை இயல்புகளை உரைநடையிடைப் பெய்து எழுதும் முறை ஒன்று உளது. நாம் முன்னரே குறிப்பிட் டுள்ளபடி செயற்கைத் தொடர்பு மிகுதியும் இல்லாதது உரை நடை. செய்யுளின் எதுகை மோனை முதலியன செயற்கை; அவை உரை நடையில் ஒரோவழிப் புகுந்து விடுதலில் தவறில்லை. புகுத்தி எழுதுதல் உரை நடையின் இயல்பைச் சிதைத்துவிடும்.

உரைநடை நாம் நாடோறும் வீட்டில் அணியும் நாலுமுழ வேட்டி போன்றது; கவிதையோ திருவிழாக் காலங்களில் அணி

யும் விலையேறப்பெற்ற பட்டு வேட்டி போன்றது. முன்னது எளிமையானது; இயல்பானது. பின்னது அருமையானது; அதற்கென்றுள்ள பேருழைப்பும் பெரும் பொருட் செலவும் உடையது. இந்த நிலையில் ஒன்றேடொன்றை இடைச் செருகல் செய்வதனுல் இரண்டுக்கும் ஏற்றமில்லை; அவை தம் இயல்பு குன்றும்,

தமிழ்ச் சொற்றொடர் அமைப்பு எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்னும் மூன்று உறுப்புக்களேயும் முறையே கொண்டது. எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செயப்படுபொருள் இடையிலும் நின்றியல்வது தமிழ் உரை நடையின் முறை. இது பேச்சு வழக்கோடு ஒத்தது. "நான் நூலைக் கற்கிறேன்" என அமைவதே அம்முறை. சிலபோது இம்முறை மாறி, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இடம் பெயர்ந்து நிற்பதும் உண்டு. அவ்வாறு நிற்கும்போது அச்சொற்றொடர் கவிதையாகவோ, நாடகமாகவோ மாறிப்போகும். எனவே இத்தமிழ் உரைநடை மரபை மாற்றி எழுதுவது உரைநடையின் இயல்புக்கு முரண்பட்டதாகும்.

சிலர் பிற மொழிகளின் உரைநடையைத் தமிழில் புகுத்தி எழுதுவர். அவர் உரைநடையின் இயல்பினை முழுதுமறிந்தாராகார். ஒரு மொழியின் உரைநடை அம்மொழிக்குரியார் இயல்பாகப் பேசும் நடையேயன்றி, நாம் நினைத்தபோதெல்லாம் நினைத்தவாறெல்லாம் மாற்றியமைத்துக்கொள்ளக்கூடியதன்று என்பதனை அவர் உணர்தல் வேண்டும். ஆங்கில மொழியில், "I took a book" என்று கூறினுல் "நான் ஒரு புத்தகத்தை எடுத்தேன்" என்று பொருள்படும். ஆனுல் அச்சொற்றொடரில் எழுவாய் முதலினும், பயனிலை இடையிலும், செயப்படு பொருள் இறுதியிலுமாக அமைந்துள்ளன. இது தமிழ் முறைக்கு மாறுபட்டது. இம்முறைப்படி அத்தொடரைத் தமிழில் எழுதினுல், 'நான் எடுத்தேன் ஒரு புத்தகத்தை' என அமையும். இஃது ஆங்கில உரைநடை முறைக்குச் சரியே; நமது முறை இதனை ஏற்காது. ஏனெனில் அவர்கள் இப்படியே பேசுவர்; நாம் இப்படிப் பேசுவதே இல்லை. ஆதலின் அம்முறைகளை வலிதில் எழுத்திற் புகுத்துவதனுல் உரைநடை வளர்ச்சியுருது.

இனி, கவிதைக்குரிய அசைச் சொற்கள், அளபெடை, மரபுச் சொற்கள், தொகைநிலைத் தொடர் மொழிகள் முதலான வற்றை உரைநடையிற் புகுத்தி எழுதும் பழக்கமும் உளது. இதுவும் நேரிதன்று. செயற்கையாக ஓசை இன்பத்தை உண்டாக்கவே அசைச் சொற்கள் அளபெடைகள் முதலியன கவிதையில் இடம் பெறுகின்றன. அன்றியும் பலதிறப்பட்ட ஓசை வரையறைகளில் இவை கவிஞனை ஓரளவு தாங்கிப் பொருட் சிதைவு ஏற்படாதவாறு காக்கும். அத்தகு சட்டதிட்டக் கட்டுப்பாடுகளற்ற உரைநடையில் அவற்றை நுழைத்து இடர்படுவானேன்? அல்லது அவற்றால் உரைநடைக்குப் பயன்தானென்ன மிகுசொல் வழங்கல் என்னும் குற்றத்தைத் தவிர?...

மரபுச் சொற்களும் தொகைநிலைத் தொடர்களும் சொற் சுருக்கத்துக்காகக் கவிதையில் மேற்கொள்ளப்படுகின்றன. சான்றாக, 'குறிஞ்சி' என்னும் மரபுச்சொல், 'மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தையும், புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய குறிஞ்சி ஒழுக்கத்தையும் விளக்கும். இந்த ஒரு சொல்லைப் பயன்படுத்தி, இவ்விரண்டு பொருட்களையுமோ இரண்டில் ஒரு பொருளையோ இடத்துக்கேற்ப வெளியிடுவான் கவிஞன். இதுபோலவே தொகைநிலைத் தொடர்களும் சொற் செட்டுக்குப் பயன்படும். கவிதைக்குரிய இவற்றை உரைநடையில் பயன்படுத்துவதனால் பொருள் தெளிவின்மையும் மயக்கமும் ஏற்படுமேயன்றி வேறுபயன் விளையாது. ஏனெனில் இலைமறை காய்போல் பொருளை மறைத்துவைத்தல் நேரிடையாகப் பொருள் சிறக்கும் உரைநடையின் இயல்பன்று.

நமது உரைநடையின் வரலாற்றை நோக்கின் அதில் இங்குக் குறிப்பிட்ட இயல்புகள் யாவுமே கலந்திருக்கக் காணலாம். அந்த உரைநடை மக்களின் பேச்சிலிருந்து பெறப்படாது, இருந்துவந்த கவிதை இலக்கியத்திலிருந்து அது பெறப்பட்டதே அதற்குரிய காரணம். கரும்பிலிருந்து சாறு பிழிந்தெடுக்கும்போது அக்கரும்பின் துரும்புகளும் சாற்றில் கலந்து விடுதல் இயல்பேயல்லவா? இன்றைய உரைநடையிலும் இக் குறைபாடுகள் இல்லாமலில்லை. கவிதையின் வளர்ச்சி குன்றியதனாலோ என்னவோ கவிதை நடையின் இயல்புகள் அத்தனையும் இன்றைய உரைநடையிற் கலந்துள்ளன. இன்றைய இளைஞரிற் பெரும்பகுதியினர் இயற்கை முறை எது, செயற்கை முறை எது என்று அறிந்துணராது எழுதி வருவதனாலேயே இக் குறைபாடுகள் மிகுகின்றன போலும்.

மேனாட்டறிஞர் ஒருவர் கூறுவதுபோல "கற்பனை வளம் மாத்திரம் உடையவனாக இருந்து கல்விப் பயிற்சியில்லாத ஒருவனுக்கு இறக்கைகள் உண்டு கால்கள் இல்லை!" அத்தகைய ஒருவன் ஏதேதோ எழுதுவான். அவையாவும் உலகோரால் ஒத்துக்கொள்ளத்தக்கனவாயினவா என்பதே அவரின் கருத்து. உரைநடை எழுதுவோரும் தமக்கு நன்றாக இருக்கின்றவற்றை எழுதித்தள்ளுவது கூடாது. இருக்கின்ற இலக்கியத்தின் ஒரு பகுதியையேனும் கசடறக் கற்றுத்தெளிந்து, ஆய்ந்து, உணர்ந்து உரைநடையின் இயற்கைத் தன்மையை எண்ணி ஓர்ந்து அதன் இயல்பின்படி எழுத முனைதல் வேண்டும். அப்போதுதான் உரைநடைக்கு ஆக்கம் ஏற்படும்.

நமது மொழியில் உரை நடை வளர வேண்டிய ஒரு துறை· ஏனெனில் இப்போதுதான் அது தன் இயல்பான பிறப்பிடத்தை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது. முன்னரே குறிப்பிட்டுள்ள படி: முதல் முதலில் உரை நடை எழுதியவர்களெல்லாம் கவிதையிலிருந்து உரைநடையை வகுத்தார்கள். ஆனால் உரைநடையோ பேச்சிலிருந்து வகுக்கப்படவேண்டியது. அப்போதுதான் அதன் இயற்கைத் தன்மை மிகுந்து செயற்கை அமைப்புக்களெல்லாம் குறையும். அதிலேதான் ஆடம்பரமற்ற நேர்மை (Sincerety) இருக்கும் அந்த நேர்மைதான் எந்த ஒன்றின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பண்பாகும்.

இப்போது, உரைநடை எவ்வளவு சாதாரணமாக இருக்க வேண்டுமோ அவ்வளவு சாதாரணமாகத் தோன்றுகின்றது. நமது வீட்டுக்கு வரும் நண்பரிடம் ஏதாவதொரு செய்தியைச் சொல்லுகிறோம். செய்தியின் முழு விவரங்களும் அவருக்கு எளிதில் மனத்திற் பதியுமாறும், அவர் விரும்பிக் கேட்குமாறும் பேசுகிறோம். அதற்கென்று நாம் தனி முயற்சி செய்து அழகழகான சொற்களைத் தேடி அமைப்பதில்லை; எந்த முறையில் சொல்லுவது என்று எண்ணித் தவிப்பதில்லை. செய்தி இனிது. அதனால் நம் நண்பருக்கு அது தெரியவேண்டுமென்று விரும்பினோம். பேச்சு முன் ஏற்பாடின்றியே தொடங்கிவிட்டது. வளர்ந்து முடிந்தும் விட்டது. இந்த இயல்பான முறையே உரைநடை. இதைப் பின்பற்றியே உரை நடை வளரவேண்டும். எளியதும் வழக்கிலுள்ளதுமான சொற்கள், சிறிய சிறிய தொடர்கள், பொருளை முறையாகச் சிறிது சிறிதாக விளக்கும் இயல்பு என்பன அப்பேச்சில் இடம் பெற்றன. இவையே உரைநடையிலும் இடம் பெறுகின்றன; பொருளையும் விளக்கிச் சிறப்பிக்கின்றன.

பாரதியாரும் இயற்கைப்புனைவும்.

[K. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L. தஞ்சை.]

இயற்கையைப்பற்றிய பாரதியாரின் தன் போக்குக் கருத்து தன்னேரிலாத் தன்மைத்து. உலகியலிலும் இயற்கைத் தன்மையிலும் ஈடுபடும் இவரது உள்ளத்துணர்வு பாவெனுங் குன்றேறிக் காணுங்காலை, உலகில் நிலவும் துன்பத்தின் இயல்புகள் யாவும், வெறுந் துன்பமாக அவருக்குப் புலப்படுவதில்லை. அவருக்குப் புலப்படுவன யாவும் துன்பத்தின் தூய்மையும் எழிலுமே யாகும். அத்தகைய துன்பத்தின் தூய்மையிலும் அழகிலும் அவர் உள்ளம் கனிவுற, அவரது உள்ளத்துணர்ச்சி, சீர், தளை, அடி, எனும் இதழ்களாய் மலர்ந்து, இசையினிமை சூழ்ந்த இயற்கை நெறியின் மணத்தை அள்ளி வீசுகின்றது. மக்களுக்குள் ஒற்றுமை ஓங்குவதற்கேற்ற அன்பு நெறியுள், மற்றைய உயிர்களும் இடம்பெற வேண்டுமென்ற மானிடவுணர்வை, மாண்புடை இயற்கையின் உணர்வாக உருவகித்துப் பாமணம் கமழுமாறு அவர் காட்டும் புலமை மாட்சி வியக்கற்பாலதொன்றாகும்.

இவ்வண்ணம் இயற்கை நிகழ்வோடு மானிடவுணர்வைப்புணர்விக்கும் பாரதியாரின் ஆற்றல், அம்மா!, மிகப்பெரிது. இஃது அறிவைத் தட்டியெழுப்பும் பான்மையோடமையாது மாந்தர் தெருள்கொள் உணர்ச்சியை உந்தவும் வல்லது. இத்தகைய ஆற்றலுணர்வு, புதியதொரு கிளர்ச்சியை மக்களுள்ளத்தில் எழுப்பிப் பெருவாழ்வு அளிக்க, பாரதியாரது உள்ளப் பொய்கையில் கவிதைப் பூக்களாக மலர்ந்தன.

காக்கைக் குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்!
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்!!

என்பது பாரதியாரது நாவினியல்பிலே தாமே சுரந்த பாட்டு. இது அளிக்கும் ஓசையின்பத்தையும், கவியுள்ளத்தின் தன்மை

யினையும் நோக்க உணர்தற்கரிதாகும் இதன் பொருட்பெற்றி, உள்ளவாறு உணர்வோரது வேட்கையினளவுக்கேற்றவாறு சுரந்து செல்லும் பான்மையது. இப்பாவிடைப் பெய்த குறிக்கோளை எத்துணைக் காலம் இடைவிடாது அனுபவித்தறிந்தாலும் அதனுகர்ச்சி எல்லை காணுவாறு அப்போதைக்கப்போது ஆராவமுதமாய்த் திகழுமென்பதில் ஐயமில்லை.

இயற்கையைக்கண்டு மகிழும் பாரதியாரது தன்மை மக்களை இயற்கையின்ப வெள்ளத்திலாழ்த்தி, புரட்சியியக்கத்தில் ஈடுபடச்செய்யும். இதனான்மக்களால் இயற்கை, காதலிக்கப் படும் நிலையும், இயற்கை மக்களைக் காதலிக்கும் தன்மையும் புலப்பட, இயற்கையின் சீற்றத் தோற்றத்திலும், காதலின்பத்தைக் காணும் வாய்ப்பு மக்கள்பால் அரும்பித் தோன்றும். கலங்கா உள்ளத்தில் கனிந்த இத்தகைய காதல், துன்பத்தைப் பொறுத்து நிற்கும் வீரக் காதலாகும். இஃது உயிர் வலிகாட்டும் அன்போடியைந்த உண்மை வீரம். இத்தகையவாறு இயற்கை நமது இன்ப துன்பிலும் பங்குகொண்டு நம் உணர்வோடு ஒன்றும் தன்மையினைப் புலப்படச்செய்து, அதனின்பத்தை அனுபவிக்கச் செய்யும் திறம் பாரதியார்பால் மிளிர்கின்றது. என்னெனில், அவர் பேரியாற்றின் சலசலப்பில் தமிழைக்கேட்டு, ஆங்கே, தமிழின் செம்மையினைக் கொழித்திட, இயற்கையின்பத்தைப் பருகினவராதலினென்க. நுண்ணிய பண்ணருவியெனும் கவிதை, மலையினையே யாழாக்கித் தன்னோட்டத்திலே இசையைப் பரப்புவதைக் கண்டு நுகர்ந்த பாரதியார், நாதத்திலே பிறக்கும் பேரமைதியினை உணர்ந்து, ஞாலமதை இன்பமதில் ஆழ்த்திட, தமிழ் எழுத்தொலியை அடியாகக்கொண்டு பிறக்கும் பண்ணுக்கும் காரணமாயுள்ள ஓசையால் இன்கவி பாடுவாராயினர். அவை, வெறிகொண்டு உலவும் நாட்டுப்பற்று மலிந்தன; உரிமையுணர்வை ஊட்டுவன; கெடலிலாதன; சோர்விலாதன.

இயற்கையின்பத்தோடியைந்துள்ள இசையின் கழிபோராற்றலை வியந்த எஃகுச் செவிபடைத்த பாரதியார், நுண்ணியதாய் விரிந்து சிறந்த இசையியல்பினில் தம் மனத்தைப் பறிகொடுத்த இயல்பை.

'கானப் பறவை
கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக்
காட்டும் இசைகளிலும்
ஆற்று நீரோசை
அருவி ஒலியினிலும்
நீலப் பெருங்கடலெந்
நேரமுமே தானிசைக்கும்
ஓலத்திடையே
உதிக்கும் இசையினிலும்
........நெஞ்சைப்
பறிகொடுத்தேன் பாவியேன்'

என்ற பாட்டின்கண் காணற்பாற்று. இஃதோடமையாது,

ஏற்ற நீர்ப் பாட்டின்
இசையினிலும் நெல் இடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார் தம்
சுவை மிகுந்த பண்களிலும்
பண்ணே மடவார்
பழகு பல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள்
வளைக் கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்
......நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்!

என்ற பாட்டினிலும், உணர்த்தவல்ல சொல்லாற்றலால் எழுந்த இன்பம், மந்திரம்போல் வயங்குவதைக் காண்க. மற்றும் உழைப்பின் உயர்வை விளக்கவந்த பாரதியார், உழைப்பினில் இசையின் பத்தை ஊட்டி, இசையினையே அயர்வு நீக்கும் நிழலாகவும், வலிமைதரும் ஊனுணவாகவும் மிளிரும் தத்துவத்தைச் சுட்டிக் காட்டுவாராயினர்.

இயற்கையின்பத்தை அனுபவிக்கத் தெரியாது ஏங்கித் தவிக்கும் மக்களை அன்னவர்களது உள்ளத்திலும் இயற்கையைக் கண்டு மகிழும் தன்மை மறைந்து கிடப்பதை அறிந்து, அம் மக்களை,

"சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்து
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்!"

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே!"

என அறிவூட்டும் வகையில் தட்டி எழுப்பி,

'நாமிருக்கும் நாடு
நமதென்பதறிந்தோம்!'

என எடுத்துரைத்து, அன்னாருக்கு உரிமையுணர்வினையூட்டி இயற்கையின்பப் பித்தர்களாக்கிய இன்பம்தான் என்னே! இன்பச் சுதந்திரப் பயிரைப்பற்றி,

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்
கருகத் திருவுளமோ!

என பாரதியார் இயற்கையின்பக் கண்ணீர்விட்டு கனிந்து பாடும் வகையும்

'என்று தணியுமிச் சுதந்திர தாகம்
என்று மடியுமெங்களடிமையில் மோகம்'

எனப் பூங்குயிலின் குரலால் கூவும் நேர்மையும் நவைதீர்ந்த இயற்கையின்பமளிக்கவல்லவை. இன்னவாறு மனம் மகிழ்ந்தெழும் இன்பத்திலே திளைத்த பாரதியார், மக்களின் மனவுணர்வை இயற்கையுணர்வாக மாற்றி, இயற்கையே மக்களுக்குரிய நண்பன், தத்துவ முறைப்போன், உண்மை வழியினைக் காட்டி இன்பமளிப்பவன் எனப் பாங்குற, வாய்ப்புவந்தவிடமெல்லாம் தம் கவிதையில் தெளிவுறுத்துவார். இயற்கையோடியைந்த வாழ்வில் ஈடுபட்ட பாரதியார் தாம் பார்க்கும் இடங்கள் தோறும் ஒளித்திரள் வண்ணக் களஞ்சியத்தைக் கண்டவண்ணமாகவே காலங் கழித்தார். அவர் காணும் மாலைப்பொழுது

'தீயின் குழம்புகள்—செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்—வெண்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்—பாரடி!
நீலப் பொய்கைகள்! அடடா! நீல
நிறமொன்றில் எத்தனை வகையடி!

நீலப் பொய்கையில் மிதந்திடும் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற்கரையிட்ட
கருஞ் சிகரங்கள்'

நம்முள்ளத்தைக் குழையச் செய்யும் நீர்மையது. நுரைகொண்ட சுருளலை கடலிலேயும், இடியோடு வெட்டியடிக்கும் மின் ஒளியிலும், சூல்கொண்ட கரு முகிலிலும், கடுகியேகும் சுழற் காற்றிலேயும் இயற்கையின் சீற்றத்தினை அவர் காணார். அவர் காணுவது யாவும் பேரச்சம் போர்த்திய அன்பும், புயலைத் தாங்கும் சாந்தமுமே.

கடல், காற்று முதலியன வழங்கும் காட்சியைப் பார்த்துப் பார்த்து இயற்கையின் சீற்றத் தோற்றத்தில், அன்போடியைந்த மகிழ்ச்சியின் பொங்கலை கவிதை வாயிலாக, ஓசையின் அதிர்ச்சியோடு போற்றுவார். மக்களுக்குத் தொழில், ஈங்கு, அன்பு செய்தலேயென அறிவு புகட்டி மற்றும் இயற்கையின் மாண்பையும் இனிது விளக்குவார். இவ்வாறாக இயற்கையில் தோய்ந்து

'வெட்டியடிக்குது மின்னல்—கடல்
வீரத்திரைகொண்டு விண்ணையிடிக்குது
கொட்டியிடிக்குது மேகம்—கட
கடவென்று விண்ணைக் குடையுது காற்று'

நிலாவையும் வானத்து மீனையுங் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே,
குலாவு மமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி பிடித்தோம்!
உலாவு மனச்சிறு புள்ளினை யெங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்!
பலாவின்கனிச் சுளை வண்டியிலோர் வண்டு
பாடுவதும் வியப்போ!

தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
செய்து வருங் காற்றே
யுன்னைக் குதிரை கொண்டேறித் திரியுமோ
ருள்ளம் படைத்து விட்டோம்!

என இயற்கையின்பம் கொழிக்க இயற்கைப் பாக்களையே பாரதியார் இசைச் சிறப்புடன் மொழிவாராயினர். விண்ணில் ஒளிரும் வெண்ணிலாவினைக் காணுங்கால், பாரதியார் அஃது தன் இதயத்தில் சுடர் நகை புரிவதாக உணர்வார். பின் விண்ணின்பம் அடைய

'மோதவருங் கருமேகத் திரளினை—நீ
முத்தினொளி தந்தழகுறச் செய்குவை
தீது புரிந்திட வந்திடுந் தீயர்க்கும்— நலஞ்
செய்தொளி நல்குவர் மேலவரன்றோ!

எனப்பாடி சிறகை ஒடுக்கி அடைகாக்கும் புள்ளினம்போலிருப்பார். இவையாவும் பாரதியாரின் இலக்கியத்தின் ஒய்வற்ற எழில் நலத்தையும், கவிதைச் சிறகின் துடிப்பையுங் காட்டி மாண்புறும் கவித்துவ வரிகளாயிற்றென்க.

பாரதியாரது பாக்களில் எங்கும் இயற்கைப் பொருள்கள் வண்ண ஒளிகொண்டு பொலிவதினன், அவையாவும், உள்ளத்தில் உணர்ச்சிப் புயலால் உந்தப்பட்ட விளையாட்டின்பத்தைப் பிலிற்றுவனவாகும். இயற்கையின்ப வாயிலாக, நாளடைவில் இயற்கை கடந்த இறை நிலையினையும் பாரதியார் கண்டுணர்வாராயினர். உணர்ந்த வழி, பாரதியார் அழகில் மறைந்து கிடக்கும் உண்மையாய இறைநிலையினை வணங்கவும் முற்படுவாராயினர்.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா;
பார்க்கு மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சை நிறந்தோன்றுதையே நந்தலாலா;
கேட்குமொலியினெல்லாம் நந்தலாலா—நின்றன்
கீதமிசைக்குதடா நந்தலாலா;
தீக்குள் விரலை வைத்தால்—நந்தலாலா—நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா'

என்ற அவரது சொல்லோவியம் மனவுணர்வு கடந்த நிலையில் விளங்கும் பெற்றியினைக் கொண்டது. இறைவனைக் கருத் திருத்தி, காக்கையினையும், குயிலினையும் கூவிக் கூவி இறைவனை மகிழ்ந்து பாடிப் பாடி, பாரதியார் வண்டமிழ் நாட்டின் வீரத் தினையும் நலத்தினையும் வளர்த்து மக்களைத் தமிழின்பம் பெற வைத்தது கவனிக்கத்தக்கது. மற்றும் வாழ்வின் பலவித நிகழ்விலும் கண்ணனைக் கண்டு

காயிலே புளிப்ப தென்னே?
கனியிலே யினிப்ப தென்னே?
நோயிலே படுப்ப தென்னே?
நோன்பிலே யுயிர்ப்ப தென்னே?
காற்றிலே குளிர்ந்த தென்னே?
கனலிலே சுடுவ தென்னே?

என்று அன்புக் கண்ணீர்விட்டு உருகுவாராயினர்.

இயற்கை வளஞ் சூழ்த்த இடங்கள் தோறும் இறையின் உண்மையினைத் தெளிந்த பாரதியாரின் புலன்களுக்கு இயற்கை அன்னையின் எழில் நலக் காட்சி விருந்தாக விளங்கி, அவரது உள்ளக் கிழியில் உருவாக அமைய, அவ்வுரு பாரதியாருக்குப் பக்திப் பாடல்களாகவும் பிறங்கியது. இதனுன் வரிக்கு வரி அவரது பாக்கள் கவிக் கரும்பாக வயங்கியது. இயற்கையின் அமைப்பாகிய அப்பாட்டு பாரதியாரை, உயிர்களைத் தாங்கும் இயற்கை அன்னையுடன் கூட்டுவிக்க, அப் பராசக்தியின்பால் அணைந்த ஆருயிரானூர், பாரதியார். அச்சமில்லாத சுதந்திரத்தில் புதுயுக ஆனந்தப் பண்புகளைப் பொழிந்தார். அடிமைத் துயரை வேரோடு அறுத்து இழந்த செல்வத்தை வல்லமையோடு மீண் டும் பெற, கலைவரந் தந்திடும் பாரதிவாணி விண்ணில் களித்துப் பறக்கத் தொடங்கியது. இறைவாழும் மனக் கோயிலில் பயமெனும் சிறிய பேயினை வாழவிடாது விரட்ட பாரதியார்,

'கொட்டடா, கொட்டடா, கொட்டடா, கொட்டடா! என கவியுலகம் வியக்க செயபேரிகை கொட்டி

'சுற்றி நில்லாதேபோ—பகையே
துள்ளி வருகுது வேல்

என வீரியம் துள்ளியெழ, எரிமலையின் தீக்கதிரைப் பரவவிடுவார். பின்னர் அபயக் கதிர்பரப்ப, இயற்கை அன்னையை விளித்து

ஹே — வீரக்காளீ — சாமுண்டி காளீ—
கரும்புத் தோட்டத்திலே......விம்மி விம்மி
விம்மி விம்மி யழுங்குரல் கேட்டிருப்பாய் காற்றே
அவர் விம்மி யழுந்திறங் கெட்டுப்போயினர்'

என்று துடிதுடித்து வேசற்று அயர்வார். பின்னர் சத்தியின் அருளைப் பெற்றார்போல்,

'வேடிக்கை மனிதரைப்போலே—நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?
நின்னைச் சிலவரங்கள் கேட்டேன்—அவை
நேரே கொண்டு தரல்வேண்டும்.
தோளை வலியுடையதாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக்கொண்டு பிளந்தாலும்—கட்டு
மாறா உடலுறுதி தந்து—சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல்——ஒளி
நண்ணித் திகழுமுகந் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறி—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்'

என சத்திய வாழ்வு பெற வேண்டி நிற்பார்.

இன்னணம் சத்தியின் பேரின்ப வாரியில் நீராடிப் பின், பாரதியார், இடியும் புயலும்போல, 'ஆ! ஆ!! ஓம் காளி-வலிய சாமுண்டி—ஓங்காரி!' என உலகம் திகைக்க கட்டில்லாத பேரொலியினை எட்டுத் திசையும் பரப்பிப் புல்லர் இகலையும் அச்சத் துயரையும், துச்ச நினைவுகளையும் வெருட்டுவார். அருளும் அன்பும்பொருளும் அழகும் விளங்குமாறு,

'நல்லதுந் தீயதுஞ் செய்திடுஞ் சத்தி
நலத்தை நமக்கிழைப்பாள்!
அல்லது நீங்குமென்றே யுலகேழும்
அறைந்திடுவாய் முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காணிங்கு
சொல்லுமவர் தமையே
அல்லல் கெடுத்தம ரர்க்கிணையாக்கிடும்;
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்!'

என தெய்வப் புன்னகைப் பொங்கிட வீரத்தினவால் மகிழ்ந்து பாடுவார்.

இயற்கையன்னையாகிய சத்தி இவர்பால் தானேயாகி நிறைந்து நிற்க, அந்நிலையால் பிறக்கும் இயல்புடைய நாவியன் ஒலி, மகரவொற்றோடு தொடர்புகொண்டு நாதத்தை எழுப்பி, நெட்டெழுத்தாலும் குற்றெழுத்தாலும் தொழில்பட்டு முறற் படுங்காலை, ஓசையின்பம் பாரதியாரிடத்தே கிளர்ந்தெழும். பாரதியாரின் உடலமே பராசக்தியின் இன்பக் கருவியாகமாற, அவரது பாக்களிலே சுதந்திரமாகிய பதந்தரும் பராசக்தி இடையறாது உலவத்தொடங்கியது. இத்தகைய ஓசையின்பம், கடலினை நிகர்க்கும் சொல்லின் இனிமையினைப் பயந்து பொருட்பரப்பினை வரையறுத்து நிற்குமென்பது வெள்ளிடை மலை. செஞ்சொல்லாற்றலானும் அவாய் நிலையானும் களித்துச் செல்லும் பொருட்பரப்பு, இவரது பாக்களின்கண் ஓங்கி நிற்றலால், அவைகளை உணருந்தோறும் அவரது இன்பப்பண் முழக்கங்கள் மாந்தரின் உள்ளத்தை கூர்வாள் போல் ஊடுருவித் தாக்கி, அன்னாரது ஆர்வங்களைக் குலுங்கச் செய்யும் பெற்றியுமுடையவாயின. அவற்றை ஓதுந்தொறும், அவற்றின் கருத்துக்களை நினைக்குந்தோறும், செவிக்கினிய அப் பண்கள் பாமரர்களுக்கு மருந்து போன்று ஆறுதலளிக்கும். மற்றும் அன்னாரது நரம்புகளில் உயிர்த்தேன் ஊறித் ததும்பும். உரிமையின் உயிர்ப்பு அவரது சிந்தனைக் குழலில் துள்ளியெழும்.

உரிமை வேட்கையாற் சொன்ன பாரதியாரது பாவியல்பு அவருக்கு எத்தகைய இயற்கையின்பத்தையும் ஓசை நலத்தினை

யும் அளித்ததோ, அதனையொத்த யின்பத்தையும் நலத்தையும் ஒருங்கே அடைவிக்கச் செய்வது அவரது கவிமாண்பதென்பது மிகையாகாது. இயற்கையின்பத்தில் திளைத்து விவரிக்கும் பாரதியாரது முறை, இவரது கவிதைக்கு ஆக்கும் ஆற்றலைத் தந்துதவியது. இத்தகைய ஆற்றல், அழகை வளர்த்து அருளைப்பொலியச் செய்வதினுன் அவரது இயற்கையின்பத்து இதயக் கவிதை, மக்களை இயற்கையன்னையின் வழியில் காதலுறவால் பின்பற்றச் செய்து அன்னவர் உணர்வொடும் ஒன்றும் பான்மையுடையதாக உள்ளது. மற்றும் அன்னார்க்கு இயற்கை வாழ்வின் இன்பத்தையும் அமைதியினையும் அழகினையும் ஒருங்கே அளிக்க வல்லது. இன்னணம் இயற்கை நிகழ்வோடு மனனுணர்வு பின்பற்றி இயற்கையன்னை வழிச்செல்லின், ஆங்கே வையமெல்லாம் ஒருங்கு கூடி மகிழ்ந்து குலாவுமென்பதில் உறுதிகொண்ட பாரதியார், இயற்கையிற் இறையின்பத்தையுண்ட உள்ளெழுச்சியால் தம் பாக்களில், மக்களுணர்வை இயற்கையின் உணர்வாக மாற்றி, இயற்கை நியதியோடு புணரவைத்து மனமுருகுவாராயினுர்.

இதனுன் இயற்கையின்பால் துலங்கிடும் வீர சுதந்திரம் இவர் பாக்களில் ஆத்ம சுதந்திரமாக வீறிட்டெழுந்து களிநடம் புரிந்து பாரதியாரது கவிதையினை அணியுறத் தழைத்து வாழச் செய்துள்ளது.

செய்யுள் நடை.

இரா. இளந்திரையன், B. A., (Hons.)

அரிசி மாவும் உளுந்து மாவும் சேர்ந்த ஒரு கலவையைக் கொண்டு தோசையும் வார்க்கலாம், இட்டலியும் செய்யலாம். தோசையிலும் இட்டலியிலும் உள்ளீடு அல்லது உட்பொருள் ஒன்றே. ஆயினும் அப்பொருள் கையாளப்பட்ட முறையினுல் இரு வேறு பண்டங்களாகப் பெறப்பட்டது. இதுபோலவே ஒவ்வொரு மொழியிலும் கருத்துக்களை வெளியிட இருவேறு முறைகள் உள்ளன. ஒரே கருத்து ஒருவகையாக வெளியிடப்படும்போது உரை நடை என்று பெயர் பெறுகின்றது; வேறுவகையாக வெளியிடப் படும்போது கவிதை அல்லது செய்யுள் என்று பெயர் பெறுகின்றது.

கவிதையாக அல்லது செய்யுளாக வெளியிடப்பட்ட பொருள் செய்யுள் நடை உடையதென்று கூறுகிருேம். 'செய்யுள்' என்ற சொல்லிலேயே அந்த நடையின் இயல்பு ஒருவாறு புலப்படுகின்றது. 'சமக்கிருதம்' என்ற சொல்லுக்குச் செப்பஞ் செய்யப்பட்ட மொழி என்று பொருளாம். 'செய்யுள்' என்ற சொல்லிலும் செய்யப்பட்ட அல்லது செயற்கையான என்னும் பொருள் குறிப்பாக வெளிப்படுகின்றது. அஃதாவது செயற்கை வரையறைகளையும் அமைப்பு முறைகளையும் உடையது செய்யுள் நடை என்று கொள்ளலாம்.

இங்கே நமக்கு ஓர் ஐயம் எழுவது இயற்கை. பழந்தமிழ் இலக்கியங்கள் யாவும் கவிதைநடை யுடையனவாகவே இருக்கின்றன. எனவே அவை செயற்கைநடை யுடையனவா? என்ற ஐயமே அது. பழந்தமிழ்ப் பாட்டுக்களில் சில செயற்கை அமைப்பு முறைகளிருப்பினும் அவை பெரும்பாலும் உரைநடையின் இயல்பைப் பின்பற்றியே ஓடுகின்றன. அதுபற்றியே அவை செய்யுள் என வழங்காமல் பாட்டு என வழங்கி வருகின்றன.

செய்யுள் நடைக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடு காலப்போக்கில்தான் உணரப்பட்டது. பிற்காலச் சோழர் காலத்

தில் தமிழ்க் கவிதையில் வைதருப்பம், கவுடம், என இருவேறு நெறிகள் பின்பற்றப்பட்டதாக அறிகின்றோம். இவற்றுள் வைதருப்ப நெறி பெரிதும் உரைநடையின் இயல்பு தழுவிய சங்கப் பாடல்களின் தன்மையை ஏற்கிறது. கவுட நெறியோ செயற்கை நியதிகள் மிகுதியாகவுடைய ஓர் அமைப்பு முறையைப் பின்பற்றுகின்றது. இக்காலத்துக்குப் பிற்பட்ட நூல்கள் பெரும்பாலும் கவுட நெறியையே பின்பற்றியுள்ளன. அஃதாவது செய்யுள் அப்போதுதான் தனக்கெனத் தனிநடை பெற்று, உரைநடையோடு அதிகத் தொடர்பின்றி வளரத் தலைப்பட்டுள்ளது.

தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின் முதற் பகுதியில் இவ்விரண்டு நெறிகளும் தெளிவாக ஆராயப்படுகின்றன. அதிலிருந்து செய்யுள் நடையின் இயல்புகளை எளிதில் விளங்கிக் கொள்ளலாம். வைதருப்பநெறி என்னும் செய்யுள்நடை பத்து வகையாகப் பகுத்துப் பேசப்படுகின்றது. கவுட நெறியின் தன்மைகளும் அங்கங்கே ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

செய்யுளில் இனிய ஓசை இருக்கவேண்டும், முக்கியப் பொருளின் வினையை அதனோடு தொடர்புடைய பொருளின் மேலேற்றிக் கூறிச் சுவையை மிகுவிக்க வேண்டும், குறிப்பால் பொருள் புலப்படுத்தும் ஆற்றல் வேண்டும், பொருள் தெளிவுக்குச் செய்யுளிலுள்ள சொற்களின் வேறான சொற்கள் வருவிக்கும் இன்றியமையாமை இல்லாதிருக்கவேண்டும் என்னுமிவை இரண்டு நெறிகளுக்கும் ஒப்ப முடிந்த கொள்கைகள். நெடிலும் வல்லினமும் ஒற்றடுத்தும் அடாதும் வருவதனாலேயே நடையில் செறிவு ஏற்படும் என்பது வைதருப்ப நெறியார் கொள்கை, ஓரின வெழுத்துக்களாலமையும் நடையே செறிவுடையதாக இருக்கும் என்பர். ஒலியொருமைப்பாடு ஓரின எழுத்துத் தொடையில்தான் எளிதில் அமையும். நடையில் தெளிவு ஏற்பட வேண்டுமாயின் திரி சொற்கள் சேர்தல் கூடாது என்பர் வைதருப்ப நெறியார். கவுடர் இதற்கு மாறுபடுவர். இவ்வாறு வெள்ளையாக எழுதுதல் உரை நடையின் இயல்பினது என்பது அவர் கருத்து. எனவே கவுடர், "பொய்யாமை பொய்யாமையாற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்பதுபோல் சொல்லாற்றலுடையதே தெளிவான நடை என்பர். இதுபோலவே மூவகை எழுத்தும் கலந்து பாடுவதை வைதருப்ப நெறி சமநிலை எனக் கொள்ளும். கவுடரோ, அவ்வாறு பாடுவது உரைநடையாகிவிடும். எனவே சிறப்பாக வல்லோசை பயின்றுவருவதே நல்ல நடை

என்பர். வழிமோனையால் உண்டாவது நல்ல சொல்லின்பம் என்பர் வைதருப்பர். கவுடர் அதனோடு அமையாது அலை எழுச்சி வீழ்ச்சிபோல் முறையான இசை இயக்கமுடைய நடை வேண்டுமென்பர். சொற்சுருக்கம் காரணமாக மிகுதியான தொகை நிலைத் தொடர்களை வழங்கலாம். அது சிறந்ததென்பது வைதருப்பர் கொள்கை. கவுடரும் சொற்சுருக்கம் விரும்புவராயினும் கற்பாரை இடர்ப்படுத்தும் தொகைகளை மிகுதியாக வழங்குவதை அவர் உடன்படார். இறுதியாக, ஒன்றினை உயர்த்திக் கூறுங்கால் உலக நடையிறவாதிருக்கவேண்டும் என்பது வைதிருப்ப நெறியார் கொள்கை- ஆனல் சுவைமிகுவிக்கும் நோக்கோடு உலக இயற்கை கடந்தும் வருணிக்கலாம் என்பது கவுடநெறியார் கொள்கை.

இத்தனை நடைவேறுபாடுகளையும் ஆராய்ந்த தண்டியலங்கார உரையாசிரியர் செய்யுள் நடைகளைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார் : பொருள் எளிதில் விளங்கத் தக்கதாய்ச் சொல்வன்மையில்லாததாய் விளங்குகின்ற மிடுக்கில்லாத நடையொன்றுண்டு; அது வைதருப்பம்... பொருளழுத்தமும் சொல் வன்மையுமுள்ள மிடுக்கான நடையொன்றுண்டு; அது கவுடம். எந்நடைக்கும் ஓசையுடைமையும் ஆழமுடைமையும் இருத்தல் வேண்டும்."

வைதருப்ப நெறி உரைநடையின் போக்கை மிகுதியாகத் தழுவியுள்ள தென்பதையும் கவுடநெறி அதினின்றும் வேறுபட்டியல்வது என்பதையும் இவ்வாசிரியரின் கூற்று வலியுறுத்துகின்றது. வைதருப்பமும் செய்யுள் நடையே யாயினும், கவுட நெறியை நோக்க அது செய்யுள் நடையையும் தழுவியுள்ள உரை நடை போலவே தோன்றுகின்றது. கவுடநெறியோ உரைநடையிலிருந்து தன்னை முழுவதுமாகப் பிரித்துக்கொண்டு தனக்கெனத் தனித் தன்மைகள் பெற்றுத் தனிநடையாக விளங்குகின்றது.

உரைநடையே இலக்கியத்தில் இல்லாத காலத்தில் வைதருப்ப நெறி நிலவியது. உரைநடை இலக்கியத்தில் இடம்பெற்றபோது, அநேகமாக உரையாசிரியர்களின் காலத்துக்குப்பின், செய்யுள் தனக்கென ஒரு நடையை வகுத்துக்கொள்ளவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அந்த நிலையில்தான் பிற்காலப் புலவர்கள் கவுடம் என்னும் செய்யுள் நடையைப் பின்பற்றலாயினர். அதுமுதல், செய்யுளியல்புக்கு ஒத்தனவாக வைதருப்ப நெறியிலிருந்த சில இயல்புகளையும் தழுவித் தனிநடையாக, செய்யுள் நடையாக வளர்ந்து வந்தது கவுடநெறி.

இனி செய்யுள் நடையின் அடிப்படைத் தன்மை அதன் இசையமைதியாகும். வைதருப்பம், கவுடம் எனப் பிரிந்து பத்துவகை இயல்புகளாகக் கிளைத்த செய்யுள் நடையின் தன்மை அதன் இசையமைதியை அடிப்படையாகக் கொண்டதாகும். இனிய ஓசை வல்லோசைச் செறிவு, சொல்லாற்றலால் பொருளைப் புலப்படுத்துதல், ஓரின எழுத்தே மிடைந்து வருதல், குறிப்பால் பொருள் (தொனிப் பொருள்) சிறத்தல் என்பனபோன்ற இயல்புகள் யாவும் இசையை அடிப்படையாகக் கொண்டனவேயன்றோ? இத்தகு செய்யுள் நடை ஓசை வரையறைகளை யுடையதாயிருத்தல் இன்றியமையாததென்பதனை யாரும் மறுக்க முன்வரார்.

உரைநடை பெரும்பாலும் ஓவியம் போன்றது. வாய்விட்டுப் படித்துத்தான் கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்ற நியதி அதற்குக் கிடையாது. தெளிவான உரைநடை எடுத்தல், படுத்தல் முதலிய நாடகப் பண்புகளும் - தொகுத்தல், வலித்தல், மெலித்தல் முதலிய செய்யுள் இயல்புகளும் கலவாதது, ஆதலின் அஃது ஓவியம்போல் காட்சிக்குப் பொருள் சிறக்கும். செய்யுள் நடையோ முற்கூறப்பட்ட செறிவு முதலிய இயல்புகளையும் நாடகத்தின் சாயலையும் உடையதாதலின் ஓசை வேறுபாட்டாலேயே பொருள் சிறக்கும். இடத்துக்கும் உணர்ச்சிநிலைக்கும் ஏற்ற ஓசை விகற்பங்களே செய்யுளில் பலவகையான நடைகளைத் தோற்றுவிக்கும். ஆதலால்தான் செய்யுள் நடையை ஒலியின் வேறுபாட்டைக்கொண்டு வெவ்வேறு வகைகளாகப் பிரித்துள்ளனர்.

தமிழ் யாப்பிலக்கணம் செய்யுள் நடையை ஒலியின் அடிப்படையில் பாகுபாடு செய்துள்ளது. செப்பலோசை, அகவலோசை துள்ளலோசை, தூங்கலோசை என்பன அவற்றுள் முக்கியமான பிரிவுகளாகும். செய்யுள் பல வரையறைகட்குட்பட்டு இயங்குவதாலும் ஒலிமுறைப் பாகுபாட்டுக்கு இயைந்து வருவதாலும் இந் நான்கு வகைகளுக்குள்ளும் செய்யுள் நடையை அடக்கிவிடலாம். செய்யுள் நடையை நான்காகப் பிரித்து, அவற்றுக்கு முறையே **'செப்பல்நடை' 'அகவல்நடை' 'துள்ளல்நடை' 'தூங்கல்நடை'** எனப் பெயர் தரலாம்.

இனி, அசை, சீர், தளை, தொடை முதலிய கட்டுப்பாடுகளுடன் இயங்கும் செய்யுள் நடை, பொருட்சிதைவின்றி இயங்கவேண்டு

மாளுல் அதற்குச் சில புற நடைகளும் கொடுக்கவேண்டுமல்லவா? இத்தனிச் சலுகைகளே ஏகாரம், ஓகாரம், அசைநிலை, சாரியை முதலியனவும் வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், தொகுத்தல் ஆகியவற்றை ஆங்காங்குப் பயன்படுத்தும் வாய்ப்பு முதலியனவுமாகும். இவை ஓசை நயம் சிறக்கவும் பொருளை வெளிப்படுத்தும் ஆற்றலை மிகுதிப்படுத்தவும் உரிய இடங்களில் பயன்படுத்தப்படும்.

செய்யுள் நடையில் கருத்தை வெளியிடுதல் சிறந்த கலையாகக் கருதப்படுகின்றது. கருத்துக்களை வெளியிட மனிதன் கையாளும் ஒவ்வொரு மூறையும் கலையாகவே கருதப்படுகின்றது. எனவே சுவைபட அதனை வெளியிடும் முறை சிறப்பிக்கப்படுதலில் வியப்பில்லை. செய்யுள் நடையில் கருத்தை வெளியிடும் ஆற்றல் பிறவியிலேயே அமைந்திருப்பது என்னும் கொள்கை ஒன்று உண்டு. கலைஞர்களான யாவரையுமே 'கருவில் திருவுடையோர்' எனக் கூறுதல் உலகில் ஓர் மரபாக இருந்து வருகின்றது. இக்கருத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், முற்றிலும் தவறு என்று தள்ளி விடுதற்கான சான்றுகளோடு ஆராய்ச்சி செய்து யாரும் முடிவு கண்டிருப்பதாகவும் தெரியவில்லை. அறிஞரிடையே இதில் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. எனினும் இளமையில் ஒருவனின் உள்ளம் யாதாயினும் காரணத்தோடோ, காரணமே இன்றியோ ஒரு துறையில் ஈர்க்கப்பட்டால், அவன் அத்துறையில் எளிதில் பயிற்சியும் பழக்கமும் பெற்றுச் சிறந்து விளங்க முடிகிறது. செய்யுள் நடையில் கருத்தை வெளியிடும் ஆற்றலையும் இவ்வாறு அமைந்து சிறக்கும் ஒன்ருகக் கொள்ளலாம்.

பிற துறைகள் போலவே செய்யுள் நடைத் துறையும் பயிற்சிக்குத் தக்கவாறு வளம்பெறுகின்றது; புதுமையுறுகின்றது; எழுச்சியுறுகின்றது என்பதெல்லாம் முற்றிலும் உண்மை. ஆளுல் அத்துறையில் நாட்டமே இல்லாத ஒருவன் அதனைப் பயின்று சிறப்புறுதல் இயலாது. இயற்கை விழைவில்லாத உள்ளத்திற்குக் கொடுக்கப்படும் பயிற்சி 'நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாதே'.

யாவற்றுக்கும் மேலாக, உள்ளங் கவர்ந்த ஒரு பொருள் உள்ளத்தே உருப்பெற்றுவிடுமாளுல் அந்நிலையே நந்நடையில் அது வெளிப்பட்டே தீரும். இதனையே,

"உள்ளத்தில் உண்மையொளி
உண்டாயின் வாக்கினிலே
ஒளி யுண்டாகும்"

என்றனர். ஆனால், அப்போதும், முன்பின் பயிற்சியில்லாத ஒரு துறையில் அக்கருத்து வெளிப்படும் என்பது எப்போதும் நிகழ்வ தல்ல; எப்போதோ நிகழ்வது!

செய்யுளைப்பற்றி நன்னூலார் கூறும் கருத்து ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல் பல
சொல்லால் பொருட்கிட னாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

(நன்னூல்)

செய்யுள் நடையானியன்ற ஒன்றைச் செய்யுள் என்று குறிப் பிடுகின்றார் ஆசிரியர். இந்நூற்பாவின் பெரும்பகுதி பொருள் பற்றியதாயினும், 'அணிபெற' என்னும் தொடர் நடைபற்றிய குறிப்பைத் தருவதாகும். எப்பொருள்பற்றிக் கூறினும், கூறும் முறையில் அழகுஇருக்கவேண்டும்,—அழகு செய்து கூறவேண்டும் என்பதே இதன் கருத்து. முன்னர்க் குறிப்பிட்ட இயல்புகளால் செய்யுள் நடை அழகுபெற வேண்டும் என்பதை இது தெளிவு படுத்துகின்றது. எனவே செய்யுள் நடை, முயற்சியே இன்றி இயல்பாக வெளிப்படும் உரைநடையினின்று மாறுபட்டுச் செயற்கை அழகுகளையுடையதொன்றாக மிளிர வேண்டுமென்றாகிறது.

அழகுபடுத்த வேண்டும் என்றமையின், உவமை உருவகம் முதலியவற்றையும் ஒழுகிசை இன்னிசை முதலியவற்றையும் சேகரித்து வைத்துக்கொண்டு செய்யுள்நடை எழுதவேண்டுமென்ப தில்லை. நாட்பட்ட பழக்கத்தில் இயல்பாக வரும் செயற்கையே செய்யுள் நடையை அழகுபடுத்துவதோடு கருத்தையும் வளப்படுத் தும். பல வரையறைகட்குட்பட்ட செய்யுள்நடை பெரிதும் செயற் கையே யாயினும், கையாளுவோனின் இயல்பான ஆர்வத்தாலும் நெறியான பழக்கத்தாலும் இயற்கையாகவே வெளிப்படும் இயல் பைப் பெற்றுவிடுகின்றது. அவ்வாறு இயற்கைவயப்பட்ட செயற்கை நெறியே செய்யுள் நடையின் சிறப்பாகும்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

பாரி.

ச. பாலசுந்தரம்,

காட்சி 2.

[படைக்கூடத்தில் போர்க்கருவிகள் வேலையின்றிக் கிடத்த லினால் வீரர்கள் நெய் பூசிக்கொண்டிருக்கிறார்கள்]

வீரன் 1: குன்றைப் பிளந்தொரு தோளினிலே—கொள்ளும்
கூற்ற மறவர் தம் வாளினிலே,
என்றைப் பொழுதினில் செங்குருதி—வெள்ளம்
ஏற்றம் புரியும் எனக்கருதி

வீரன் 2: துள்ளும் உளத்தினை யார்மதித்தார்—இகல்
தூங்குங் களத்தினை யார் மிதித்தார்?
கள்ளும் கறியும் மிகுந்தளிப்பார்—வளர்
காதல் உணர்வைப் பகுந்தளிப்பார்.

வீரன் 3: வீரரென் போருக்குப் பாரியின் ஆட்சியில்
வேலை குறைந்ததடா—அவர்
வேட்கை நிறைந்ததடா
சேரரும் பாண்டிய வீரரும் சோழரும்
சேர வருவாரோடா—புகழ்
தீரப் பொருவாரோடா.

வீரன் 1: வென்று வரும்பகை இன்றி மறவர்கள்
குன்றி யிருந்தாரடா—அவர்
கொள்கை திரிந்தாரடா.
நன்றி உணர்வினைச் சென்று புரியுநாள்
இன்றி ஒழியுமோடா—பகை
இன்றி அழியு மோடா.

வீரன் 2: வாளுக்கு வேலையில்லை—இந்த
வேலுக்கும் வேலையில்லை.

வீரன் 1 : ஆளுக்கும் வேலையில்லை—உங்கள்
ஆண்மைக்கு வேலையில்லை.

வீரன் 3 : வில்லிற்கு வேலையில்லை—கணை
வீரர்க்கும் வேலையில்லை.

வீரன் 4 : கொல்லற்கும் வேலையில்லை—துடி
கொட்டும் முழக்கமில்லை,

எல்லோரும் : வேலையிதுதானு—மள்ளர்—வேலையிதுதானு
காலையும் மாலையும் உண்டு கொழுப்பதும்
சோலையி லேவிளை யாடித் திரிவதும்—(வே)

பணியாள் : [வந்துகொண்டே]
விளையாடும் வீரர்களே மன்னன் ஆணை.

எல்லோரும் : என்ன?என்ன? போரெங்கே எங்கே எங்கே?

பணியாள் : போருமில்லை கீருமில்லை—வேட்டைக் காக
வைகறையில் வரவேண்டும் என்ப தாணை
(போகிருன்)

வீரன் 1 : களிற்றுப் பசிக்கொரு கைப்பிடி சோற்றினை
காவலன் தந்தனன் பாருங்களே—ஒன்று
சேருங்களே—போவோம்—வாருங்களே.

[பாரியும் படை வீரர்களும் மலைக்கானில் உள்ள கொடு விலங்குகளைக் கொன்று பகை நீக்கிய பின்னர் வீரர்கள் உண்டாட்டு மகிழ்ச்சியால் ஆங்காங்கே தங்கிப் பேசி மகிழ்கின்றனர்.]

வீரன் 1 : ஓவிய மென்ன உயர்வரிப் புலியும்
மேவிய வெண்பிடர் மிகுவலி யாளியும்
கள்ளக் கரடியும் முள்ளம் பன்றியும்
கொள்ளியை நேர்விழிக் கோள்வலிச் சிறுத்தையும்
விற்படைக் கெதிரியும் வேல்வாய் வீழ்ந்தும்
பற்பல விலங்குகள் பாரியின் போரினுல்
மடிந்த அக்காட்சியை மறப்பதும் ஒல்லுமோ?

வீரன் 2 : அப்பப்பா அப்புலி அலறிமேல் வந்ததும்
எப்படி வீழ்த்தினன் இமைப்பொ ழுதுள்ளே!
செப்பரும் வீரன்நம் செம்மல் அவன்விடும்
ஓரிரு அம்பால் உலகும் மடியுமேல்
நேரிய விலங்கினம் நிகரோ அவற்கு?

[சில வீரர்கள் அவ்விடம் வருகிறார்கள்]

வீரன் 3 : நல்லதோர் வேட்டை நண்பா இன்றுநம்
வல்லமை சிறிதே காட்டினோம் வனத்திடை

[அப்பொழுது ஒருவன் அஞ்சி ஓடிவந்து பேசுகிறான்]

வீரன் 4 : பிழைத்தேன் பிழைத்தேன் !

வீரன் 2 : ... ... என்னடா பிழைத்தாய் ?

வீரன் 4 : சற்றே தப்பிடின் சாவினை அடைந்தேன்
பெற்றோர் செய்த பெருந்தவத் தால்தான்
என்னுயிர் பெற்றேன்......

வீரன் 1 : ... ... ஏ ஏ ! பயந்தனை

வீரன் 4 : உன்னெதிர் வருமெனின் உளறாய் நீயும்
சொல்வதற் கென்ன பல்வலித் திடுமோ ?

வீரன் 1 : பெரும்புலி யோவரிப் பிணவோ உன்னை
நெருங்கிய அவ்விலங் கெவ்விடம் நேர்ந்தது?

வீரன் 4 : எவ்விடம் நேர்ந்ததோ என்கண் திறந்து
செவ்விதின் கண்டிருந் தாலது தெரியும்
சிறுதூ றுக்குள் சிலுசிலுப் பொலியினை

வீரன் 3 : குறுமுய லோபிணைக் குருளையோ என்னவோ ?

வீரன் 4 : முயலோ எலியோ முழுவதும் அறியேன்
ஒருமுழக் காதும் வெள்ளை உடம்பும்
வருமொரு காதம் வாசியும் தோற்கும்
அயலோர் புதரினை அடைந்தேன் பிழைத்தேன்
ஆயுதம் இருந்தால்

வீரன் 2 : ... ... என்செய் திருப்பாய்?

வீரன் 4 : ஆளி யாயினும் கோளரி யாயினும்
மீளி யாயினும் மிடல்வலி யானை
யாயினும் எதிர்ப்பே.........

[அப்பொழுது மரத்திலிருந்த குரங்கொன்று அக்கிளையில் தாவ கிளை அவன்மேல் மோதிச் செல்லுகிறது.]

ஐயோ! அப்பா! பேயோ புலியோ [மூர்ச்சிக்கிறான்]

[ஒருவன் நீரை முகத்தில் தெளிக்க] அய்யோ செத்தேன்...

வீரன் 5 : ஆயிரம் வீரருள் அண்மைக் கொருவன்நீ
பேயெனும் பொருளைநீ பார்த்ததுண் டோடா?

வீரன் 4 : வாயால் பேச எனக்கா காது?

[எல்லோரும் சிரிக்கிறார்கள். பின்னர்]

வீரன் 1 : அரசர் எங்கே அயர்வுடன் உளரோ?

வீரன் 5 ; சோர்வினைப் போக்குவான் சுனையிடைச் சென்றார்...

வீரன் 1 : வீரர்கள் எங்கே?

வீரன் 5 : ... ... விருந்துண்கின்றார்
முள்ளுடை ஏனம் மொய்வலி மரையான்
கொள்ளியின் நோக்கும் குறுமுயல் வாட்டிச்
செந்தேன் கலந்த தீஞ்சுவை உண்டு
சந்தார் மரநிழல் தங்கினர்......

வீரன் 1 : ... ... நாமும்
மலைவளம் காண மகிழ்ந்துசெல் வோமே?
கலைநலம் காண்போம் காட்சியிற் சிறந்த
கல்வியும் இல்லை செல்வமு மற்றே

எல்லோரும் : செல்வோம் செல்வோம்

வீரன் 3 : ... ... சிறந்தஇம் மலைதனில்
புல்வாய் ஓடும் பொலிவும் பொன்முக

மந்தியை மகிழும் அந்திவான் முகத்துக்
கடுவனின் காட்சியும் கறங்கிவீழ் அருவியும்
மடுவொடு சுனையும் மகிழ்ந்துடன் காண்போம்.

வீரன் 2 : கோடல், தோன்றிக்' கொடிமகிழ் வகுளம்
வாடல் செய்யா வல்லிநன் முல்லை
நீடிய வெதிரின் நெல்வளம் நிலைசேர்

குராவும் மராவும் கொந்தார் வேங்கையும்
பிடாவும் தளாவும் பெருஞ்சுளைப் பலாவும்
முகில்தொடு மூங்கிலும் மூசுவண் டாற்றும்
பூவுங் கொடியும் புதரும் செடியும்
சோர்வினை அகற்றும்,

வீரன் 3 : ... ... வார்குழல் மங்கையர்
சாயலை ஒத்திடும் மாமயி லாடவும்
வாயினிற் கிள்ளைகள் வண்ணம் பாடவும்
கருங்குயில் மரந்தொறும் பொருந்திசை சேர்க்கவும்
வண்டுயாழ் மிழற்றவும் விண்டாழ் அருவிகள்
நன்முழ வாரவும் நஞ்செவி களித்திடக்
கேட்டலுமாமிக் காட்டிடை

வீரன் 1 : ... ... ஆமாம்
நன்றுநன்று நாம் அனைவரும் செல்வோம்

[இயற்கை நலங்களை கண்ணாலும் செவியாலும் கண்டும்
கேட்டும் மகிழ்ந்துரையாடுகின்றனர்.]

வீரன் 2 : தாமரை முகமாய்த் தண்புனல் சேர்ந்த
ஏமுறு பாசியே எழில்சேர் குழலாய்
முல்லைநன் முறுவலொடு வள்ளைச் செவியாய்
அல்லியின் செவ்விதழ் அரும்பு நகைகூட்டிக்
கற்பக வல்லியே காமுறு மேனியாய்
அற்புறு தளிர்க்கரம் அமையக் காட்டி
நற்குடி மகள்போல் நன்மலர்ச் சோலையும்
பொற்புறு சுனையுமாங் கிணைந்துட னிருக்கும்
அற்புதப் பெண்ணணங் கழைத்தலைப் பாரீர்!

வீரன் 3 : சங்கொடு தாரையும் துந்துபி முழக்கமும்
தங்கிய முழவொலிப் பொங்கிடு மார்ப்பும்
மண்டிய காற்றொடு கொண்டல் முழங்கும்
இன்னிசை யாழோ டெழிலார் கின்னரிப்
பின்னிசை எல்லாம் பெருங்குயில் கிளியொடு
வண்டுகள் இசைக்கும் வனப்பினைக் காணீர்!

வீரன் 4 : நன்மணச் சாந்தம் நம்முடல் தோய்ப்பநன்
மென்மலர்த் தாதுகள் மெல்லநன் குதிர்த்துத்

தென்றல் சாமரைத் திறமுடன் வீசிக்
கன்றிய நற்கனி கனிவுடன் கிளைக்கரம்,
தாங்கி யங்கழைக்கும் தகவினைப் பாரீர்!

வீரன் 1 : அம்மமம! இவையெலாம் அரும்புல வோரும்
செம்மையிற் கூறுந் திறம்வாய்த் தனரோ!
இயற்கையின் வனப்பினை யாவரே முடிவுற
இயம்புதற் குரியார்? இயற்கையே தெய்வம்
உலகத் துயிரெலாம் உண்மையில் வாழ்வது
அலகிலா இயற்கை அன்னையா லன்றே?
உணவும் உடையும் உயிர்ப்புறு காற்றும்
வெம்மையும் தண்மையும் வீறும் ஏரும்
எண்ணமும் திண்ணமும் இலகுறும் ஒளியும்
அணியும் மணியும் அவள்தரும் பொருளே
நிலனும் புலனும் நிறைந்தவ ளுறைவாள்
கண்ணுறும் இயற்கையே கடவுளின் தோற்றம்
இயற்கை அளிப்பதே இறைவன் அளிப்பது
செயற்கையும் இயற்கையின் சிற்சில கூறுதான்
இயற்கையை ஓம்பலே இறைவழி பாடெனக்
கண்டனர் மண்டல மீதினி லுறையும்
எண்டிசை யும்புகழ் தண்டமிழ்ப் புலவர்

வீரன் 4 : ஆயின் சிறிதே அமர்ந்துநாம் இயற்கையில்
தோய்வோம் காட்சி சுகத்தினை நுகர்வோம்.

வீரன் 3 ; அரசரும் வீரரும் இவ்வழி யேதான்
வருவர் வரும்வரை ஈண்டினி திருப்போம்.

[அப்பொழுது அரசன் பாரியும்—வீரர்களும் கால் நடையாய் சேய்மையில் வருகின்றார்கள்.]

வீரன் 1 :- நண்ப! நம் வீரர்கள் நண்ணுகின்றாரதோ.

வீரன் 2 :- பண்புடை அரசர் பரித்தேரெங்கே
வீரர்கள் மட்டும் விரைகின்றனரே!

வீரன் 1 :- பின்னே வருவார் மன்னர் பெருமான்
யாரது நடுவே? அரசர்! ஏனிது

புவிமிசை நடந்து போதரு கின்ருர்
நவமணிப் பொற்றேர் எங்கே நண்பா?

வீரன் 3:- புரவிகள் மட்டும் போதருகின்றன!

வீரன் 1;- சரி சரி வரட்டும் சார்ந்தபின் பார்ப்போம்
[பாரியும் வீரர்களும் நெருங்கியபின் வீரர்கள் எழுந்து பணிந்து]

எல்லோரும்:- வாழ்க எம் அரசர்! வணக்கம் மன்னவ

பாரி :- மின்னெளிர் வேற்படை வீரர்காள் மகிழ்ச்சி.
வயப்புலி அரிமான் வரிமயிர்க் காடி
புயத்தின வகலப் போரினில் மடித்தீர்.
விலங்குறு பகையெலாம் வீழ்ந்தன வீரர்கள்
நலங்கமழ் நாட்டின் நலமினிச் சிறக்கும்
குடிநலம் பேணுமோர் கொள்கையின் மிக்க
கடமை முடிந்தது. தடமலே செல்வோம்

வீரன் 2 :- அரசே நுந்திரு வடிமலர் வருந்த
வருவது காணினெம் மனம்நடுக் குறாஉம்
திறம்புரி வீரரொடு வயப்பரி ஏறிப்
பறம்பினே அடைய வேண்டுதும் யாமே !

எல்லோ :- அறம்புரி அரசே! அருளுக அதுவே !

பாரி :- விரும்பிய வாறே செய்வேன், விரைவினில்
திரும்புக அவ்வவர் தம்மனேச் சேர்க!
யாவரும் நாளே அரண்மனைக் கன்புடன்
மேவுக! நன்றி [அரசன் சில வீரருடன் போகிருன்]

எல்லோ :- வாழ்க எம்அரசர்.

[சிலவீரர்கள் பேசிக்கொண்டு வருகிருர்கள்]

வீரன் :- மன்னவர் மணித்தேர் எங்கே நண்பா?
மால்வரை இழிந்து மடிந்ததோ, உடைந்ததோ?

வீரன் 6 ;. உடையவு மில்லே வீழவு மில்லே
மிடைகானிடையே கொடையாயிற்றது.

வீரன் 3 :- பாரியின் வண்மையைப் பாரினில் உரைக்கும்
சீரியர் யாவர்? தெய்வமும் மருளும்
அறத்தின் கனிவோ டருளும் உடையநம்
மறத்தலை வன்செய் மாண்பென் சொல்வேன்!

வீரன் 4 :- நன்று நன்றுஇங் நடுக்கா னகத்தில்
துன்றிய பாணன் யாவன்? அவன்மிடி
தேரொடு கழியுமோ செல்வம் இன்றி?
மடவோன் மற்றவன் இடங்தெரியாமல்
சோா நின்றனன் பாராய் நண்பா!

வீரன் 6 :- ஆரா யாதுநீ ஐயுற்றனை ஏன்,
பாணனும் இல்லைப் பாவலரும் இல்லை
யாழுடன் அவனைப் பாடவும் இல்லை
ஏத்தவு மில்லை இரக்கவு மில்லை
வனத் திடை அரசன் வன்றேர் கொண்டது
வாயொடு கையும் இல்லா ஓருயிர்...

வீரன் 3 :- ஆ; என்னே வியப்பவ் வின்னுயிர் யாதோ?
இன்னே சொல்லுக நண்பா இதுவரைக்
கண்டதும் கேட்டதும் இல்லா வியப்பாம்

வீரன் 6 :- வண்டினம் இசைக்க வண்டே னளித்துத்
தண்டாக் காதலின் தளிர் நலம் பேணிக்
கண்டார் மகிழக் கால்கொடு நின்று
பெண்டிர் முறுவலின் பெட்புடைத் தாக
பல்லிதழ் விரித்துக் கொல்லெனச் சிரிக்கும்
முல்லையங் கொடிக்கே முழுமனத்துடனே
நல்லியற் றேரினை நல்கினன் நண்பா,

வீரன் 4 :- அசதி ஆடுதற் களவிலை யுனக்கு

வீரன் 6 : அசதியா! அனைத்தும் உண்மை நண்பா
அறமும் அறனும் யாதென் பதைநான்
திறமுடன் இன்றே நேர்படக் கண்டேன்
வாழ்துணை நோக்கிச் சூழ்தரும் வேளையில்

மாரன் அனையவோர் வீரனை எதிர்ந்த
பருவம் வாய்ந்த உருவ மங்கைபோல்
தன்கொடிக் கையால் தளிருட வாடிய
பொன்கொடி, நெடுந்தேர்ப் பொலிவுடன் பற்றிக்
கொண்டது படர்தலைக் கண்டனன் ஆ ஆ
அல்லல் நீங்கியங் கன்புடன் படர்தல்
வல்லியே யாயினும் முல்லையங் கொடிக்குத்
துன்பினை விளைத்தல் தொழுதக வன்றென
கொடுத்தனன் தேரினை விடுத்தனன் புரவியை
அடுத்தனம் யாங்கள் ஆ! அக் காட்சி!
நாணணி பூண்டதோர் நங்கையை ஒப்ப
முல்லைக் கொடியவள் மொக்கினிற் சிரித்து
மெல்லிய தளிர்க்கரம் மேவித் தொழுதனள்
கண்டனன் அரசன் கொண்டனன் உவகை.

வீரன் 3 : விந்தை விந்தை......

வீரன் 4 : (இகழ்ச்சிக் குறிப்போடு) விந்தையே விந்தை
வியப்பதற் கிங்கே வேறென்ன வேண்டும்
சிந்தை திரிந்தனன் செந்தமி ழரசன்
செய்கை மறந்தனன்

வீரன் 6 : .... யா துரைக்கின்றாய்?

வீரன் 4 : கொடுக்குங் கொடையும் கொள்வோர் நிலையும்
அடுக்கும் வகையில் அமையவேண் டாவோ?
மேலும்
ஐயறி வுடைய ஆளியும் வேங்கையும்
மையணி யானையும் மற்றுள விலங்கையும்
பிடித்தொரு வில்லால் மடித்தனன் ஆங்குப்
பிடித்தொரு பிடியும் பொருள் புரியலன்
ஓரறி வுயிரினுக் குவந்தனன் பரிசில்
யாரிது வியவார் ஞாலம் புகழும்
இதுவோ வண்மை இதுவோ நீதி

வீரன் 6 : பேதுறு மொழிகொடு பிதற்றினை நண்பா
கொடும்பகை யகற்றல்செங் கோன்முறை அதனை

8

கொலையிற் கொடியார் தம்மை வேந்தன்
கொல்லுதல் பைங்கூழ் களைஎடுத் தாங்கென
நன்னெறி புலவன் நவின்றனன் மேலும்
மன்னிய உயிர்களுள் மற்றவர்க் குதவி
மகிழ்வுடன் செய்தே மாண்புடன் வாழும்
புகழ்மிகும் உயிர்களும் பொல்லாங் கியற்றி
எத்திறத் தானும் இனஉயிர் கொன்றே
வாழ்வினை நடத்தும் மறம்பயில் உயிர்களும்
என்றிரு திறத்தன இவைகளுள் முன்னதை
நன்றுறப் பேணி நலம்பல செய்தலும்
பின்னதை ஒடுக்கியும் ஒழித்தும் மன்னிய
நாட்டினுக் கமைதியை நாட்டலும் நல்லவர்
சொல்லிய அறமாம் அல்லவை புரிவோர்க்
அறங் கூற்றுதலும் அரசுபகை யாதலும்
திறப்படத் தெரிந்தனம். அதனாற் செங்கோல்
வேந்தன் செய்கடன் விலங்குபகை யழித்தல்
நன்றும் தீதும் நடுநின் றாய்ந்த
மாந்தருள் சிறந்தநம் மன்னவன் செய்கையிங்
கறமாம் என்பதை அறிகநீ மேலும்
கொள்வோர் தகுதியை அருட்கொடை யாளர்
கொள்ளார் மனத்துள், குறிப்பறிந் தவர்மனம்
எண்ணிய வகையில் இயைந்த பொருள்களை
ஈவர் அவரே இசையுடன் வாழ்வோர்
ஈதல் இசைபட வாழ்தல் என்பது
புகழ்வா ணிகம்செய் புன்தொழில் அன்று
இகழ்வார் என்றும் எண்ணுதலின்று

வீரன் 4 :- அருளுடன் கனிதலும் அன்புடனீதலும்
பொருளன் றென்றுயான் புகல்வனோ அல்லேன்
கொள்கொம் பின்றி வாடிய கொடிக்கோர்
மரக்கொம் பமைத்து மகிழ்தலே சாலும்
பகுத்தறி யாதவன் பன்மணித் தேரினை
வகுத்தது மாண்பில என்றே......

வீரன் 6 :- (நகைப்புடன்) நண்பா !
இன்பம் முற்றிடின் இடத்தினை நோக்கா
தன்பு முற்றிடின் அறிவை நாடாது.
என்பே ஆயினும் இன்னுயி ராயினும்
கண்ணே யாயினும் களித்துடன் நல்குவர்
பிறர்புகழ் நோக்கார் பிறந்ததன் கடனென
அறம்புரி நல்லோர் மேலும் கேள்நீ
பால்நிலைக் குழவிப் பரிந்தழக் கண்டால்
மால்பொருளாயினும் வழங்குவர் பெற்றோர்
நோயுறின் மருத்துவன் நுவன்றன எல்லாம்
ஆயுதலின்றி அன்புடன் கொள்வர்
உயிர்ப்பசை யுற்றோர்; உயரளி உடையரும்
தோன்றிய உடனே தொல்பொரு ளாயினும்
ஏன்றவிர் உளங்கொள ஈந்துளம் மகிழ்வர்
படைமடாதவன் பாரி அதுபோல்
கொடை மடம் படுவன் குறிக் கோளின்மையின்
இன்னும் கேள்என் ஏற்புடை நண்பா!
மன்னும் உயிர்க் கெலாம் மகிழ்ச்சியும் வருத்தமும்
இயற்கையில் அமைந்த இயல்பாம் மண்ணிடை
புல்முதலாகப் பெரு மரம் ஈறு
ஈமுதலாக இருங் களி றீறு
எவ்வுயி ராயினும் இன்பமும் துன்பமும்
அவ்வவ் வளவின தாதலை உயிர்நூல்
வல்லவர் அறிவர் வனத்திடை நிற்கும்
பருமரம் ஒன்றின் பசுங்கிளை தடிந்தால்
வருந்துமே அவ்வுயிர் திருந்திய ஓருயிர்
பதைத்திடச் சிதைத்து மதித்திடும் மற்ற
ஓருயிர்க்களித்தல் உயர்வோ? கூறுக.

வீரன் 4 :- காய்ந்த சுள்ளியக் கானிடை யின்றோ?

வீரன் 6 :- உணர்ச்சி வயப்படின் உள்ளம் ஒன்றே
அறிவும் மறையும் நெறியும் பிறவும்
இரக்கந் தோன்றிடின் எண்ணம் விரியா
கேட்போர்க் குறுகுறை ஒன்றே காண்பர்

வேட்கும் பொருளின் வீறறியார்கள்
எப்பொரு ளாயினும் ஏற்புடைத் தேயதை
இப்புவி வாழ்வினில் எங்கும் காணலாம்
பல்படை முன்னொரு வெல்படை மறவன்
புல்லே யாயினும் கொள்ளுவன் படையாய்
அருங்கலம் உடைந்து பெருங்கடல் புகுந்தோர்
துரும்பினைப் பற்றியும் திரும்பிட நினைப்பர்
பெரும் பசியுற்றவர் அருந்தழை யாயினும்
உண்டிட நினைத்தலைக் கண்டனம் அன்றே
அருளும் அன்னதே அறிவுடை நண்பா!
காய்ந்தவோர் சுள்ளியை ஆய்ந்தவன் தேடி
வந்தபின் கொடியினை மைந்துடனகற்றித்
தன்னியல்பாகப் பின்னியங்கேற்றிடல்
நற்செய லாகுமோ சிற்றுயி ராயினும்
கொழுந் தளிர்மேனிச் செழுந்தளிர்க் கையால்
பற்றி அணைந்ததோர் பசுங்கொடி தன்னைக்
களைவதோ வண்மை காணும் இடனெலாம்
விளைவது தெய்வம் வியப்பொரு சிறிதும்
இல்லை நண்பா முல்லைக் கீந்தது.

வீரன் 3 : வேறொரு கொம்பினிற் றன்பிணிப் பதைவிட
தேரினை பிரித்ததைத் தரையினிற் சேர்த்திடல்
சாலவும் நன்றாம் தன்னியல் பாகப்
படரும் அன்றோ?

வீரன் 4 : ... ... பண்புடை நண்பா!
உணர்ந்தேன் உண்மை உணர்ந்தேன் நன்மை
அளித்தல் என்பதன் அரும்பொரு ளுணர்ந்தேன்
இளித்தனன் மடமையால் எனக்கறி வூட்டினை
வாழிய வண்மை வளஞ்சேர் பாரி
வாழிய நெடிதே வையம் புகழவே!

இரண்டாம் காட்சி முடிவு.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி

"முழக்கம்"

[வரலாற்றோவியம்]

கதை—வசனம் "காதலன்"

காட்சி 4.

கிள்ளி :— நீங்கள் கொல்லிமலை நாட்டு குதிரைப்படைத் தலைவர்களா?

முல்லை :— (சிறிது தயங்கி) ஆமாம்! இந்திரவிழாவில் பங்குகொள்ளச் செல்கிறோம்.

வளவன் :— உங்கள் அரசர் ஏன் வரவில்லை?

முல்லை :— அரசாங்க வேலைகள் அதிகம் இருப்பதால் அவர் வரவில்லை.

வளவன் :— உங்கள் இளவரசி மட்டும்தான் இந்திரவிழாவிற்கு வருகிறார்களா?

முல்லை :— ஆமாம்!

வளவன் — முன்னதாகவே சென்றுவிட்டார்களா?

முல்லை :— (சிறிது தயங்கி) தெரியவில்லை.

வளவன் :— உங்கள் இளவரசிக்கு திருமணம் நடக்கப் போகிறதாமே!

முல்லை :— (தயங்கி) ஆமாம்! நீங்கள் யார்? உங்கள் கேள்விகள் எல்லாம் இளவரசியைப்பற்றியே இருக்கின்றனவே! நீங்கள் இளவரசியைப் பார்த்திருக்கிறீர்களா?

தோழி :— ஒருவேளை நீங்கள் இருவரும் காதலர்களோ?

முல்லை :— ஏய் கோணல்! ஏண்டா உன்மூளை இப்படி கோணல் மாதிரி வளையுது.

வள :— அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் இளவரசியைப் பார்த்ததுகூட இல்லை. அழகி என்று மட்டும் கேள்விப்பட்டி

ருக்கிறேன். வாள் வீச்சும் குதிரை யேற்றமும்கூட உங்கள் இளவரசிக்குத் தெரியும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

முல்லை :— நீங்கள் யார் என்று சொல்லவில்லையே!

வள :— (தயங்கி) நான் ஒரு சாதாரணப் போர்வீரன். வேலழகன் என்று பெயர். சோழ இளவரசரின் அன்புக்கு உரியவன்.

முல்லை :— உங்கள் இளவரசற்கும் திருமணம் நடக்கப் போகிறதாமே!

வள :— ஆமாம்! அப்படித்தான் சொல்லிக்கொள்ளு கிறார்கள்.

முல்லை :— மணப்பெண் எந்த நாட்டு இளவரசியோ?

கிள்ளி :— இன்னும் நிச்சயமாகவில்லை. உங்கள் இளவரசி மேல் எங்கள் இளவரசருக்கு விருப்பம் இருக்கும்போல் தெரிகிறது. உங்கள் இளவரசி என்ன அவ்வளவு அழகியா?

முல்லை :— அப்படி ஒன்றும் பெரிய அழகியில்லை. எனக்குப் பெண் வேஷமிட்டால் எப்படி இருக்குமோ, அப்படித்தான் இருப்பாள்.

வள :— ஆஹா! இவ்வளவு அழகான முகத்தில் இந்தப் பரு மருவாக இருக்கிறதே. (முல்லையின் முகத்தில் உள்ள பருவைத் தொடப்போகிறான்)

முல்லை :— (தடுத்து) தொடாதீர்கள். தொட்டால் இந்தப் பரு என்னை மிகவும் சங்கடமான நிலைக்கு கொண்டுவந்துவிடும். (தோழியைப் பார்த்துச் சிரித்துவிட்டு) வலியால் அப்படித் துடித்துப் போவேன்.........உம்! உங்கள் இளவரசர் யாரைப் போன்ற சாயலுள்ளவராக இருப்பார்?

வள :— அதையேன் கேட்கிறீர்கள்! நான் ராஜாங்க உடையில் சென்றுவிட்டால் 'நான்தான் இளவரசர்—இளவரசர்தான் நான்' என்று மக்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவ்வளவு ஒற்றுமை எனக்கும் இளவரசருக்கும்.

தோழி :— எங்கள் இளவரசிக்குக்கூட உங்கள் இளவரசர் மேல்தான் காதல்.

முல்லை :— (தோழியை உறுத்துப் பார்த்து சினந்த பிறகு வளவனை நோக்கி) பாவம்! இளவரசியின் காதல் நிறைவேறப் போகிறதா? செந்தாமரை செங்கதிரோனை காதலித்த குற்றத்திற்காக தினமும் கூம்பிக் கூம்பி சாகாமல் சாவதைப்போல்தான் அவள் ஏங்கி ஏங்கித் தவிக்கவேண்டும். நீங்களே சொல்லுங்கள். ஒரு சிற்றரசரின் மகள் ஒரு மன்னர் மன்னரின் மகனைக் காதலிக்க முடியுமா?

வள :— காதலிக்க மட்டுமல்ல! கல்யாணம் செய்துகொள்ளவும் முடியும். அதற்கு உங்கள் இளவரசிக்கு இதய வலிமை வேண்டும்.

முல்லை :— சரி! சரி! குதிரையை வேகமாகச் செலுத்துங்கள். காவிரிப்பூம்பட்டினத்திற்கு இன்னும் நான்கு காத தூரம் இருக்கிறது.

காட்சி 5.

[வளவனும், கிள்ளியும் இந்திரவிழாவைப் பார்வையிட்டுக் கொண்டு வருகையில் முல்லையின் கூடாரத்தை அடைகிறார்கள். முல்லையும் அவள் தோழியும் ஆண் வேடத்தில் விளையாட்டாக வாட்பயிற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள்]

வள :— (முல்லையின் வாள் வீச்சைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறான். அப்பொழுது முல்லையின் வாள் வீச்சுக்கு ஆற்றாது தோழியின் வாள் மேலே பறக்கிறது. அதை லாவகமாகப் பிடித்த வளவன் முல்லையை வாட்போருக்கு அழைப்பது போல் வாளை நீட்டுகிறான். வாட்போர் நடக்கிறது. அப்பொழுது வளவனின் வாள் முல்லையின் ஆண் உடையைக் கிழித்துவிடுகிறது. முல்லை, வளவன் அணிந்துகொண்டுள்ள [சோழ அரசபரம்பரையினர் மட்டும் அணிந்துக்கொள்ளக்கூடிய] புலி இலச்சினை பொறித்த முத்திரை மோதிரத்தைப் பார்த்து விடுகிறாள்.)

வேடம் கலைந்துவிட்டது. இனி நீ தப்ப முடியாது. யார் நீ?

முல்லை :— நான் கொல்லிமலை இளவரசி — முல்லை. கோமகனே! உங்கள் குட்டும் வெட்ட வெளிச்சமாகி விட்டது. சோழ அரசர்கள் மட்டும் அணியக்கூடிய புலி இலச்சினைப் பொறித்த மோதிரம் அணிந்துகொண்டு போலி வேடம் போட்டால் முடியுமா?

வள :— தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். நான் சோழ இளவரசன் திருமாவளவன். பெண்களின் கண்களிலிருந்து எந்தப் பொருளும் தப்பமுடியாது என்பதை இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன் (குறும்பாகச் சிரிக்கிறான்)

கிள்ளி :— உலக உண்மை! ஆகவே நாம் இப்பொழுதே இந்த இடத்தை விட்டுப் போனால்தான் தப்பினோம்.

(கிள்ளி வளவனை இழுத்துக்கொண்டுப் போகிறான். வளவன், முல்லையை திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்று கல்லில் தடுக்கிக்கொள்கிறான்.)

பாவையைப் பார்த்தது போதும்; கொஞ்சம் பாதையைப் பார்த்து நடங்க.

காட்சி 6.

(இரவில் தூக்கம் பிடிக்காமல் முல்லையின் நினைவாகவே உலவிக்கொண்டிருக்கும் வளவன் முல்லையைக் காண முல்லையின் பாசறைக்கு வருகிறான். முல்லை வளவனின் உருவம் வரைந்து மகிழ்ந்துகொண்டிருக்கிறாள். வளவன், மறைந்திருந்து முல்லை தன்னை விரும்புவது கண்டு மகிழ்கிறான். அப்பொழுது தோழி வருவதை உணர்ந்த இளவரசி படத்தைத் திருப்பி மறைத்து இயற்கைக் காட்சிகளை வரைவதைப்போல் நடிக்கிறாள்.)

தோழி :— இளவரசி! இப்படித் தூங்காமல் தூரிகைபிடித்து படம் எழுதிக்கொண்டே இருந்தால் நாளை நடக்கும் இந்திர விழாவில் உங்கள் காதலர் வேலழகர் கலந்துகொள்ளும் வீர விளையாட்டுக்களைக் காணும்பொழுது தூக்கம் வாராதா?

முல்லை :— போடி! உனக்கு எப்பொழுதும் பரிகாசந்தான்.

தோழி:— பரிகாசம் செய்ய பட்டத்து இளவரசர் இருக்கும் பொழுது தோழியின் பரிகாசம் பிடிக்குமா ?

முல்லை :— (கோபமாக) ஆமாம்! இப்பொழுது எதற்கு வந்தாய்? வர வர உனது தொல்லைகள் எல்லை கடந்துவிட்டன.

தோழி :— எல்லையைக் கடந்தது நானல்ல இளவரசி! தாங்கள்தான். இளவரசியின் காதல்தான் கொல்லிமலை எல்லையைக் கடந்து சோழநாட்டு எல்லைக்குள் புகுந்துகொண்டிருக்கிறது.

முல்லை :— குறும்பைப்பார்!......... (முல்லை, தோழியின் காதை அன்போடுத்திருகி இழுத்துக்கொண்டுபோய் பாசறைக்கு வெளியே விடுகிறுள். வளவன் மறைவிடத்திலிருந்து வந்து முல்லையின் மஞ்சத்தில் படுத்துக்கொள்கிறன். முல்லை மஞ்சத்தில் வளவன் தூங்குவது கண்டு ஆச்சரியப்படுகிறுள். பிறகு மெதுவாக சாமரம் வீசுகிறுள். வளவன் தூங்குவதுபோல் பாசாங்கு செய்கிறன்.)

வள :— (தூக்கத்தில் உளறுவதுபோல்) முல்லை! .... உனது பனிப்பார்வைக்காக ... பவள இதழ்களுக்காக ... நான் பட்டத்தையும் துறந்து வருவேன்.

முல்லை :— (வளவனின் பாசாங்கைத் தெரிந்துகொண்டு சாமரம் வீசுவதை நிறுத்தி)

பால் நிலவில் கிளர்ந்தெழுந்த பருவத் துடிப்பு விரட்ட ஓடோடியும் வந்து பாசறையில் புகுந்துகொண்டதுமல்லாமல் படுத்துறங்குவதுபோல் பக்குவமாக நடிக்கிறீர்களா ?

வள :— (இமைகளை மூடிக்கொண்டே) முல்லை! இல்லவே இல்லை. குளிர் நிலவில் கொள்ளைபோன என் உள்ளத்தைத் தேடி வந்தேன். அப்பொழுது என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட குறும்புக்காரி, வளையல் குலுங்கும் கரங்களால் வண்ணங்களை வகையாகக் கூட்டிக் குழைத்து என் உருவம் வரைந்து

கொண்டிருக்கக் கண்டேன். தோழி வரும் ஓசைகேட்டு தோகையவள் பயந்துவிட்டாள். ஓவியம் மறைந்துகொண்டது. பிறகு தோழியைத் துரத்திவிட்டு தூங்காத என் உடலுக்கு சாமரம் வீசினாள். இதெல்லாம் கண்கள் உறங்காத நிலையிலே நான் கண்ட கனவுகள் நனவல்ல, நடிப்பல்ல...அப்படித்தானே! (விழித்துக்கொண்டு முல்லையின் கரங்களைப் பற்றுகிறான்.)

முல்லை : நகைதவழப் பேசி நடித்துப் பெண்களை வகையாகப் பிடித்துக்கொள்வதில் ஆண்கள் திறமைசாலிகள்.

வள :— பொய்க் கோபமும், பொல்லாத ஊடலும் ஆண்களிடம் செல்லாது கண்ணே! (முல்லையின் கன்னத்தை அன்போடு கிள்ளி, கூந்தலில் உள்ள மலர் ஒன்றை எடுத்து நுகர்ந்தவாறு)

வருகிறேன்! நாளை இந்திர விழாவின் விளையாட்டரங்கத்தில் வெற்றி வீரனாக உன் வேல் விழிகளைச் சந்திக்கிறேன்.

காட்சி 7.

(வில்லில் நாணேற்றி குறிதவறாமல் எய்தும், வேலை, அதிக தூரம் எறிந்தும், வாளை வேகமாகச் சுழற்றியும் விளையாட்டுகளில் கலந்துகொண்ட வீரர்களைத் தோற்கடிக்கிறான் வளவன்)

கிள்ளி :— வீரர் வேலழகருக்கு......!

எல்லா வீரர்களும் :— ஜே!.........

(வளவன் பரிசுபெற போட்டிக் குழுவினர் இருக்கும் மண்டபத்திற்குச் செல்கிறான்)

போட்டிக்குழுத் தலைவர் :— வில்லின் தேர்ச்சிக்கு இந்த தந்த வில்லும், வேல் எறிந்ததற்கு தங்கவேலும் வாள் வீச்சிற்கு வைரமிழைத்த வீர வாளும் பரிசளிக்கப்படுகிறது.

(வில்லையும், வேலையும் கிள்ளியிடம் கொடுத்துவிட்டு வாளை இடுப்பில் கட்டிக்கொள்கிறான்.) வேலழகனின் வீரம் கண்ட அரச குமாரிகள் மனம் மகிழ்ந்து தங்கள் கழுத்தில் உள்ள முத்துமாலைகளை — மணியாரங்களைக் கழற்றி தங்கள், தங்கள்

அன்பளிப்பாக வேலழகனிடம் லாவகமாகப் போடுகிருர்கள். வேலழகன் வீரவாளை நீட்டி அந்த முத்துமாலைகளை—மணியாரங்களை வாளுக்கு மாலையாக ஏற்கிருன்.

கொல்லிமலை இளவரசி மட்டும் தன் கூந்தலில் உள்ள ஒரு ரோஜா மலரை எடுத்துப் போடுகிருள். அதை வேலழகன் லாவகமாக கரங்களால் பற்றி நுகர்ந்தவாறு இளவரசியை காதலுணர்வோடு பார்க்கிருன்.

காட்சி 8.

(திருமாவளவன் வெற்றி வீரனுக குதிரையில் முல்லையின் பாசறைக்கு வருகிருன்)

தோழி :— (திருமாவளவனின் வருகையைத் தெரிந்து கொண்டு) இளவரசி! இளவரசர் வருகிருர்.

முல்லை :— ஒரு சிறு வேடிக்கை செய்து வெற்றிவீரரைப் பரிகாசம் செய்யலாமா?

தோழி :— உம்! ... செய்யலாம்.

(தோழியின் காதில் முல்லை ஏதோ ரகசியமாகச் சொல்கிருள்.)

தோழி :— (வளவன் பாசறையின் உள்ளே நுழைந்ததும்) இளவரசி! இளவரசர் ... இல்லை, இல்லை ... இந்திர விழாவின் வெற்றி வீரர் வந்திருக்கிருர். .... ஏன் வாட்டமாக இருக்கிறீர்கள். வெற்றி வீரருக்கு மாலை அணிவித்து மகிழ்விக்க வேண்டாமா?

வள :— தோகையே! வாகையல்லவா சூடிவந்திருக்கிறேன் வாட்டமேன்? (இளவரசியின் பின்புறமாக வந்து தோள்களைப் பிடித்துத் திருப்புகிருன். மண் பொம்மை இளவரசியைப்போல் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மறைந்திருந்த இளவரசியும், தோழியும் வளவன் ஏமாந்ததைக் கண்டு சிரிக்கிருர்கள்,)

வள :— (சிரித்தவாறு அருகேவந்த முல்லையின் கரங்களைப் பற்றி) பெண்கள், பெரிய ஏமாற்று வித்தைக்காரர்கள் ....! இளமையழகில், இளமையோரக் கண்வீச்சில், இதழசைப்பில் எந்த ஆண்மகனும் பெண்களிடம் ஏமாந்துதானே போகிருன்.

முல்லை :— இப்படிக் குறும்பாகப் பேசி பெண்களைக் கொல்லாமல் கொல்வதில் ஆண்கள் மட்டும் குறைந்தவர்களா?

வள :— நிறைந்த வாழ்விற்கு, ஆண், பெண் இருவருமே குற்றம் குறைகளைக் காணக்கூடாது கண்ணே!

தோழி :— (குறும்பாகச் சிரித்து) இளவரசர், தித்திக்கப் பேசி உங்களைக் கொத்திக்கொண்டுப் போகப் பார்க்கிறார். (தோழி நிலைமை உணர்ந்து வெளியேறுகிறாள்.)

வள :— (முல்லையின் முக அழகுகண்டு வியந்து) முல்லை! உனது சுழலும் விழிகளுக்கு, சுவையான இதழ்களுக்கு என் சோழவள நாட்டைத்தானே ஈடாகச் சொல்ல முடியும்......!

(முல்லையின் இதழ் சுவைக்க குனிகிறான்)

காட்சி 9.

இந்திரவிழா முடிந்து வளவனும், முல்லையும் [முல்லை ஆண் உடையில்] தங்கள், தங்கள் நாடு செல்ல குதிரையில் வந்து கொண்டிருக்கிறார்கள். வீரர்கள் முன்னால் சென்று கொண்டிருக்கிறார்கள்.

முல்லை :— (கொல்லிமலை செல்லும் வழி வந்ததும்) அன்பே! பிரிகிறேனே!

வள :— உயிரே! நீ பிரிகிறாயா?

(பிரிய மனமில்லாமல் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு பேசாதிருக்கிறார்கள்)

முல்லை :— அன்பே! உங்கள் அன்பின் நினைவாக, எனக்கு......

வள :— கன்னங்கள் சிவக்கும் வரையில்.........நீ போதுமென்று சொல்லச் சொல்ல..........

முல்லை :— காதல் கனிந்தால் கன்னங்கள் சிவக்குமா?...... ஓ...! காதலின் நினைவிற்கு கன்னங்கள் சிவக்க வேண்டாம், கணையாழி மட்டும் போதுமானது.

(வளவன், முத்திரை மோதிரத்தை முல்லையின் கையில் அணிவித்து, முல்லையின் மென்கரத்தை முத்தமிட்டுப் பிரிகிறான்)

பாட்டு :— சென்றுவா—என் செல்லக்கிளியே—சென்றுவா.

(சேர நாட்டு ஒற்றன் அத்திமல்லனும், அவன் நண்பனும் தொடர்ந்து வந்து கவனிக்கிறார்கள். முத்திரை மோதிரத்தைக் கைப்பற்ற முல்லையைத் தொடர்கிறார்கள்) (தொடரும்)

பண்பு.

சிவா.

அல்லி.

மாலை ஓவியன் வானத் திரையிலே வண்ணங்கள் பல வற்றை வரைந்துகொண்டிருந்த அந்திநேரம். வழக்கம்போல, எனது தோழி கோதையும் நானும் தண்ணீர் கொண்டுவரப் பொன்னி நதிக்குச் சென்ரும். எங்கள் சிற்றூருடே மண்ணு லகைத் தன் வளத்தால் பொன் விளையும் பூமியாக்கும் அன்னை காவேரி தன்னிலச் சிற்றுடை சலசலக்க ஓடுகின்ருள். ஆற்றுத் துறையையடுத்து ஒரு மதகு இருக்கிறது. அதனருகே செல்வ தற்கு யாரும் அஞ்சுவார்கள். ஏனென்ருல் நீர்ச்சுழல் அங் குண்டு. அந்த இடத்தில்தான் பல இறப்புக்கள் நேர்ந்திருக்கின் றன. நாளடைவில் அதற்கு 'ஆளடி மதகு' எனப் பெயரும் ஏற்பட்டது. அதன்மேல் யாரோ ஒருவர் ஆற்று நீரில் காலை நனைத்தபடியே அமர்ந்து பாடிக்கொண்டிருந்தார்.

"பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை யருகசைய நடந்த வெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே யறிந்தேன் வாழி காவேரி".

என்னும் சிலம்பிசை, இனிய குரலோடு இழைந்து காற்றிலே தவழ்ந்து வந்தேன் காதில் இனிமைப் பொழிந்தது. அன்று மாதவி பாடிய கானற் பாணி விருந்துண்ட வேகத்திலே தமி ழரை இகழ்ந்துரைத்த ஆரிய மன்னரின் முடித்தலை நெரித்தது. ஆனல் இன்று அவர் பாடும் அதே பாணி என் நெஞ்சத்தை மகிழ்விக்கின்றது.

"கோதை! ஊருக்குப் புதியவர்போலிருக்கின்றது. அறி யாமல் அந்த ஆளடி மதகின்மேல் அமர்ந்திருக்கின்ருரே!" என் றேன் நான். என் மனம் அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால்

என்ன செய்வது என்று உண்மையிலே ஏங்கியது. மனிதப் பண்பும் அதுதானே!

'அது வேறு யாருமில்லே, அல்லி! பண்ணை வீட்டுத் தம்பி சந்திரன்தான் உட்கார்ந்திருக்கின்றது' என்றாள் அவள்.

'யார்? சந்திரனா! பார்த்து எத்தனை ஆண்டுகளாயின தெரியுமா?' என்னையறியாதே சொற்கள் வாயிலிருந்து நழுவின.

'பெயர் கேட்டதும் ஏனடி உனக்கிந்த வியப்பு! சரி சரி. நேரமாகிவிட்டது. அம்மா தேடுவார்கள். வீட்டிற்குப் போவோம், வா!' என்று கோதை அவசரப்படுத்தினாள்.

சந்திரன் இருந்த பக்கம் பார்த்தேன். அவரைக் காணவில்லை. துள்ளிக் குதித்தோடும் பிள்ளை ஒன்றைப் பிடித்துக் கயிற்றோடு பிணைப்பது போன்று, தான் செல்லும் வழியின் வளங் கண்டு உவகைப் பண் பாடித்திரியும் பொன்னியாற்றுத் தண்ணீரை, குடத்தில் மொண்டுகொண்டு நானும் கிளம்பினேன். இருவரும் கொஞ்சதூரம் வந்தோம். எதிரே அவர் வந்தார். எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. அவர் அருகே வர வர என் நெஞ்சும் பயங்கலந்த மகிழ்ச்சியால் துடித்தது. எனது நடை பின்னி எங்கே கீழே விழுந்துவிடுவேனோ என்று கூட அஞ்சினேன். கோதை ஏதோ பேசிக்கொண்டுவந்தாள். எதுவுமே என் காதில் விழவில்லை. அவரும் நாங்களும் சந்திக்குமிடம் வந்தது. எனதுடல் நடுங்கிற்று. குடம் கைநழுவி என் காலில் விழுந்ததால் இரத்தம் வழிந்தது. நிற்கமுடியாமல் கீழே விழப்போன என்னை கோதை தாங்கிக்கொண்டு செய்வதறியாது திகைத்தாள். அருகிருந்த அவர் தன் கைக்குட்டையை தண்ணீரில் நனைத்து என் காலில் கட்டினார். உள்ளுக்குள்ளே எனக்கு மகிழ்ச்சி பெருகியது. ஆனால் வெளியிலே, யாராவது இதைக் கண்டுவிடின் அவர்கள் மனம்போன போக்கிலே இதற்கு உருவங்கொடுத்து ஊரெல்லாம் அலர் பரப்புவார்களே யென்று பயமேற்பட்டது.

'என்னம்மா! உங்களுக்கு ஏதாவது மயக்கம்............ என்றிழுத்தார் அவர்.

அதெல்லாம் ஒன்றுமில்லை! என்றேன் நான். ஓரிளம் பெண்ணைப் பார்த்து ஓரிளைஞர் 'அம்மா' என்றுதானழைப்பதோ என்று என்னுள்ளம் முதலில் வினு எழுப்பினும், ஒரு பெண்ணை அறியாத நேரத்திலே அழைக்கவேண்டிய முறை அதுதானே என்று பின்னர் அமைதி செய்துகொண்டது. தமிழிலே அம்மா என்ற சொல்லிற்கிருக்கின்ற பொருட்சிறப்பை யெண்ணி வியந்தது.

அல்லி! மெதுவாக எழுந்திரு. வீட்டிற்குச் சென்று பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்முள் கோதை. 'யார்? அல்லியா!' என்று கேட்ட அவரின் கண்கள் வியப்பினுல் அகலவிரிந்தன. சிறிது நேரம் பேசாமல் என்னையே கூர்ந்து கவனித்தார். அதற்குள் அவர் முகத்தில் எத்தனை மாறுதல்கள்? 'அல்லி' என்று அவர் வாய்க்குள் சொல்லிக்கொண்டதை இதழ்கள் எடுத்துக் காட்டின. ஆனுல் சொல் ஒலி மாத்திரம் வெளிவரவில்லை. நான் எழுந்து நிற்க முயற்சித்தேன். முடியவில்லை. கோதையின் தோளின்மேல் கையைப் போட்டுக்கொண்டு மெதுவாகத் தத்தித் தத்தி நடந்தேன். அருகே அவர் குடங்களைக் கையிலெடுத்துக் கொண்டு நடந்து வந்தார். நாங்கள் வாயளவில் வேண்டாமென்று மறுத்தோம். அவரும் சிரித்துக்கொண்டே எதிர் பாரா உதவி'யென்று கூறினுர். அவரை விட்டாலும் அவைகளை யெடுத்துவர அப்போது வேருெருவருமில்லை. வரும்போது அவர் அடிக்கடி என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டார்.

'என்ன அல்லி! வீட்டிலே அம்மா வெல்லாம் நலந்தானே! என்று பேச்சை ஆரம்பித்தார். அவர் அல்லி என்று சொல்வதன் மூலம் என்மேல் ஏதோ ஓருரிமை கொண்டாடுவதாக எனக்குத் தோன்றியது.

'நலந்தான். நீங்கள் எப்போது வந்தீர்கள்?' என்றேன் நான்.

'இன்று காலைதான். அல்லி! எவ்வளவு பெரியவளாக வளர்ந்துவிட்டாய், ஆளே அடையாளந் தெரியாதபடி...

'ஏன்? நீங்கள் மாத்திரம்.

இவ்வாறு பேசிக்கொண்டே வீடடைந்தோம். அம்மாவிற்கு என்னிலே கண்டு முதலில் அதிர்ச்சி ஏற்பட்டது. கூடவே ஓரிளைஞர் வந்திருப்பது காணத் தயக்கமும் பிறந்தது. இருந்தாலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் வாருங்கள் என்று தமிழர் பண்பாடு தோன்ற வரவேற்றார்கள். அம்மாவின் முகத்தில் வினாவும் வியப்புமாக மாறி மாறித் தோன்றின. கூடத்திலிருந்த கட்டிலில் என்னைப் படுக்கச்செய்து மருந்து வைத்துக் கட்டினார்கள். அவர் நடுவே யமைந்த ஊஞ்சலில் உட்கார்ந்தார். 'இதிலமர்ந்து ஆடி எத்தனை யாண்டுகளாயின ? என்றார் அவர். அம்மாவிற்கு வியப்பு மேலிட, 'நீங்கள் யாரென்று தெரியவில்லையே' என்றார்கள். அதற்குள் கோதை ஓடி அம்மா காதில் ஏதோ ஓதினாள். அடடே! நம்ம சந்திரனா? வாப்பா, வா என்று முகம் மலர்ந்து கூறினார்கள். நீங்களென்பது மாறி உரிமையுடன் நீ யென்றாயிற்று. அம்மாவும் அவரும் பல பேசினர். அவருக்குக் கல்லூரிப் படிப்பு முடிய இன்னும் ஓராண்டு இருக்கிறதாம். நிலத்தை யெல்லாம் நேரே பார்த்து ஒழுங்கு செய்துவிட்டுப் போகவே விடுமுறையில் இங்கு வந்தாராம். அவருக்குப் பட்டின வாழ்வு பிடிக்காததால், படிப்பு முடிந்ததும் இங்கேயே தங்க முடிவு செய்துள்ளாராம். அம்மா – அவர், உரையாடலில் நானதிகமாகக் கலந்துகொள்ளவில்லை. நான் அவரது அழகையே கண்கொட்டாமல் கவனித்தேன் இடையிடையே நானும் இரண்டொரு சொற்கள் பேசினேன். அவரும் பார்வையை என்மீது வீசுவார். நான் பார்ப்பேன். அவர் சிரிப்பார்.

நேரேவகிடெடுத்து அழகாக வாரிவிடப்பட்டு நெளிந்துள்ள தலைமயிர். செதுக்கியதுபோன்ற கூரிய மூக்கு. குறும்புத்தனங்கள் நிறைந்த கண்கள். இயல்பாக இதழோரத்தில் தவழ்ந்தோடும் மென்னகை. அரும்பு மீசை. சிவந்த உடல். என் கண்களுக்கு அவர் மிகவும் அழகாகத் தோன்றினார். முடிவில், அம்மாவிடம் அவர் விடைபெற்று வீட்டிற்குச் செல்ல எழுந்தார். என் படுக்கையருகே வந்து, 'அல்லி! வலி அதிகமாக இருக்கின்றதா?' என்றார்.

'கொஞ்சம் அதிகந்தான்' என்றேன்.

'நன்றாகத் தூங்கு எல்லாம் சரியாகிவிடும். காலை வரு வேன்' என்று சொல்லிச் சென்றார். அவர் சென்றவுடன் தான் உண்மையிலேயே எனக்குக் கால்வலி அதிகமாக இருப் பதை உணர்ந்தேன். அவரைக் கண்டவுடன் என் மனம் ஏன் இவ்வாறு நெகிழவேண்டும்? இனந்தெரியாத இன்பவுணர்வு, அவர் என் காலைத் தொட்டதும் உண்டானதேன்? அவர் என் னருகே இருந்தபோது ஒரு புதுமை உணர்ச்சி என்னுள் எழு வானேன்? எத்தனையோ யாண்டுகட்குப் பின்னர் பார்த்ததன் விளைவா? அல்லது இளமை உள்ளத்தின் இயல்பா? இதற்குப் பெயர்தான் காதலா?

'உனக்கு மெனக்கு மியைந்த பொருத்தம் என்ன பொருத் தம்?' என்று தெருவிலே ஒருவர் பாடிக்கொண்டு செல்வது என் காதில் விழுந்தது. ஆமாம்! இப்போது அவருக்கும் எனக்கும் இயைந்த பொருத்தம் என்ன பொருத்தம்? துள்ளி விளையாடிய பிள்ளைப் பருவத்து நிகழ்ச்சிகள் நோக்கி என் மனம் ஓடியது. எங்கள் வீட்டைத் தாண்டித்தான் அவர் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். அவர் பள்ளிக்குச் செல்லும்போது வீட்டிற்குவந்து என்னை அழைத்துப்போகத் தவறுவதே இல்லை. இருவரும் ஒன்றாகவே சேர்ந்து பழகினோம். படித்தோம். ஆடினோம். பாடினோம்.

அவருக்குச் சொந்தமான தோப்பு ஒன்று பொன்னி நதிக் கரையில் இருக்கிறது. விடுமுறை நாட்களில் நாங்கள் அங்கு சென்று விளையாடுவோம். அந்தத் தோப்பின் ஒரு மூலையில் ஒரு பெரிய நாவல் மரம் இருக்கிறது. அந்த மரத்துப் பழ மென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அன்று விடுமுறை. வழக்கம்போல அங்கு சென்று விளையாடினோம்.

'சந்திரா! எனக்கு நாவப்பழம் பறிச்சித் தரமாட்டியா?' என்று கெஞ்சினேன்.

'அல்லி! எல்லாம் உச்சியிலேயில்லே இருக்கு' என்றார் அவர்.

ஆமாம்! இவ்வளவுதானா உன் துணிச்சலெல்லாம்' பெரிய பயந்தாங்கொள்ளி!

ஏய்! என்ன சொன்னே? இன்னொருதரம் சொல்லு.

சொன்னு என்ன செய்வியாம்? பெரிய பயந்தாங்......... என்று நான் முடிக்குமுன் என் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விழுந்தது. எனக்கு வலி பொறுக்க முடியவில்லை. வாய்விட்டு அழுதேன். எனது அழுகைகண்டு அவர் மனம் மிகவும் இளகி விட்டது. அவர் சட்டைத் துணியால் என் கண்களைத் துடைத்தார்.

'அல்லி! நல்லபிள்ளை இல்லே! அழக்கூடாது. வலிக்குதா? என்று கூறிப் பரிவோடு கன்னத்தைத் தடவிக் கொடுத்தார். அவர் கன்னத்தைத் தடவிக் கொடுத்தது அடித்த அடியின் வலியைப் போக்குவது போன்றிருந்தது.

'அடிச்சா வலிக்காமலா இருக்கும்? பழம் பறிச்சுக் கொடுத்தாத்தான் பேசுவேன்' என்று தேம்பிக்கொண்டே கூறினேன்.

'சரிசரி! அழாதே' என்று கூறி மரத்தின்மீது விரைந்தேறினர். அவர் மேலும் உயர ஏறுவதைக் கண்டு என்மனம் கலங்கியது. 'வேண்டாம் சந்திரா! இறங்கிவிடு' என்று கத்தினேன். 'இரு கொஞ்சமாகவாவது பறிச்சுப் போடுறேன்' என்றுகூறி ஆற்றினுள் வளைந்திருக்கும் கிளையின் நுனிக்கு வந்துவிட்டார். கைக்குப் பழங்கள் எட்டவில்லை. கிளையின் மீது படுத்துக்கொண்டே சில பழங்களைப் பறித்துப் போட்டார். எனக்கு அவைகளைத் தின்னவே மனமில்லை. அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால் என் செய்வது என்று பயமேற்பட்டது. கொஞ்சந் தவறினும் போதும். கீழே, சிற்றலைகளை எழுப்பி இன்னிசை பாடிச்செல்லும் காவேரியன்னையின் அணைப்பிலே விழுந்துவிடவேண்டியதுதான். 'இறங்கிவிடு, சந்திரா!' என்று கத்தினேன். காதில் சரியாக விழாததால் 'என்ன சொல்றே?' என்று கொஞ்சந் திரும்பியவாறு கிளையைப் பிடித்திருந்த கையை மறதியாக எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு கேட்டார். பிடி நழுவியது. அவ்வளவுதான்! அடுத்த கணம் தண்ணீருக்குள் விழுந்துவிட்டார். அவருக்கு நீச்சல் தெரியும். இருப்பினும் பெரிய ஆட்களையே தன் வலிமைமிக்க ஆற்றலால்

இழுத்துச் செல்கின்ற காவேரித் தாயின் கொடிய பிடிகளுக்கு அவர் தப்ப முடியவில்லை. தான் செல்லும் வழியே அவரையும் இழுத்துக்கொண்டு ஓடினாள். அச்ச மிகுதியால் நான், ' சந்திரா! சந்திரா!' என்று கூவி, அழுதுகொண்டே கரை ஓரமாக ஓடினேன். சிலநேரம் தண்ணீருள் மூழ்குவதும், சிலநேரம் மேலே வருவதுமாக உயிருக்கு மன்றாடினார். நான் உரக்கக் கத்தினேன். என் கூச்சலைக் கேட்டு அருகிருந்த தோப்பில் வேலைசெய்த ஆட்கள் ஓடிவந்து நீரில் குதித்து அவரைக் கரை சேர்த்தனர். சிறிதுநேரம் அவரால் மூச்சுக்கூட விடமுடியவில்லை. மிகவும் சோர்ந்திருந்தார். என்னுடைய அடத்தினால்தானே அவருக்கு இந்தப் பெருந்துன்பமேற்பட்டது என்று நினைத்தேன். அவரைக் கண்டதும் என்னழுகை மேலும் அதிகமாயிற்று. ஓடிப் போய் கட்டிக்கொண்டேன்.

அல்லி! எதற்கு அழனும்?' அதுதான் நான் சாவிலிருந்து தப்பிச்சுக்கிட்டேனே! என்றார் சிரித்துக்கொண்டே.

'சந்திரா! என்னால் தானே உனக்கு இந்தமாதிரி ஏற்பட்டுச்சு' என்றேன் நான்.

' நீ கத்தி ஆட்களைக் கூப்பிடலேன்னா நான் பிழைக்கமுடியுமா? ...... அடடே! இதென்ன முழங்காலிலே இரத்தக் காயம்?

'கரையிலே ஓடியாந்தபோது விழுந்திட்டேன். அடிப்பட்டிடுச்சு' என்றேன். உடனே அவர் ஈரச் சட்டையைக் கிழித்துக் கட்டுக் கட்டினார். என்னால் நடக்கமுடியவில்லை.

'பார்த்தியா! என்னால்தானே; உன்னாலே நடக்கமுடியாதபடிக் காலிலே காயம்பட்டுச்சு. சரி உப்புமூட்டை ஏறிக்கோ என்று சொன்னார். நானும் அவர் முதுகில் தொத்திக்கொண்டேன். அவர் என்னை வீடு வரைக்கும் சுமந்து சென்றார். அன்பற்ற உள்ளம், தன்னால் பழி நேரினும் அதைப் பிறர்மீது சுமத்தப் பார்க்கின்றது. ஆனால் அன்புநிறை உள்ளமோ, பிறரால் தவறு ஏற்படினும் அதைத் தன்மீது வலுவில் சுமத்திக்

கொள்கின்றது. அன்புசெயும் விந்தையை எண்ணியே அன்புடையார் எல்லாம் உடையார்' என்று திருவள்ளுவப் பெருந்தகை மொழிந்தார் போலும். சிறுபிள்ளையா யிருக்கும்போதே அவருக்கு அல்லி! அல்லி! என்று கூப்பிடுவதிலே அளவுகடந்த ஆசை. எனக்கும் சந்திரன் என்ருல் உயிர். அவருக்கு முன் கோபம் அதிகம். முதலில் அடித்துவிட்டாலும் பிறகு அன்பு காட்டுவார். என் கண்களிலே கண்ணீரைக் கண்டாலே போதும் அவர் கோபமெல்லாம் பறந்துவிடும். என்னைப்பற்றி யாராவது சுடுசொல் சொன்னர்கள் என்று கேட்டாலே போதும். இயல்பாகவே கண்ணீர் இமைக் கரையை உடைத்துக்கொண்டு பீறிடும். அந்தக் கண்ணீர்தான் அவரின் கோபத்தீயை அணைத்தது. குமுறி வெடிக்கும் எரிமலையாக இருக்கும் அவர் என் விழிநீர் காணின், கோடையிலே வீசும் குளிர் காற்ருகிவிடுவார். அவரைப் பணியவைக்க வேண்டுமென நான் விரும்பினல் கண்ணீரைத்தான் சிந்துவது வழக்கம். நீலிக்கண்ணீரன்று! பெண்களின் கண்ணீருக்கே ஒரு பேராற்றல் உண்டல்லவா?

இன்ப நினைவுகளால் இரவு முழுதும் தூக்கமே வரவில்லை. விடிந்து விட்டதன் அறிகுறியாகச் சேவல் ஒன்று கூவியது. திறந்திருந்த பலகணி வழியே விரிந்துகிடந்த வான் வெளியை நோக்கினேன். அங்கே விடிவெள்ளி பூத்திருந்தது. அப்போதுதான் கண்ணயர்ந்தேன்.

சந்திரன்.

காலை கண் விழித்தபோது நன்ருக விடிந்துவிட்டது. இரவு முழுதும் தூக்கமே இல்லை. இமை இரண்டையும் இழுத்து இறுக மூடிப் பார்த்தேன். முடியவில்லை. அதையும் மீறி அல்லியின் எழிலோவியம் என் கண் முன்னே நின்றது. அப்பொழுது எனக்குக் கவிக்குயில் பாரதியாரின் கண்ணம்மா பாட்டுத்தான் நினைவிற்கு வந்தது.

"பிரித்துப் பிரித்து நிதமேக மளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை" (வளரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

புயல்.

ஆசிரியர் : **செகப்பிரியர்.**

மொழிபெயர்ப்பாளர் : புலவர். **R. ஏகாம்பரநாதன்.**

கோவிந் :— நமது உடைகள் நமது அரசனின் பெண் திருமணத்துக்குச் சிங்கப்பூர் சென்றபோது எவ்வளவு அழகாக இருந்தனவோ அவ்வளவு அழகாக இப்போது இருக்கின்றன. திருமணத்தில் ஏற்பட்ட உடையழுக்கெல்லாம் திரும்பிவரும் போது கப்பல் புயலால் கவிழ, கடல் நீரில் பட்டு நனையாமலே நீங்கி அழகுபெறும் என்பதை இப்போது எண்ணிப் பார்த்தால் அதுவும் ஒரு அதிசயமாகவே தோன்றுகிறது எனக்கு

இராச :— கமலாவின் திருமணம் சிறந்த திருமணம். கமலாவும் சிறந்த அரசி. சகுந்தலையின் காலமுதல் இவளைப்போல் அழகி இருந்ததுமில்லை இருக்கப் போவதுமில்லை. ஆனல் சிங்கப்பூர்—எவ்வளவுதூரம்?

அமண :— சகுந்தலை, அவள் கைம்பெண் அல்லவா? அவளை ஒப்பிட ஏன் பாரதக் கதையை இழுக்கவேண்டும். அத்தினபுரத்திலே அப்ப அந்தச் சீதையைச் சொல்லலாமே.

வீரராசே :— சீதையைத் தூக்கிச் சென்ற இராவணன் இமயத்தையும் தூக்கித் தனது இசையாலேயே இறைவனை வசப்படுத்தித் தப்பினன். அந்த இசையெல்லாம் ஜாம்புவானிடம் அற்பமாகும். நாரதரே தனது வீணையுடன் ஜாம்புவானிடம் கர்வத்துடன் வந்து போட்டியிட்டாராம். ஜாம்புவான் ஓர் பாடல் பாடினராம். உடனே பூமியே இளகி நாரதரையும் வீணையையும் உள்ளுக்கு இழுத்துக்கொண்டதாம். உடனே பாடலை நிறுத்தி மேலே இழுத்துவிட்டாராம் ஜாம்புவான். இப்படி எத்துணையோ அதிசயங்கள்.

அமண :— ஜாம்புவான் அதிசயமான காரியங்களையெல்லாம் எளிதில் செய்து முடிப்பார். இசையினலே வீடுகளைக்

கட்டி மதில்களை உண்டாக்கிப் புது நகரங்களை ஏற்படுத்தி அரசர்களையும் அமைப்பாராம். பலர் இம்மாதிரி வந்த அரசர்கள்தான். தானே அரசனாக வருவது பலருக்கு முடியாது.

கோவிந் :— எல்லாரும் என் வழிக்கு வந்துவிட்டீர்கள். அருவமான இசையை ஜாம்புவான் இப்படிச் செய்வார் என்றால் உருவமான இத்தீவை அவர் எடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டுபோய்க் குழந்தைகளுக்கு விளையாடத் தருவார். குழந்தைகளுள் ஒன்று தோட்டத்தில் நட்டுவைக்கும். அது முளைத்தும் பல தீவுகளாக ஆகும் என்று நான் சொன்னால் என்னைக் கடிகாரம் மணியடிக்கும் என்று கூறுகிறீர்கள்.

ஆதிநா ; அந்தக் கலியாணப் பேச்சு எங்கெங்கோ போகின்றது. அது வேண்டாம். அது எனக்கு முழுதும் பிடிக்கவில்லை. அந்தப்பெண்ணைச் சிங்கப்பூரானுக்குத் தந்ததே பிசகு. அங்கு நாம் சென்றதும் தவறு. அங்கிருந்து நாம் திரும்பும்போதுதான் இத்தொல்லையெல்லாம் ஏற்படுகிறது.

இராசே :— எனது பிள்ளையும் போய்விட்டான். என் பெண் கமலாவும் போய்விட்டாள் என்றே சொல்லவேண்டும். சிங்கப்பூர் எங்கே இருக்கிறது? நாம் எங்கே இருக்கிறோம்? என் வாழ்நாளில் இனி அவளை எங்கே நான் பார்க்கப்போகிறேன்? நாகைத் தலைவன்—வஞ்சிக்கும் தலைவனாகவேண்டிய வீராசேந்திரனை எந்த மீன் விழுங்கியதோ?

பராந் :—ஐயா, அவரை எந்த மீனும் விழுங்கியிருக்க முடியாது. அலைகளிலும் அமிழ்ந்திருக்க முடியாது. அலைகளின் மேல் மிதந்து கரை நோக்கிச் சென்றதை நான் கண்டேன் அவர் இறந்திருக்க முடியாது.

இராசேந் :— இல்லை. நான் நம்பவில்லை. என் காலமே நன்றாயில்லை. மகளையும் இழந்தேன். மகனையும் இழந்தேன்.

இராச :— அண்ணா, தங்கள் பெண்ணை உள் நாட்டில் ஒருவருக்கு மனைவியாக்காது, இவ்வாறு சிங்கப்பூரில் நாம் மணம் முடித்தது தவறுதான். கமலாவும் இம்மணத்துக்குச் சிறிதும்

ஒப்பவில்லை. தங்களின் கட்டாயத்தின்மேல்தான் கமலா இசைய நேர்ந்தது. ஆனால் கமலாவை இவ்வாறு கண்ணுக் கெட்டாத இரங்கூன் சீமையில் தள்ளினதிலும் ஒரு நன்மை உண்டென்றால் அது இதுதான். தன் தந்தை, உடன் பிறந்தவன், எம்போன்றவர், யாவரையும் ஒருமிக்கக் கடலில் இழந்த தொல்லை அவளுக்கு எட்ட முடியாதல்லவா?

இராசேந் :— உண்மைதான். ஆனால் செல்லாதிருந்தால், இத்திருமணம் அங்கு நிகழாதிருந்தால் இத்தொல்லை ஏற்பட்டே யிருக்காது. செல்வ மகள் பிரிந்தாள் என்னை நிலமகளும் திரு மகளுமே பிரித்தும் வெறுத்தும் ஒதுக்கிவிட்டார்போல் இருக் கிறதே.

கோவிந் :— (நரசிம்மனைப் பார்த்து) நீர் பேசியது உண் மையாக இருக்கலாம். ஆனால் இது போன்ற உண்மை பேசா திருப்பது நல்லது. சமையமறியாமல் எதனையும் பேசுதல் கூடாது. உமது உண்மை முரட்டுத்தனமானது; துன்பம் தரத் தக்கதாகவல்லவா இருக்கிறது. வந்த துன்பத்துக்குத் துன் பத்தை வருவித்துக்கொண்டதானது அறியாமையை எண்ணுவது துன்பம் நீக்கும் மருந்தாகாது. வெந்த புண்ணில் வேல் இடு வதேயாகும்.

அமண :— என்ன? மருத்துவ வேலைகூடத் தெரியுமா?

கோவிந் :— இதில் ஒரு பொறுமையா? கோபமா? வேண் டாம். நாம் எல்லாருக்குமே காலம் நன்றாயில்லை.

இராசேந் :— இது ஒரு தீவு. இங்கு நாம் என்ன செய்வது ?

அமண :— உழ வசதியிருந்தால் உழுது காஞ்சிரங்காய் விதைக்கலாம்—அப்பளத்துக்கு ஆகும் அல்லவா?

இராச :— வசதியற்ற நிலையில் நெறிஞ்சியும் கள்ளியும் போட்டால் விரைவில் தீவே நிறைந்துவிடும்.

கோவிந் :— இங்கு மக்கள் ஏற்பட்டு என்னை நீங்கள் இதற்கு அரசனாகவும் ஆக்கிவிட்டால் நான் என்ன செய்வேன்

தெரியுமா? தற்போதுள்ள (காமன்வெல்த்) பொதுவுடைமைப் போக்கினை இங்கு மாற்றிச் சிறந்த முறையில் அமைப்பேன். வணிகமுறையே இங்கு இருக்காது. வருத்து-போக்கு, ஏற்று மதி—இறக்குமதி தடுக்கப்படும். குற்ற விசாரணை மன்றம், நீதி விசாரணை மன்றம் இருக்கா. நிலவரி, தொழில்வரி, வீட்டுவரி காண முடியாது. ஆண்டான்—அடிமை, ஏழை—பணக்காரன் உழைப்போன்—வாளாவிருப்போன் இத்தன்மைகள் தோன்றவே முடியாது. தன்னது—பிறரது, எல்லை—கொல்லை, உழுநிலம்—தரிசுநிலம், இவையொன்ற வேறுபாடும் இலவாகும். உலோக வகைகள் மது இனங்கள் இங்கு தலைகாட்ட முடியாது. ஒழுக்கக் கேடு சிறிதும் இன்மையின் கற்பென்ற பேச்சே எழாது. எல் லாம் இயற்கை. இயற்கையில் தவறு ஏற்படாதது இயற்கை யாதலால் இயற்கையோடு இயைந்த வாழ்வில் எல்லாம் ஒன்று தான். இன்பமேது? துன்பமேது? அரச இனத்தினர் என்ற எண்ணம் கூடத் தங்களுக்கு அகன்றிருக்கும்.

இராச :— மிகவும் விந்தை. இந்த அரசாங்கத்தின்கீழ் எங்களுக்கு அரச எண்ணமே அகலவேண்டும். இவர் அரசனாய் ஆளவேண்டும். ஆனால் அரச அமைப்பில் யாவும் இயற்கை யென்று நிலைநாட்ட வேண்டும். இதில் அமைதி தோன்று கிறதா? இல்லை. அறிவுடைமை போன்று பேசும் அறிவற்ற பித்தற்றலே.

அமண :— நான் முன்னரே குழப்பம் அடைந்திருக்கி றேன். ஆதலால் இதில் உள்ள தவறை அறிய எனக்குத் தெளி வும் இல்லை; அந்த முயற்சியில் நான் புதிதாகக் குழப்பம் அடையப் போவதும் இல்லை.

கோவிந் ;— வழிவழி வந்த அரசர்களே இலையாகும்போது நான் எவ்வளவினன்? அமைப்பை ஏற்படுத்தும் அளவுக்கு நான் அரசன் அல்லது தலைவன் அல்லது முதல்வன் என்றோ, அல் லது வேறு எந்தப் பெயரை வேண்டுமானாலும் கொடுங்கள். ஆனால் இந்த முறையை இயற்கையாகப் பரப்பிவிட்டால் பின்னர் யாவும் இயற்கையாய் என்றும் இயற்கையுடன் இயங்கும்.

இராசேந் :— இதற்கும் இயற்கையென்ற பெயர்போலும் அல்லது இது ஒருவகை இயற்கையோ என்னவோ? புதிய சிலர்—மக்களைப் போலத்தான் இருக்கிறார்கள்—பெற்றிருக்கிற உள்ளத்தை யார் அறிவர்? அவர்கள் என்னதான் எண்ணுவார்களோ? ஆனால் அவர்கள் பேசுவது எழுதப்படும்போது மற்றொன்றாக அமைகிறது. அது அரசியலாக்கமாகும் (constitution) போதும் நடை முறையில் வரும்போதும் வெவ்வேறு வகை இயற்கையை இயக்குகின்றது. ஆனால் எந்த இயற்கையும் பிற்பகுதி, முற்பகுதியை மறந்துவிடுகிறது. இந்த உண்மையை நான் ஒரு கற்பனை நாடகத்திலே படித்தேன். இது நமது அரசியலமைப்பில் இத்தீவில் ஏற்படாமல் செவ்வையாக நடைபெற வேண்டும் என்பது எனது அவா.

கோவிந் :— என்ன நாம் நால்வரைத் தவிர யாவரும் தூங்கிவிட்டார்களே. ஆம் கவலையற்றவர்களுக்குத் தூக்கத்துக்கு என்ன குறைவு? ஆனால் அவர்கள் தூங்குவதும் விழித்திருப்பதும் ஒன்றுதான். எனக்கோ அரசியலமைப்பு முறையில் ஏற்பட்ட கவலையும் களைப்பும் தூக்கத்தை உண்டாக்குகிறது.

இராசேந் :— அது ஒரு தொற்றுநோய். எனக்கும் தூக்கம் வருகிறது.

(அமணன்—இராசசிம்மன் இருவரைத் தவிர யாவரும் தூங்கல்)

அமண :— நண்பரே, உம் முகத்தை மேற்போக்காய்க் காணும்போது எவருக்கும் ஒரு சிறப்புத் தோன்றாமல் இருக்க முடியாது. ஆனால் நான் கூர்ந்து நோக்கும்போது முகத்தில் அரசவட்டம் தோன்றுகிறது. தலையில் அரச முடியும் மேலே குடையும், கையில் செங்கோலுமாக உமது உருவ முழுதும் இராச சின்னங்கள் தோன்றுகின்றன.

இராச :— தாங்களும் தூக்க நோயில் தூங்கிக்கொண்டு கனவில் புலம்புகின்றீரா? விழிப்பில் நினைவோடுதான் பேசுகிறீர்களா? நான் எப்படி உணர்வது.

அமண :— நண்பரே, நான்தான் தங்களைப்பற்றி ஐயுறுகிறேன். சொற்கள் நன்கு கேட்கவில்லையா? எனது சொற்களுக்குப் பொருள் விளங்கவில்லையா? விழிப்புத்தானா?

இராச :— எனக்கு விளங்கிவிட்டது. நீவிர் தூக்கத்தில் உளறுகிறீர்கள். நான் விழித்துத்தான் இருக்கிறேன். என்றாலும் எனது நிலைமை எனக்கு ஒரு அதிசயத் தூக்கமாய்த் தோன்று கிறது. பேசுகிறேன். கேட்கின்றேன். எனினும் நடக்கவோ சுறுசுறுப்பாகக் காரியங்கள் செய்யவோ முடியாத நிலைமை தோன்றுகிறது

அமண :— இப்போது எனக்கு விளங்கிவிட்டது. நான் நன்றாக விழித்துக்கொண்டேன். தங்களை விழிப்பிக்கவே தங் களுக்கு இவ்வித ஒரு அதிசய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனை இப்படியே வளரவிட்டால் உள்ள நிலையும் கெட்டு, வரவேண்டிய அரசப் பதவியும் கிட்டாது. மரணத்தில் முடிந்துவிடும். ஆத லின் உடனே செய்தல் வேண்டும். நான் சொல்வதைக் கேள். அதன்படி நட. உடனே பலன் கிட்டும்.

இராச :— நான் ஒரு குளத்தில் தேங்கிக் கிடக்கும் நீர்; என்னால் என்ன ஆகக்கூடும்? எனக்கு நம்பிக்கையில்லை.

அமண :— உம்மை ஆற்று நீராகப் பெருக்கெடுத்து ஓடச் செய்யமுடியும். ஒருவருக்கு அச்சமும், சோர்வும் தனது சக்தி யையே மறைத்துக்கொண்டிருக்கின்றன. சிலருக்குச் சூழ்நிலை யால் தம் சக்தியும் பெருமையும் அமுக்கப்படுவதும் உண்டு. வேறு சிலருக்கு அவை தூண்டப்பட்டு உயர்ந்த நிலையை அடை தலும் உண்டு.

இராச :— அருள்கூர்ந்து தாங்கள் சொல்லவேண்டிய வற்றை விளங்கச் சொல்லுமாறு வேண்டுகிறேன். நும் நிலைமை பிரசவ வேதனையைக் காட்டுகிறது. குறிப்பால் என்னால் உணர முடியவில்லையே?

அமண :— நான் தேவன் அல்லன். இறப்பது உறுதி. அடக்கம் செய்தபின் என்னை யார் நினைக்கப்போகின்றனர்? ஆனால் இப்போது கிடைத்துள்ள வாய்ப்பினைப் பயன்படுத்தி ஒரு நற்செயல் செய்விக்க எண்ணுகிறேன். இங்கு தூங்கிக் கொண்டிருக்கும் இராசேந்திரனின் மகன் வீரராசேந்திரனைக் கடல் விழுங்கிவிட்டது. இவரும் நல்ல தூக்கத்தில் இருக்

கிறுர். இவரைக் கடலில் தூக்கிப் போட்டால் தூக்கத்திலிருப்பவர் விழிக்கப்போவதுமில்லை, நீந்திக் கரைசேரப்போவதுமில்லை. மகனோடு அமைந்து விடுவார், நாகைக்குத் தாங்களே அரசராகலாமன்றோ?

இராச ;— மகள் கமலாவுக்குத்தானே உரியதாகும்.

அமண :— இரங்கூனுக்கு நாகை நிலைமை எட்டப்போவதில்லை. கூனல் சந்திரனால் போய்ச் சொல்ல முடியாது. சூரியன் போய்ச் சொல்லமாட்டான். இச்செய்தியெல்லாம் அவனுக்கு எட்ட வகையே இல்லை. எட்டினாலும் அவர்கள் செல்வாக்கு இங்கு ஒன்றும் நடவாது. ஆதலால் அவர் இருந்ததாகவோ இருப்பதாகவோ கருத வேண்டியதே இல்லை.

இராச :— கற்கண்டாகச் சிலர் மனச்சாட்சியைக் கடித்துத் தின்கின்றனர். சிலர் அதனை ஒரு ஆறாப் புண்ணாகக்கொண்டு அஞ்சி நடுங்குகின்றனர். நான் அதனை ஒரு தெய்வமாக எண்ணுகிறேன். அதுபற்றித்தான் சிறிது.......

அமண :— மிகவும் நல்லதுதான். அத்தெய்வத்தைத் துணைக்கு அழைத்துக்கொள்ளலாம். இதோ அவருக்கும் இந்த நிலத்துக்கும் என்ன மாறுபாடு. அவரும் தூங்குகிறார். நிலமும் விழித்திருப்பதாகத் தெரியவில்லை. இதோ இக்கத்தியைப் பிடி. மூன்று அங்குலம் இதன் முனையை அவர் மார்புள் செலுத்திக் கடலுக்குச் சிற்றுணவாக்கு. பிறகு எஞ்சியுள்ள யாவரும் நம்மவராய் விடுவர். நாம் இட்ட பணி செய்வர். நமது கடிகாரமாகி நமக்கு ஒத்தே மணிகாட்டும் மக்களாவர்.

இராச :— அருமை நண்பரே, உம்மை முழுதும் பின்பற்றுவேன். தாங்கள் வஞ்சியைப் பெற்றீர். நான் நாகையைப் பெறுவேன். எனக்காகக் கத்தியை எடும். உமக்காக நான் இனி வஞ்சியின் கப்பத்தை எடுத்துவிடுவேன். இருவரும் கையில் கத்தியை எடுத்தால் நம் அன்பு ஒளிவிட்டு இணங்கி விடும்.

அமண :— இருவரும் கத்தியை எடுப்போம்; வீசுவோம். ஒன்று கோவிந்தன் மேலும்படட்டுமே. நமது ஒற்றுமையான செயலில் அவர்களும் ஒருவருக்கொருவர் துணையாகப் போகட்டுமே. இன்பத்துக்கு—ஆக்கத்துக்கு (காத்தவராயன்—கோவிந்தமாருர் காதுடன் உனக்கு விபத்து; விழித்துக்கொள். ஒருவரும் இறக்கக் கூடாதென்பது எனது தலைவர் கட்டளை. விழி. சூழ்ச்சி செய்வோர் வீழ்ச்சியடைவர்) ஒற்றுமையென்றால், துன்பத்துக்கு அழிவுக்கும்......துடுமென்று காரியம் செய்யவேண்டும். (இருவரும் கத்தியை உருவுதல்)

கோவிந் :— ஆ, என்ன காரியம்! என்ன நாடகம்? கனவா? என் கண்கள் இப்போது என்ன செய்கின்றன?

இராசேந் :— நான் விழித்துக்கொண்டேன். ஏன்? எதற்காக நீங்கள் இருவரும் கத்தியை இவ்வாறு ஓங்கிக்கொண்டிருக்கின்றீர்கள்? உங்கள் முகத்தில் இரு தூமகேதுக்களின் தோற்றமல்லவா காண்கின்றேன். இத்துன்னிமித்தம் யாருக்கு?

இராசசிம் :— தங்களின் நிமித்தம் தங்கள் மெய்காப்பாளராய் உருவின கத்தியுடன் நிற்கின்றோம் சற்றுமுன் உண்டான ஒரு ஒலி முதலில் எங்களுக்கு அச்சத்தையும் உடனே தங்களைக் காக்கும் பணியையும் எங்களுக்குத் தந்தது. அந்த ஒலிதான் உங்களையும் எழுப்பியது,

இராசேந் :— என் காதில் அப்படி ஒன்றும் கேட்கவில்லையே? கோவிந்தமாருர் ஏதோ உளறினமைதான் என் காதில் விழுந்தது என்னை விழிக்கச் செய்தது.

இராசசிம் :— ஆ, அவ்வொலி ஒரு அரக்கனையும் அச்சுறுத்தியிருக்குமே. பூகம்ப வொலியைவிடப் பெரியதாக இருந்ததே? இத்தீவுக்கு இதுவும் ஒரு இயற்கையோ என்னவோ? கொடிய ஒலி.

கோவிந்த :— நான் ஒரு ஒலி என் காதில் கேட்டேன். அது அச்சம் தரவில்லை, அறிவுரை தந்தது. எனது விழிப்புடன் தங்களையும் விழிக்கச்செய்ய நானே கத்தினேன். கண்டேன். இருவரும்தான் காண்கின்றோமே? இவர்கள் உருவின கத்தியுடன் நின்று நம்மைக் காப்பதினும் நம் கத்தியை உருவிக்கொண்டு நாமே நம்மைக் காத்துக்கொள்வோம். (இருவரும் தத்தம் கத்தியை உருவிக்கொண்டு அவ்விடம் விட்டு அகல்கின்றனர்.

(தொடரும்)

எங்கள் பாரதி

தமிழ் நெஞ்சன்.

இன்று தமிழ்க்குலம் வாழ்ந்திடவும் – எங்கள்
இன்பத் தமிழ்மொழி வாழ்ந்திடவும்
அன்று தமிழ்ப்பணி செய்தவராம் – எங்கள்
அன்பிற் குரியதோர் பாரதியே.

நாடு விடுதலை பெற்றிடவும் – இந்த
நாடு நலமுடன் வாழ்ந்திடவும்
பாடுபட்ட எங்கள் பாரதியின் – புகழ்
பாரழிந்தாலும் அழியாதே.

நாட்டின் விடுதலை தேடவந்தார் – இந்த
நாட்டின் அறியாமை ஓட்டவந்தார்.
பாட்டில் உணர்ச்சியை ஊட்டிவிட்டார் – புதுப்
பாதை தனையுமே காட்டிவிட்டார்,

பெண்ணின் பெருமையை நாட்டவந்தார் – புதுப்
பெண்ணைப் படைக்கக் கனவுகண்டார்.
கண்ணுக் கழகான காட்சியெலாம் – அவர்
காவியத்தில் படிந்தாடுதம்மா.

தேமதுரத்தமிழ் ஓசையினை – இந்தத்
தேயமெலாம் கேட்கச் செய்துவிட்டார்,
சீமை இலக்கியம் பற்பலவும் – இங்கே
செய்திடுவீர் தமிழ் நாட்டிலென்றார்.

உண்ணத் தெவிட்டிடா ஊறுநறுஞ் – சுவை
உற்றதோர் பாட்டில் உயிரளித்தார்
எண்ணத் தொலையாத ஏற்றமுற்றார் – அவர்
எங்கள் உளத்தினில் நின்றுளிர்வார்.

பாரதியின்புகழ் பாடுவோமே – அவர்
பாடல் அமுதினை நாடுவோமே
பாரதி காட்டிய இன்பமிகும் – புதுப்
பாதை வழியினிற் செல்லுவோமே.

172ஆம் பக்கத் தொடர்ச்சி.

அதேபோன்று நானும் அழகுப் பெருந்தெய்வம் அல்லியின் முகமன்றி வேறொன்றும் காணவில்லை. இந்தப் பத்தாண்டு களில் எவ்வளவு பெரியவளாக வளர்ந்துவிட்டாள். சிற்றாடை கட்டிச் சிரிக்கச் சிரிக்கப் பேசின அவள், இப்போது சேலைகட்டு மளவிற்குப் பெரியவளாகிவிட்டாள். காலம் தன் கையிருப்பா கிய அழகெனும் சரக்கை அள்ளிக் கொட்டி அவளைத் தங்கப் பதுமையாக ஆக்கியிருந்தது. அனங்கன் தன் திறமையினைத் தையும் சேர்த்து வடித்தெடுத்த உயிர்ச் சிலையாக அவள் காட்சி அளித்தாள்.

அப்பப்பா! ஆரவாரமான பட்டினத்துப் பெண்களுக்கும் இவளுக்கும் எத்தனை எத்தனை மாறுதல்? பல பெண்களுடன் நான் பழகியிருக்கிறேன். பட்டினத்துத் தெருக்களிலே ஆயிர மாயிரம் புது முகங்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் அவர்களிட மெல்லாம் இல்லாத கவர்ச்சி இவளிடம் அமைவானேன்? பட்டினத்துப் போலி நாகரிகத்தின் வயப்படாது, பார்த்ததுமே புலனாகும் பழந்தமிழ்ப் பண்பாடு ஒளிர்கின்ற அல்லியின் வாழ்வை, என் தமிழ் நெஞ்சம் மிகவும் விருப்பியது. இரு வருக்குமுள்ள வேற்றுமையை என் மனம் எண்ண ஆரம்பித்தது. பட்டினத்துப் பெண்களில் பெரும்பாலோர் இரட்டைச் சடை பின்னியிருப்பர். செயற்கையாக நெளிந்துள்ள கூந்தலின் ஓரத் திலே மணமற்ற மலர்கள் செருகியிருப்பர். நிறைய முகத்தூளை அப்பி, நலிவுற்ற முகத்தைப் பொலிவுள்ளது போலக் காட்டுவர். வெண்மையான இதழ்களுக்கு உதட்டுச் சாயம் பூசிச் சிவப்பு தோன்றச் செய்வர். உடலுக்கு மெருகேற்றிக் கண்டார் கண் களிலே ஒரு மயக்கத்தை உண்டாக்கும் வகையிலே உடையணி வர். அவர்களின் ஒவ்வொரு செயலிலும் செயற்கையின் நிழற் கோடுகள் தோன்றும்! அவர்களைப் பற்றி என்றோ என் நண் பர்களிடையே நான் சொன்ன கவிதை ஒன்று நினைவிற்கு வந்தது.

வேற்கூர்மை கண்களிலே கருமை தீட்டி
வெண்மைத்தூள் முகத்தினிலே கனமாய் ஏற்றிக்
காற்றாடி விரைகாற்றில் பறத்தல் போலப்
கண்கவரும் நிறச்சேலை காற்றி லாட,

வேற்றுநாட்டு நாகரிகப் பொருள்க ளெல்லாம்
விலைபோட்டு வாங்கியதால் மேனி ஏற,
நாற்புறமும் விழிசுழல நகர்வாழ் நங்கை
நாணமின்றிப் பலர்பார்க்க வருவாள் போவாள்.

ஆனால் அல்லியிடம் இவைகளையெல்லாம் அறவே காணமுடியாது. இயற்கையிலே அலைபோலச் சுருண்டடரும் கூந்தல், மணமுள்ள சில மலர்கள் நிறைந்த ஒற்றைச்சடை, வட்டமான தெளிந்த முகம், குழந்தையுள்ளம் சிவந்து தோன்றும் சின்னஞ்சிறிய அழகான இதழ்கள், கவர்ச்சி மிகுந்த நீலக் கருவிழிகள், பற்கள் வெளியே தெரியாதபடி இதழ்க் கடையில் நெளிந்தோடும் புன்னகை, கட்டுடல், வளைய வளைய நடக்கும் நடை, இவையனைத்தும் தன்பால் கொண்டவள்தான் அல்லி. அமைதி, தூய்மை, பண்பு இவைகட்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இவள் எங்கே? போலி வாழ்வுபற்றி, நிலைகுலையும் பிறர் எங்கே? ஆனால் இருவருக்கும் ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. அதாவது இருவரும் தமிழ் நாட்டில் பிறந்தவர்கள். தமிழ்ப் பெண்கள்! ஆனால் மாறுபட்ட இரு வேறு சூழ்நிலைகளிலே வாழ்பவர்கள். சூழ்நிலை ஒருவரை உயர்த்தவும் செய்கின்றது. வேறொருவரைத் தாழ்த்தவும் செய்கின்றது. அதை நாடுகின்றனர் சிலர். சிலரை நாடுகின்றது அது. சிலர் அறியாமையினால் அதனுள் சிக்குண்டு தவிக்கின்றனர். சிலர் அறிந்தே அதனுள் பிடிபட்டுத் தங்கள் அறியாமையைக் காட்டிக்கொள்கின்றனர். ஒருவருடைய சிறந்த பண்பும், அறிவுத் திறனும், அவர் வாழ்கின்ற வாழ்வாலும் சூழ்நிலை அவரைத் தேடிச் சென்று அவராணை கேட்டு ஒழுகும் நிலையாலும் வெளிப்படுகின்றன.

நம் நாட்டிற்கு ஒவ்வாத மேனாட்டுப் பழக்கங்கள் பலவற்றை அப்படியே பின்பற்றி நமது பண்பாட்டிலே கறையடித்துக் காட்டுகின்ற பற்பலரின் நினைவு எனக்கு வந்தது. பட்டினத்து எல்லையிலிருந்து ஒதுங்கி, அமைதியான சிற்றூர்ச் சூழ்நிலையிலே ஆரவாரமற்ற வாழ்வு வாழும் அல்லிக்கு என் மனம் ஓர் உயர்ந்த இடத்தை அளித்தது. அல்லி....அந்தச் சொல்லிற்குத்தான் எவ்வளவு ஆற்றல்; சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தேன், பட்டினத்திலிருந்த எனது மாமாவின் வீட்டிலே வளர்ந்தேன்.

வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதிகளும் எனக்கு இயற்கையிலே இருந்தன. ஏறக்குறைய பத்து ஆண்டுகட்குப் பின்னர்தான் எனக்கு எங்கள் சிற்றூரின் நினைவு வந்தது. அதுவரை சொத்துப் பொறுப்பு முதலியவற்றை எனது மாமாவும் கணக்கரும் கட்டிக் காத்தனர். சிறு வயது நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தவிர மற்றையவெல்லாம் நினைவுத் திரையிலிருந்து நீங்கின. ஆனால் அல்லி மாத்திரம் அதிலே அழியாத அழகோவியமாக நின்று மிளிர்ந்தாள். ஊருக்குவரும்போதே அல்லியைப்பற்றிய எண்ணம் எனக்கிருந்தபோதிலும் அவளைக் காண்போம் என்ற நம்பிக்கை இல்லை, காலப் போக்கில் பருவம் வந்தபின் யாருக்காவது அவள் உரிமையாகி இருக்கலாம் என நினைத்தேன். வண்டியில் வரும்போதே எங்களூரைப்பற்றி என்னென்னவோ எண்ணங்கள் மின்னி மறைந்தன. விடிகின்ற நேரத்தில் ஊருக்குள் வண்டி நுழைந்தது. ஊருக்குக் கோடியில்தான் நான் படித்த பள்ளிக்கூடமிருந்தது ஊர் நடுவே ஒரு கோவில், நான்கு பக்கங்களிலும் அழகிய தெருக்கள். இவையன்றி ஊர்ப் பொதுமன்றம், சிறு மருத்துவமனை இவையெல்லாம் சிற்சில மாறுதல்களுடன் காணப்பட்டன. வாழ்வோடியைந்த புதுமைக் கோலங்களும் ஆங்காங்கே விரவியிருந்தன. நான் ஒருவர் கண்ணிலும் படாமல் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் முதன் முதலாக எங்களூருக்கே பெரியவரான தாத்தா கந்தசாமியாரைக் கண்டேன். அவர் அறவாழ்வின் உருவாகும் பெற்றியர். எல்லாத் துறைகளையும் முற்றும் கற்றுத் தெளிந்த சான்றோர். இல்லறமேற்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அவரது வாழ்க்கைத்துணை மறைந்ததும், அறவழிபற்றித் தனது பெருஞ் செல்வத்தைப் பொது நலத் தொண்டிற்காக வாரி வழங்கிய வள்ளல். ஊராருக்கெல்லாம் எழுத்தறிவிக்கும் இறைவன். வள்ளுவன் வரைந்த தமிழ்த் துறவி. எங்களூரே அவர் வாய்மொழி கேட்டு அதன்படி நடக்கும். சுருங்கச்சொன்னால் சிற்றூரின் உயிர் அவர். ஏனையோர் அதற்கு உடல்.

(நீளும்)

கவிதைக் கலையும் கவிஞர்களும்.

கு. சிவமணி, B. A. (Hons.)

யாப்பிலக்கணம் கற்று அதற்கேற்ப சொல்லடுக்கி எழுது வான் கவிஞனல்லன். "காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைத்தல் நன்று" என்னும் முதுமொழி இதனை நன்கு விளக்கும். அதற்காக யாப்பமைப்பின்றி மனம் போன போக்கிலே வரையறைகட்குட்படாது வாயில் வந்ததை யெல்லாம் பாடுவானும் கவிஞனல்லன். பின் கவிஞனென்பான் யாவன்? ஏனையோர் கண்டுங் காணாது செல்லும் பொருட்களி னுள், இயற்கை மறைத்து வைத்திருக்கும் வியப்புக்களைத் தன் னறிவாலறிந்து, கற்பனை நயத்தோடு கலந்து, எல்லைக்குட்பட்ட சொல் வளமும் கருத்துச் செறிவும் இயல்பாக ஒன்ற, இதய வுணர்வைப் பிழிந்து எவனொருவன் படைக்கின்றானோ அவனே சிறந்த கவிஞனாவான். கவிஞனெப்படிப்பட்டவன்? அவன் ஏன் பாடவேண்டும்? அப்படிப் பாடிய பாட்டின் விளைவென்ன என்றிவை போன்ற வினாக்கட்கெல்லாம் ஷெல்லி என்பார்,

"கவிஞன், இருளிலே யிருந்து இனிமை ஒலிகளுடன் அதன் தனிமையை உற்சாகப் படுத்துதற்குப் பாடுகின்ற இராப் பாடி ஆவான். எப்பொழுது, ஏன் என்று அறியாதே, மனம் இழைவும் குழைவும் உணர, கண்ணிற்குத் தெரியாத பாடகனின் பண்ணால் மயங்குகின்ற மக்கள் அவனுடைய பாடலைக் கேட் பவராயிருக்கின்றனர்" 1.

---

1. "A poet is a nightingale, who is sits in darkness and sings to cheer its own solitude with sweet sounds, his auditors are as men entranced by the melody of an unseen musician, who feel that they are moved and softened, yet know not whence or why"

— P. B. Shelley.

என்று சொல்லும் சுருக்கமான ஆனால் அழகான விடை நன்றாக யிருக்கின்றது.

கவிஞர்கள் மாறுபட்ட காலங்களில், வேறுபட்ட சூழ்நிலை களில் பாடுகின்றனர். பெரும்பாலும் கவிதை அமைதியில் பிறக்கின்றது. ஆரவாரத்தில் எழுவதில்லை. தனிமையி லமர்ந்து ஏதாவதொன்றை எண்ணிக் கொண்டிருப்பவரைப் பார்த்து, "என்னையா? தனிமையிலினிமையா? என்று பலர் கேட்பதை நாம் அறிவோம். அப்படிக் கேட்பதனுட்பொருள் கவிஞராகின்றீரோ?' என்பதாகத்தானிருக்க வேண்டும். ஏனென்றால் தனிமையில் துன்பமுறுவோர்தான் மிகப் பலர் அந்தத் தனிமையே கவிஞர்கட்கு இனிமை பயக்கும். எழுச்சி மிகும் கவிதைகளைத் தோற்றுவிக்கும். மாறுபட்ட காலங்களில் வேறுபட்ட சூழ்நிலைகளில் கவிஞர்கள் பாடுகின்றனர். ஆகவே அவரவரின் உள்ளநிலைக் கேற்ப கவிதைகள் பற்பல கருத்துக்கள் கொண்டு மிளிர்கின்றன. பாக்களின் யாப்பமைப்புக் கேற்ப நம் பண்டைச் சான்றோர் செய்யுட்களை வகைப்படுத்தியுள்ளனர். அதைவிடுத்து பொதுவான பொருட்சிறப்பு நோக்கி, கவிதை களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

(1) பொழுது போக்கிற்குதவுபவை.
(2) எழுச்சி தருபவை
(3) அறிவுரை அளிப்பவை
(4) அறிவுரையுங் கலையுணர்வு மொருங்கே கொடுப் பவை என்பன.

பொழுது போக்கிற்காகப் படிக்கப்படும் கவிதைகள் மிக எளிமையானவை. அவைகளைப் படித்தற்கு ஆழ்ந்த மதிநுட்பம் தேவையில்லை. படித்தவுடன் எளிதில் புரிந்துகொள்ளுபவை யாக அவை அமையும். ஒழுங்கான சொல்லொலி அமைப்பே அவைகளில் சிறப்பிடம் பெறுகின்றது. ஏனைய கவிதைகளிற் காணும் வரையறைகளோ அல்லது நல்ல சொற்களோ அவை களில் பெரும்பாலும் காண முடியாது. பேச்சு வழக்குச் சொற் களே மிகுதியுங் காணலாம். சோர்வுற்றவுள்ளம் அவைகளைப் படிப்பின் தன்னுள் மகிழ்கின்றது. ஆனால் படித்த கருத்துக்கள் மனத்தில் என்றும் நிலைத்து நிற்பதில்லை. புத்தகம் கண்ணி

லிருந்து மறைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அதன் கருத்தும் மறைந்துவிடுகின்றது. ஆனால் உறுதியான நினைவாற்றலுள்ள உள்ளமோ அதையும் ஓடிவிடாமல் பிடித்துத் தன்னுள்ளடக்கிக் கொள்கின்றது. பெரும்பாலான நாட்டுப் பாடல்கள், கும்மி, கோலாட்டம் இன்னுமிவைபோன்ற சிற்றூர்ப் பகுதிகளில் பாடப்பெறும் பாடல்களனைத்தும் இப்பிரிவிலடங்கும். எடுத்துக் காட்டாக, பெண்ணொருத்தி சொல்லுவதாக அமைந்த ஒரு நாட்டுப் பாடலைக் காண்போம்.

அவள் அழகு நலம் சிறக்கப் பெற்றவள், அவள் செல்லு மிடமெல்லாம் தொடர்ந்து அவளைச் சுற்றிச் சுற்றி வருகின்றான். பழகுதற்கு இனிமையான ஓராடவன். அவன் வேறு அயலானு மல்லன். மணவுரிமைகொள்ளும் மைத்துனன். பின்னர் அவன் வரவை அவள் விரும்பாததேன்? ஏன் தெரியுமா? முறை யுடையானாயினும் அவன் வருகின்ற நெறிதான் தவறு. அப்படி வந்தவன் வாளாயிருக்காது குறும்புகள் சில செய்திருப்பான் போலுள்ளது. அவளோ பெண். அதிலும் நாணமிக்க நங்கை அவளுக்கு வெட்கமாக யிருக்காதா? அது போகட்டும்! ஆட வன் என்றால் அவனுக்கும் ஓரளவிற்காவது வெட்கம் வேண் டாமா? எல்லையற்றுச் செல்கின்ற அவனது செயல்கண்டு அவள் வெறுக்கவில்லை. ஏனென்றால், அவனைக் கணவனாக அடைதற்கு அவளுக்கும் நிறைய ஆசை உண்டு. ஆகவே அவள், 'நேரான வழியில் வா மச்சான்' என்று சொல்லியனுப்பினாள். அதாவது தன்னை மணந்துகொள்ளும்படிக் குறிப்பாலுணர்த்துகின்றாள். ஆனால் அவனோ, அவள் சொல்லை மதிக்காது மீண்டும் மீண்டும் பழைய முறையே கைக்கொண்டு, வேலியோரத்தில் காதலருள் வேண்டி வெட்கத்தை விட்டுக் காத்து நிற்கின்றான். அவன் செயல் குறித்து அவள் நகையாடுகிறாள்.

பட்டாளத்தான் கத்தியிலே பளபளப் பில்லே!
பண்டாரத்தான் தோப்பினிலே பூவுமே யில்லே!
நேத்தறுத்த சாவலிலே ரெத்தமு மில்லே!
என்புத்தி கெட்ட மச்சானுக்கு வெட்கமு மில்லே!

என்று சொல்லும்போதே 'என் மச்சான்' என்று சொல்லி அவனுக்குந் தனக்குமுள்ள உரிமையையும் உறவையும் வெளிப்

படுத்துகின்ருள். அடேயப்பா! அவளது வெட்கமற்ற மச்சானைக் குறிக்கும்போது அவளுக்குத் தெரிந்த பொருள்களுடன் சேர்த்து அழகுபடக் கூறுகின்ருள். பளபளப்பற்ற பட்டாளத்தான் கத்தி, மலரற்ற தோட்டம், இரத்தமற்ற சேவல் இவைகளோடு ஒப்பிட்டுப் பேசுகின்ருளந்தத் துடுக்குக்காரி! இந்த நாட்டுப் பாடலைப் படிக்கும்போது உள்ளம் உவகை பெறுகின்றது. பொழுது போக்கிற்கு மிகவும் துணையாகவுள்ளது.

இனி எழுச்சிதருங் கவிதைகளை எடுத்துக் கொள்வோம். இன்பதுன்ப நெஞ்சங்கட்கிடையே எழுகின்ற உணர்ச்சிப் போரை இவை விளக்குவன. இவைகளைப் படிக்கும்போது படிப்போர் மனத்திலே அப் பாடல்களின் தன்மைகட்கேற்ப, பல்வேறுபட்ட உணர்வுகள் எழும்புகின்றன. நாட்டுப் பாடல்களைவிட சிறப்பும் பொருட்செறிவுங் கொண்டு இலங்குவன. வரையறைக்குட்பட்டுச் சிறந்த சொற்கள் கொண்டு பாடப்படும் பாடல்களாதலின் இனிமையும் வேகமுங் கொண்டு இதயத்தைத் தொடுகின்றன. இவை, பொருட்களிருக்கின்ற நிலையை அப்படியே விளக்குவன. அந்த நிலை விளக்கம் செய்யுள் வடிவம் பெறுகின்றது. கவிஞன் கண்ட காட்சி கவிதையாக மலர்கின்றது. மேற்கோளாகப் பாண்டியன் காதலி தனது தோழியிடம் சொல்லுவதாக அமைந்த ஒரு செய்யுளை எடுத்துக்கொள்வோம் வாட்சிறப்பு ஓங்க, பகைநிலத்தே மாற்ருரின் ஆற்றலடக்கிப் புகழ்கொண்ட தமிழ் மறவன் மாறன். அவனுக்குக் காதலி அவள். அவன் புறச் செயல் கருதி அவளை விட்டுப் பிரிந்தபோதெல்லாம், அவனைப்பற்றி அவள், "மாறன் கருணையற்றவன் என்னிறை கவர்ந்து செல்லு மறிவிலி" என்றெல்லாம் ஆயிரம் பேசினுள். ஆனல் அவன் எதிர்ப்பட்டபோது அவன்மேல் சுமத்திய பழிகளையெல்லாம் மறக்கின்ருள். மறப்பதோடுமட்டுமன்று, அவனது மணிமார்பைத் தழுவத் துடிக்கின்ருள். அவள் அவ்வாறு செய்யமுடியாதவாறு இடையிலே தடைஒன்று தோன்றுகின்றது. அந்தத் தடையுடைத்துச் செல்வதற்கு அவளுக்குத் துணிவில்லை. ஏனென்னில் தடையாக இருப்பதோ அவளுடன் பிறப்பு. உடன்பிறப்பைக் கொல்லுதற்கு நேர்மையுடையார் எவருக்காவது நெஞ்சம் துணியுமா? மாறனையணைய

வொட்டாது தடுக்குமந்தத் தடைதான் அவளுடன் கூடப் பிறந்த நாணம். நாணம் அவள்பால் மேலிட செயலற்று நிற்கின்றாள் அச் சேல்விழியாள். இந்நிகழ்ச்சியை மறுநாள் தன் தோழிக்குச் சொல்லி மகிழ்கின்றாள். அதை ஒட்டுக்கேட்ட கவிஞர், அவள் கூறுமாறே நமக்குச் சொல்கின்றார்.

> "மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
> காணுக்கா லாயிரமுஞ் சொல்லுவேன் – கண்டக்கால்
> பூணாகந் தாவென்று புல்லப் பெறுவேனோ
> நாணோ டுடன்பிறந்த நான்."

முத்தொள்ளாயிரச் செய்யுளான இதைப் படிக்கும்போதே நா இனிக்கிறது. நாணத்தைத் தன்னுடன் பிறப்பாய்க் கொண்டொழுகிய அந் நங்கையின் பெற்றியை எண்ணி, நெஞ்சம் அவளைத் தானே வாழ்த்துகிறது. இதேபோன்று, காதல்; வீரம், இன்பம், துன்பம் போன்ற பற்பல சுவைகளைச் சொல்லும் செய்யுட்களெல்லாம் படிப்போர் எண்ணத்திலே அப் பாடல்களின் தன்மைகட்கேற்ப உணர்வுகளை யெழுப்பி, நிலை பெறுகின்றன. அவைகளைப் படிக்குந்தோறும் நெஞ்சந் தனக்குள்ளேயே மகிழ்கின்றது. இலக்கியப் படைப்பின் திறமுள்ளி வியக்கின்றது.

அடுத்து, அறிவுரை தரும் கவிதைகளை ஆய்வோம். பொழுது போக்குதற்காகப் படிக்கும் கவிதைகளைப்போல, அறிவுரைக் கவிதைகளை அவ்வளவு எளிதில் படித்துவிட முடியாது. ஏனெனில் அவையெல்லாம் அறிஞர்களின் சிந்தனைத் தேக்கத்திலிருந்து பெருகிப் பாயும் ஆய்வுப் படையல்கள். அவைகளைப் படிப்பதற்குமுன், ஓரளவாவது அடிப்படை அறிவு வேண்டும். அஃதில்லார் எழுத்தெண்ணி வாயளவில் படித்தல் கூடும். படித்ததன் பயன்பெற விழைவோர் நெஞ்சாலுணர்ந்து படித்தல் வேண்டும். அப்பொழுதுதான் படிப்பும் சிறக்கும், பண்பும் பெருகும். அறிவும் வளரும். இப்பகுதியினுள்ளடங்கும் கவிதைகள் உலகப் பொதுச் சட்டங்களை எடுத்துரைப்பன. சட்டங்களெனப் படுதலின் அவை மக்கள் வாழ்வை அவர் மனம் சென்ற வழியெல்லாம் செல்ல விடாமல் கட்டுப்படுத்துகின்றன. அவை

களுள் கட்டுப்பாடு மிக்க அறிவுரை சிறந்து கலையுணர்வு அருகித் தோன்றும் நீண்டநேரமவைகளைத் தொடர்ந்து படிப்பின் ஓரளவு சலிப்பும் ஏற்படும். இலக்கியம் படிப்பது போன்ற இனிமையைக் காண முடியாது.

அறிவுரை எப்போது பிறக்கின்றது? உலகப் பொருட்களினின்பதுன்பங்கள், நிலையாமைபோன்ற பற்பலவற்றை அறிஞன் காண்கின்றான். கண்டுமனம் நோகின்றான். சில வாழ்நாள் உடைத்தாய இவ்வுயிர் அது பொன்றுவதற்குள் யாதேனுமொரு சிறப்பான செயல் செய்து மேம்பாடடையவேண்டும். அதை விடுத்து, விருப்பு வெறுப்புக்கட்கிடையே யகப்பட்டு அஃது அலைக்கழிக்கப்படுவதை அவன் அறிகின்றான். "இவ்வுலக வின்பமொரு சிலர்க்கே உரிமையாகி, பெரும்பாலோர்க்கு அடைய முடியாப் பொருளாயிருப்பதன் காரணமெதுவாக இருக்கமுடியும்? எல்லோருடைய வாழ்விலும் துன்பங்கள் குறைந்து இன்பமொன்றே நிறைதற்குரிய வழிகள் எவை? துன்பமற்ற வாழ்வை மனிதனடைதற்குத் தடையாயிருப்பவை எவை? பிறப்பிலே பேதம் பேசி, பெரும்பிளவைத் தங்கட்குளுண்டாக்கித் திரியும் மக்கள், நாடோறும் வாழ்வில் போரிடுவது எதனால்? என்றிவைபோன்று பற்பல வினாக்களை அவனுள்ளம் எழுப்புகின்றது. விடை தேடுகின்றான் ஆய்வு துணை செய்கின்றது. வேதனைகளைத் தொலைத்தற்குரிய வழிகளை அறிவு கூறுகின்றது. 'மக்கள் சென்ற பாதை தவறு. ஆகவே, அவர் வாழ்வில் துன்பம் குவிந்தது. கடமையை மறந்ததன் விளைவே துன்பம். மறைந்துபோன அவர் கடமைகளை நீ நினைவுபடுத்தி அவர்களை நல்வழியில் நடக்கச்செய்'' என்று அவரறிவு ஆணையிடுகின்றது. ஆகவே, அறிஞன் அவனது கல்வி, கேள்வி, அநுபவம் ஆகிய மூன்றாலும் தெளிந்த அறிவின் துணைகொண்டு, மக்கள் நலம்பெறல் வேண்டுமென்ற உள்ளமுந்துதலினாலெழுந்த எண்ண அலைகளை எழுத்தாக வடிக்கின்றான். அறிவுரை பிறக்கின்றது. அதைக் கற்று நடைமுறையிலே கைக்கொள்ளும் மக்கள் அமைதி நிலவும் வாழ்வு பெறுகின்றனர். ஏனையோர் துன்பத்தின் பிடிக்குத் தப்ப முடியாது நெஞ்சொடிந்து சாகின்றனர். நீதி நிலை நெஞ்சத்தில் விளைந்த பாடல்கள் இப்பிரிவிற் சேர்ந்தவை.